# திட்டம்

## மாத இதழ்

மலர் 50
இதழ் 14

அக்டோபர் 2018
அஸ்வின் - கார்திக் 1940



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
இணை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**
துணை ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**


கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**


உதவி இயக்குநர்
**திட்டம்**
வெளியீட்டுப்பிரிவு
A Wing இராஜாஜி பவன்
பெசன்ட் நகர்
சென்னை -600 090
தொலைபேசி : 044-2446 5382


## உள்ளடக்கம்


- தலையங்கம்
- மகளிர் தலைமை மேம்பாட்டால் நாட்டுமக்கள் அதிகாரம் பெறுவர் - மேனகா சஞ்சய்காந்தி
- “தொடர் பராமரிப்பு” மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் - பிரீத்தி சுதன்
- தொழில்முனைவு மேம்பாடு மூலம் மகளிருக்கு அதிகாரம் அளித்தல் - என்.வி.மாதுரி
- அனைவரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை: இந்திய மகளிருக்கு அதிகாரமளிக்க சிறப்பான வழி - லேகா சக்ரவர்த்தி, பியூஷ் காந்தி
- இஸ்லாமியப் பெண்கள் உரிமைகளும், சவால்களும்! - சயீதா ஹமீது
- பழங்குடியினப் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்: பிரச்சினைகளும் செல்லவேண்டிய பாதையும் - தீபக் கந்தேகர்
- பெண்களும் பொருளாதாரக் குடியுரிமையும்: இந்தியாவில் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான தேடல் - பிருந்தா விஸ்வநாதன், சஞ்சனா சர்மா
- மகளிருக்கு அதிகாரமளித்தல் : சட்டவிதிகள் - கீதா லுத்ரா
- பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் தமிழ்நாட்டில் ஒரு இயக்கமாக செயல்பட்டுவரும் சுய உதவிக்குழுக்கள் - கண்ணகி பாக்கியநாதன்
- மகளிர் மேம்பாட்டிற்கான தமிழ்நாடு அரசின் திட்டங்கள் ஒரு பார்வை - வே. அமுதவல்லி
- செய்தித்துளிகள்



Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

# பெண்ணின் நல்லாள்

பெண் என்பவள் முழுமையானவள். படைத்தல், பேணி வளர்த்தல், மாற்றங்களைக் கொணர்தல் ஆகிய சக்திகள் பெண்களுக்குள் இருக்கின்றன. நினைவிற்கு எட்டாத காலம் முதற்கொண்டே நமது இந்தியப் பண்பாட்டில் பெண் சக்தி என்ற கருத்தியல் இருந்து கொண்டே இருக்கிறது. துர்கா, காளி என்று கிழக்கு இந்தியப்பகுதியிலும், மகிஷாசுரமர்தினி, பகவதி என்று கேரளாவிலும் இன்னும் பல பெயர்களில் இந்தியா முழுவதிலும் தாய் தெய்வ வழிபாடு நடைபெறுகிறது. ஆண்களால் செய்ய இயலாததை செய்துமுடிக்கும் சக்தியின் மறுவடிவமாக அவள் எப்போதும் சித்தரிக்கப்படுகிறாள்.

எனினும், இது சித்திரத்தின் ஒரு பக்கம் மட்டுமே. மறு பக்கத்தில் தங்கள் வாழ்க்கையைப் பற்றி குரல் எழுப்ப இயலாத நிலையில் பெண்கள் இருந்துவரும் கடுமையான காட்சியும் நிலவுகிறது. குடும்ப விஷயங்களில் முடிவுகள் எடுக்கவும் கூட அவளுக்கு அனுமதியில்லை. ஆண்களுக்கு அடிபணிந்து வாழும் நிலையில் வாழ்நாள் முழுவதும் பெண்கள் இருக்கின்றனர். அவர்களின் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை, அவை ஊக்குவிக்கப்படுவதுமில்லை. ஒரு தாயாக, மனைவியாக, மகளாக அவளுக்கு இருக்கும் பொறுப்புகளில் அவளது சங்கடங்கள் மூழ்கடிக்கப்படுகின்றன.

பெண்கள் வாழ்க்கையின் இத்தகைய நிலை சமீப காலங்களில் பெருத்த அளவில்




மாற்றம் கண்டு வருகிறது. நவீன காலத்துப் பெண் நான்கு சுவர்களுக்குள் அடைந்து கிடப்பதில்லை. வீட்டிலும், வேலைபார்க்கும் இடத்திலும் பெண்கள் தங்களின் மதிப்பை உணர்ந்து வருகிறார்கள். பாலின சமத்துவத்தைக் கோரிவருகிறார்கள். தொழில் நுட்பம், விண்வெளி அறிவியல், விளையாட்டு, ராணுவம் என எந்தத் துறையிலும் தங்களுக்கிருந்த கண்ணாடித்தடுப்புகளை அவர்கள் தகர்த்து விட்டனர். நகரங்களிலும், கிராமங்களிலும் ஏறத்தாழ ஒவ்வொரு ஐந்து பெண்களிலும் ஒருவர் தொழில்முனைபவராக இருக்கிறார்.

சமீப ஆண்டுகளில், இத்தகைய மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக அரசாங்கம் குறிப்பிடத்தக்க பணியை செய்திருக்கிறது. கருவில் இருக்கும் பெண் சிசுவைப் பாதுகாப்பது தொடங்கி, பணிபுரியும் இடத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது வரை எண்ணற்ற பல முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. பிரதமந்திரியின் மாத்ருவந்தனா யோஜனா திட்டம் பெண்களுக்கு கர்ப்ப காலத்திலும், பாலூட்டும் காலத்திலும் பொருளாதாரப்பாதுகாப்பை வழங்குகிறது. பேறு கால ஆதாய சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டு பணிபுரியும் பெண்களுக்கு 26 வார காலத்திற்கு பேறு கால விடுப்பு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. பெண் குழந்தையைப் பாதுகாப்போம், பெண் குழந்தையைப் படிக்கவைப்போம், பெண் குழந்தைகளின் கல்விக்கும், திருமணத்திற்கும் உதவக்கூடிய சுகன்யா சம்விருதி யோஜனா திட்டம் போன்றவை பெண் குழந்தைகளின் பிறப்பிற்கும், கல்விக்கும், பொருளாதாரப் பாதுகாப்பிற்கும் வகை செய்கின்றன. ஆரோக்கியமுள்ள பெண்களால் தான் சக்தி படைத்தவர்களாக இருக்க முடியும். இதனை உறுதி செய்யும் வகையில் ஆயுஷ்மான் பாரத் திட்டம், தேசிய ஊட்டச்சத்துத்திட்டம், சமையல் எரிவாயுத் திட்டம் போன்ற திட்டங்கள் கொண்டுவரப்பட்டு இந்தியப் பெண்களின் சுகாதார, ஊட்டச்சத்து தேவைகள் மீது கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

தொழில் முனைவு வளர்ச்சித்திட்டங்கள் பெண்கள் தங்கள் சொந்தக்காலில் நிற்பதற்கு உதவி இருக்கின்றன. பிரதம மந்திரியின் முத்ரா திட்டம், எழுந்து நில் இந்தியா, தொழில் தொடங்கிடு இந்தியா, தேசிய ஊரக வாழ்வாதாரத்திட்டத்தின் கீழ் உள்ள சுய உதவிக்குழு திட்டம் ஆகியவை பெண்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரம் பெறவும், பொருளாதாரப் பாதுகாப்பை அடையவும் வகை செய்திருக்கின்றன. பிரதமரின் ஜன்தன் யோஜ்னா திட்டம் பெண்களின் நிதிசார் உள்ளடக்களில் குறிப்பிடத்தக்க பணியை செய்திருக்கிறது.

பெண்களுக்கு அதிகாரமளித்தல் எனும் போது அனைத்து இடங்களிலும் பெண்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும் என்பது செயல்திட்டங்களில் உயர் முன்னுரிமை யைப் பெறுகிறது. பணிபுரியும் இடங்களில் பாலியல் தொல்லைக்கு எதிரான சட்டம், இணையம் வழியாக புகார் அளிக்கும் நடைமுறை, பெண்களுக்கு உதவி தொலைபேசி எண் 181, ஒற்றை நிறுத்த மையங்கள், ஆபத்தில் இருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட பொத்தானை அழுத்தி விரைந்து தகவல் தெரிவிக்கும் முறை இவை அனைத்துமே அதிகாரம் பெறுவதை நோக்கிய பெண்களின் பயணத்தில் பெருமளவு துணைபுரியக்கூடியவை. இஸ்லாமியப்பெண்களின் முன்னேற்றத்தில் முத்தலாக் முறை தடையாக இருந்து வந்தது. இந்தப்பழக்கத்தை ஒழிப்பதற்கான முத்தலாக் தடுப்பு மசோதா ஏற்கனவே மக்களவையில் நிறைவேறிவிட்டது.

இந்தியாவின் மக்கள்தொகையில் ஏறத்தாழ சரிபாதியாக இருக்கும் பெண்கள் இல்லாமல் வளர்ச்சிக்கான பாதையில் வெற்றிகரமாக பயணித்து விட இயலாது. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட பல்முனை, பலதிசை அணுகுமுறை தேசத்தை வளர்ச்சிப்பாதையில் வெற்றிகரமாக அழைத்துச் செல்லும்.

**- ஆசிரியர்**

# மகளிர் தலைமை மேம்பாட்டால் நாட்டுமக்கள் அதிகாரம் பெறுவர்

- மேனகா சஞ்சய்காந்தி

இந்தியாவின் மக்கள் தொகையில் பாதி பேர் மகளிர் ஆவர். கடந்த பல ஆண்டுகளாக மகளிர் பொது வாழ்வில் அதிகமாக காணப்படுகிறார்கள் - அலுவலகங்களில் பணியாற்றுபவர்களாக, அரசு அதிகாரிகளாக, இந்தியாவின் சார்பில் உலக விளையாட்டுப் போட்டிகளில், அரசியலில், பன்னாட்டு நிறுவனங்களில் இப்படி பலப்பல. இந்த நல்ல மாற்றம் முன்பு எப்போதும் இல்லாத அளவு வேகமாக வளர்ந்து வருகிறது.

சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள மகளிர் மேம்பாடு சார்ந்த முன்னேற்றங்கள் எனக்கு மிகுந்த நம்பிக்கையை ஊட்டுகின்றன. இந்திய விமானப்படையில் இப்போது முதன்முதலாக, மகளிர் விமான ஓட்டிகள் பணியமர்த்தப் பட்டிருக்கிறார்கள். இராணுவத்திலும் போரில் ஈடுபடக்கூடிய பணிகளில் மகளிரை ஈடுபடுத்த நல்ல வாய்ப்பு உள்ளது. ஒலிம்பிக், காமன்வெல்த் போட்டிகள் மற்றும் கிரிக்கெட் உள்ளிட்ட பிற பல பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் இந்திய மகளிர் பிரமாதமான சாதனைகளை செய்துள்ளார்கள். இந்தியாவின் செவ்வாய் கிரகத்திற்கான வெற்றிகரமான மங்கல்யான் திட்டத்திலும், ஒரே ஒரு ராக்கெட் மூலம் 104 குறு செயற்கைக்கோள்களை நாம் விண்வெளியில் செலுத்தியதிலும் கூட அறிவியல் நிபுணர்களின் குழுவில் மகளிர் இடம் பெற்றிருந்தனர். இந்த மகளிர், தற்போது இந்தியாவில் எதிரொலிக்கும் "பெண் குழந்தையைக் காப்போம் பெண் குழந்தையைப் படிக்க வைப்போம்" என்ற முழக்கத்திற்கு தகுந்த முன் மாதிரியாக விளங்குகிறார்கள்.

பள்ளிக்கல்வியில் இந்தியா ஆண், பெண் இருவருக்கும் சமமான வாய்ப்பளிப்பதில் வெற்றி பெற்றுள்ளது. மருத்துவம், சட்டம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், மேலாண்மை போன்ற சிறப்புப் படிப்புகளிலும் பெண்களின் பங்கு உயர்ந்துவருகிறது. பெண்களின் கல்வியறிவு 1981இல் ஒன்பது சதவிகிதமாக இருந்தது, 2011இல் 61 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதுவே மிகப்பெரிய மாற்றமாகும்.



இன்று பணிசெய்யும் இடங்களில் இந்தியாவில் நான்கில் ஒருவர் பெண்ணாக இருக்கிறார். தொழில்நுட்பம் மிக்கதாகவும், சிக்கலாகவும் இருக்கும் வேலைகளிலும் தற்போது அதிக அளவில் பெண்கள் பணி செய்கின்றனர். பட்டம் பெற்ற பொறியாளர்களில் மூன்றில் ஒரு பங்கு இப்போது பெண்கள். ஆரம்ப சுகாதாரப் பணிகளில் வேலை செய்பவர்களில் நான்கில் மூன்று பேர் மகளிர். மருத்துவ ஆய்வு, வங்கித்துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் பட்டயக் கணக்காளர்களில் மூன்றில் ஒரு பங்கு மகளிரே. தொழில் முனைவுத் துறையில் ஐந்தில் ஒருவர் பெண்கள். இப்படி, அதிக அளவில் பெண்கள் எல்லாத் துறைகளிலும் இருப்பதால் தனியார் மற்றும் பொதுத்துறைகளில் அவர்களின் பேரம் பேசும் திறமை மிகுந்துள்ளது. அரசியலிலும் கூட அவர்களின் எண்ணிக்கை முன்பை விட இப்போது அதிகமாக உள்ளது. பஞ்சாயத்துக்களில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் 46 சதவிகித மக்கள் பெண்கள். இப்படி, கிராம மட்டத்தில் 13 இலட்சம் பெண்களுக்கு மேல் பொறுப்பில் இருப்பதால் நம் நாட்டின் சூழல் பெரிதும் மாறிவருகிறது. உதாரணமாக, 1957ஆம் ஆண்டின்

பொதுத் தேர்தல்களில் 45 பெண்களே போட்டியிட்ட நிலைமையில் 2014இல் 668 பெண்கள் போட்டியிட்டனர்.

சுகாதாரத்துறையில், நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டு பெண்களின் சராசரி ஆயுள் எதிர்பார்ப்பு 1950-51இல் 31.7 ஆண்டுகளாக இருந்தது, 2016இல் 70ஆக உயர்ந்துள்ளது. தற்போது, குழந்தை பிறப்பது பெரும்பாலும் மருத்துவமனைகளிலேயே தவிர வீடுகளில் அல்ல. 2014-15இல் 79 சதவிகிதம் குழந்தைகள் பிறப்பு மருத்துவமனைகளில் நடந்தது. இதனால், குழந்தை மற்றும் தாயின் உடல்நலம் பாதுகாக்கப்படுகிறது. 2001-03 முதல் 2011-13 கால கட்டத்தில் குழந்தை பிறக்கும் போது, தாயின் இறப்பு, 50 சதவிகித்திற்கு மேல் குறைந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் மகளிரை உள்ளடக்கிய நிதிசார் துறைகளிலும் அவர்களின் பங்கு உயர்ந்துள்ளது. பெண்களே தனித்து செயல்படுத்தும் வங்கி அல்லது சேமிப்புக் கணக்குகள் 2005-06இல் 15 சதவிகிதம் இருந்தது, 2015-16இல் 53 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

இப்படிப்பட்ட முற்போக்கான நிலைமைகள் இருந்தாலும் பெண்களின் உயிருக்கும், சுதந்திரத்திற்கும் நம் நாட்டில் இன்று பல ஆபத்துக்கள் உள்ளன. தினம் தினம் பெண்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. அதே சமயம், வீட்டிலுள்ள மற்ற குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும், திருமணத்திற்காகவும் பெண்கள் பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிடுகின்றனர். இன்றும் வீடுகளிலும், விவசாயத்திலும் கூலியில்லா தொழிலாளர்களாகவே



பெண்கள் பலர் இருக்கின்றனர். தற்போது, நிதியைக் கையாள்வதில் அதிக ஆளுமை இருந்தாலும் வீடு மற்றும் வேலை சார்ந்த முடிவுகளை எடுப்பதில் அவர்களுக்கு சமமான வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. இது, இன்றைய நிதர்சன உண்மை. பெண்களுக்கு அதிகாரமளிக்க வேண்டும் என்று நினைத்தால், இப்படிப்பட்ட கொடுமைகளையும் புறக்கணிப்புகளையும் நாம் கண்டறிந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மகளிரை பாதிக்கும் பிரச்சினைகளை ஒட்டுமொத்த சமுதாயத்தின் பிரச்சினையாக இன்றைய அரசு கருதுகிறது. எப்பாடுபட்டாவது ஆண், பெண் இருவருக்கும் சம உரிமையை வழங்க நினைக்கிறது. பெண்களுக்கு அதிகாரமளிக்கப் படாவிட்டால் நாட்டில் எந்த ஒரு முன்னேற்றமும் நிலைக்காது. மகளிருக்கு சமமான வாய்ப்பு களையும் அவர்களுக்கு ஆதரவான பாதுகாப்பான சூழ்நிலையோடு மேம்பாடுகளை வழங்க அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பல சட்டங்கள் தீட்டப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பெண்களுக்கு கல்வியிலும், முறையான வேலை வாய்ப்புகளிலும் அவர்களின் உடல்நல, மனநல பலத்திலும் பொதுவாழ்க்கை மற்றும் அரசியலில் ஈடுபடவும் சமுதாயத்தில் பாதுகாப்பான சூழ்நிலைகளை உருவாக்கவும் குடும்பத்திலும் வெளியேயும் சம உரிமைகள் பெறவும் ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

பிரச்சினைகளின் அடிப்படைக் காரணங்களை களைந்தெறியவும், மக்களின் மனநிலையை மாற்றும் வகையிலும் இந்தியாவின் எல்லா மாவட்டங்களிலும் "பெண் குழந்தையைக் காப்போம் - பெண் குழந்தையைப் படிக்கவைப்போம்" என்ற விழிப்புணர்வு இயக்கம் துவக்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகள் மற்றும் மகளிர் சார்ந்த மக்களின் எண்ணங்களில் மாற்றம் வராதவரை மகளிருக்கு அதிகாரமளிக்கும் முயற்சிகள் வெற்றியடையாது.

இதோடு கூட 2015இல் பெண் குழந்தை மேம்பாட்டுத்திட்டம் ஒன்று துவங்கப்பட்டு அதில் பெண் குழந்தைகளின் பெயரில் முதலீடு செய்யப்படும் சிறு தொகைகளுக்கும் உயர் வட்டி விகிதம் அளிக்கப்படுகிறது. இந்தத் தொகையை பெண் குழந்தையின் 18வது வயதிலிருந்து அவளுடைய உயர் கல்விக்கும், மற்ற செலவினங்களுக்கும்

பயன்படுத்தலாம். இப்படிப்பட்ட கணக்குகள் ஏற்கனவே 1.39 கோடி பெண் குழந்தைகளின் பெயரில் துவக்கப்பட்டு ரூ.25979 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

பெண்களுக்கு அதிகார மளிப்பதற்கும், அவர்களுக்கு பொருளாதார அதிகாரமளிப்பதற்கும் அனைத்து நிதிசார் நிலைமைகளிலும் அவர்களுக்கு பங்களிப்பு வேண்டும். கடந்த சில ஆண்டுகள் முன்பு வரை ஒரு வங்கிக்கணக்கை துவக்குவது பெரும்பாடாக இருந்தது. ஆனால், பெண் குழந்தைகள் மேம்பாடு திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் ஜன்தன் திட்டம் மூலம் இதுவரை வங்கிச்சேவை பெறாதவர்களுக்குகூட வங்கி வசதிகள் அளிக்க முடிந்திருக்கிறது. ஜன்தன் திட்டத்தில் 16.42 கோடி மகளிர், வங்கிக் கணக்கைத் துவக்கியுள்ளனர். மொத்த சேமிப்புக் கணக்குகளில் மகளிர் கணக்கின் பங்கு 2014இல் 28 சதவிகிதம் இருந்தது, 2017இல் 40 சதவிகிதமாக உயர்ந்துள்ளது (40 வங்கிகள் மற்றும் கிராமப்புற வங்கிகளிலிருந்து பெற்ற தகவல்களின்படி). பல ஆண்டுகளாக மகளிர் உள்ளிட்டவர்களுக்கு நிதிசார் சேவைகள் வழங்க வேண்டும் என்ற நமது எண்ணத்தில் இது ஒரு பெரிய வளர்ச்சியாகும்.

பிரதம மந்திரி முத்ரா திட்டத்தின் கீழ் மகளிருக்கும், சிறுதொழில் முனைவோருக்கும் ஜாமீன் மற்றும் உத்தரவாதம் இன்றி அரசு கடன் வழங்குகிறது. இதன் மூலம், இதுவரை 9.81 கோடி மகளிர் பயன் பெற்றுள்ளனர்.

தேசிய ஊரக வாழ்வுரிமை இயக்கத்தின் கீழ் 47 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக்குழுக்கள் துவக்கப்பட்டு அவர்களுக்கு சுழல் நிதியாக ரூ.2,000 கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் மட்டும் நம் அரசு, இந்தத் தொகை விநியோகத்தில் 37 சதவிகித உயர்வு கண்டுள்ளது.

மகளிர் பணியாளர்களை மேம்படுத்த திறன் வழங்கல் ஒரு முக்கிய நிகழ்வாகும். பிரதம மந்திரி திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ் பல இளைஞர்கள் வேலைவாய்ப்பு சார்ந்த திறன்களைப் பெற்றிருக்கிறார்கள். இதுவரை சான்றிதழ்கள் வழங்கப்பட்டதில் 50 சதவிகிதம் பெண்களே.

மகளிரை வேலையில் நிரந்தரமாக தக்க வைத்துக்கொள்ள அவர்களுக்கு மகப்பேறு கால கட்டாய விடுப்பு 26 வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவர்களுடைய மகப்பேறு காலத்தில் வேலையை இழந்து விடுவோமோ என்ற பயமின்றி பிறந்த குழந்தையை நன்கு வளர்க்கமுடியும். அமைப்பு சாராத துறைகளில் உள்ள மகளிருக்கும் இது போன்ற சலுகைகளை அளிக்க பிரதம மந்திரி மாத்ரு வந்தனா திட்டத்தின் கீழ் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. மகப்பேறு காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வேலையிழப்புக்கு ஈடுகட்ட ரூ.6000 வழங்கப்படுகிறது. இதனால், மகளிர் குழந்தை பிறப்புக்கு முன்னும், பின்னும் பயனடைந்து குழந்தைக்குப் பாலூட்டி சீராட்டி வளர்க்கமுடியும். இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 38,00,000 பயனாளிகள் பதிவு செய்துள்ளனர்.

நிறுவனங்களில் முக்கிய பெரும் பொறுப்புகளில் மகளிர் இருப்பது, மகளிரின் திறமைகளுக்கு மதிப்பளிப்பதோடு நிறுவனங்கள் மகளிருக்கு சாதகமாக விளங்கவும் உதவுகிறது. அனைத்து பொதுத்துறை, தனியார்துறை நிறுவனங்களிலும் இயக்குநர் குழு வரை உயர் பதவிகளில் பெண்களை அமர்த்துவது ஊக்குவிக்கப்படுகிறது. தற்போது, இந்தியாவில் இந்நிறுவனங்களில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட இயக்குநர்கள் உள்ளனர். இது ஒரு சாதனை அளவாகும்.

கிராமப்புற அளவில் பஞ்சாயத்து உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மகளிர் முன்னணியில் உள்ளனர். இவர்கள், சிறப்பாகப் பணிபுரிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் 18,000 பெண் உறுப்பினர்களுக்கு பயிற்சிகளை வழங்கியது. இந்த ஆண்டு மேலும் 13,000 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கு தலைமை மற்றும் மேலாண்மைத் திறன்கள் வழங்கப்படும்.

மகளிர் பணியில் சிறப்பாக செயல்படுவதற்கு பணியிடங்கள் அதற்கு சாதகமாக இருக்க வேண்டும். இதற்கு, நாங்கள் பணியிடங்களில் பெண்களுக்கு பாலியல் கொடுமைகள் (தடுப்பு மற்றும் தீர்வு) சட்டம் 2013ஐ இயற்றி இருக்கிறோம். இதனால், பணியிடங்களில் வேலை செய்யும் அனைத்து வயது மற்றும் முழு நேரபகுதி நேர, பெண்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலை தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத துறைகளிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால், பணிபுரியும் பெண்கள் மட்டுமல்லாமல் மாணவர்கள், பயிற்சிப்பணியாளர்கள், இந்த நிறுவனங்களுக்கு வருகை தரும் மகளிர் ஆகியோருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. பணியிடங்களில் பாலியல்சார் கொடுமைகளைப்

பற்றி தெரிவிப்பதற்கு ஏதுவாக வலைதளம் மூலமாகவே இது பெறப்பட்டு உடனடி கவனிப்பு அளிக்கப்படுகிறது.

குடும்பத்திலே கூட பெண்கள் கடுமையாக உழைத்தாலும் அதற்கு ஊதியமோ தேவையான அங்கீகாரமோ இல்லாமல் உள்ளது. பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், அவர்களுடைய உடல்நலத்தைப் பேணவும், புகை ஏற்படுத்தும் சமையல் முறைகளை மாற்றி பாதுகாப்பான வகையில் சமையல் செய்ய ஏழ்மைக் கோட்டிற்கு கீழே உள்ள மகளிருக்கு இலவச சமையல் எரிவாயுவை உஜ்வலா திட்டத்தின் கீழ் அரசு வழங்குகிறது. ஜூலை 2018 வரை 5.08 கோடி சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், இம்மகளிர் விறகு மற்றும் பிற அடுப்புகளிலிருந்து விடுபட்டு சுத்தமான சூழ்நிலையில் சமையல் செய்வதோடு, அவர்களுக்கு பிற வேலைகள் செய்ய ஓய்வு நேரமும் கிடைக்கிறது.

பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் அவர்களின் பாதுகாப்பும் ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது. பெண்கள் முழுவதுமாக பாதுகாப்பாக இருப்பதாகக் கருதினால்தான் அவர்கள் பொது வாழ்விலும், பொருளாதாரத்திலும் பங்கு பெற முடியும். இதற்காக, மகளிர் தங்களுக்கு ஏற்படும் கொடுமைகளைத் தெரிவிக்க தொலைபேசி எண் 181ஐ - 31 மாநிலங்களிலும் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அரசு செயல்படுத்தி வருகிறது. இது அல்லாமல், ஒரே இடத்தில் புகார்கள் பதிவு செய்து தீர்வு பெற 206 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காவல் பணிகளில் மகளிருக்கு 33 சதவிகித ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. ஆபத்தில் உள்ள மகளிர் விரைவாக நிவாரணம் பெற கைப்பேசிகளில் ஆபத்து பொத்தான்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். நிர்பயா நிதியிலிருந்தும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு எட்டு பெரிய நகரங்களில் பெண்கள் பாதுகாப்புத் திட்டங்களும், பாலியல் கொடுமைகளை உறுதி செய்ய குற்றவியல் ஆய்வு மையங்களும் அமைக்கப்படுகின்றன. இதனால் பெண்களுக்கு பாதுகாப்பு அளித்து அவர்களுக்கு அதிகாரமளிக்க இயலும்.

மகளிருக்கு அதிகாரம் அளிப்பதற்கு இவை போன்ற பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆனாலும் கூட இதன் பலன்கள் தொலைதூரப் பகுதிகளிலும், பின் தங்கிய பகுதிகளிலும் உள்ள மகளிரை சென்றடைவதில்லை. இது போன்று மக்களுக்கு பயனளிக்கும் வகையிலான மகிளா சக்தி கேந்திரத்திட்டம் எனது அமைச்சகத்தின் மூலம் சமீபத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் மூன்று இலட்சம் தன்னார்வ மாணவர்கள் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று மகளிருக்கு அதிகாரமளிக்கும் திட்டங்களைப் பற்றி விளக்கி வருகிறார்கள்.

மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் முயற்சியில் ஒருவர்கூட விட்டுபோகக்கூடாது என்பது எனது அமைச்சகத்தின் முக்கிய குறிக்கோளாகும். மிகவும் பின் தங்கிய பகுதியில் உள்ள மகளிர்கூட முழு பலன்களை பெற்று, மேம்படவேண்டும் என்பதற்காக திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



இனிவரும் முயற்சிகளில் நாம் மகளிர் மேம்பாடு என்று திட்டம் வகுக்காமல், மகளிர் தலைமையில் மேம்பாடு என்று மாற்றி செயல்படுத்தவேண்டும். இதுவே, நமது அரசின் முக்கிய அணுகுமுறையாகும். இந்த முயற்சியின் அடிப்படையில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்திய மகளிருக்கு மிகச்சிறந்த எதிர்காலத்தை நாம் எதிர்பார்க்கிறோம்.

மகளிர் அதிகாரம் பெற அதற்கேற்ற சூழ்நிலையும் பாதுகாப்பும் அவசியம். அவர்கள், பயம் ஏதுமின்றி வாழ்ந்தால்தான், எந்தத் தடங்கல்களும் இன்றி அவர்கள் தங்களுடைய முழு திறமைகளையும் வெளிப்படுத்த முடியும். மற்றவர்களுக்கு இணையான சமவாய்ப்பும் வழங்கப்பட வேண்டும். சரியான வாய்ப்புகளை அளித்தால் இந்திய மகளிரின் திறன்கள் அளவற்று வெளிப்படும்.

இந்தியாவின் குறைந்த வயது ஜனத்தொகையின் பயன்களை நாம் பெறுவதற்கு மகளிருக்கு அதிகாரமளிப்பதும் மிகவும் முக்கியமாகும். மேம்பட்ட கல்வி மற்றும் சிறப்பான வேலைவாய்ப்புகள் மூலம் மகளிர் பொதுவாழ்விலும் நாட்டு வளர்ச்சியிலும சிறப்பான பங்களிக்க முடியும்.

---

- மேனகா சஞ்சய்காந்தி, மத்திய அமைச்சர், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை.

# “தொடர் பராமரிப்பு” மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

- பிரீத்தி சுதன்

சுகாதாரம் மற்றும் குடும்ப நல்வாழ்வு அமைச்சகத்தில் இருக்கும் நாங்கள் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது கருவில் இருந்தே தொடங்குகிறது என நம்புகிறோம். பாலினத் தேர்ந்தெடுப்பைத் தடுத்தல் மற்றும் பாலினத் தேர்வு மூலமாக பெண் கருவைக் கலைத்தலை நிறுத்துதல் ஆகியன பெண்களுக்கு அதிகாரம் அளித்தலின் முதல் படிநிலை ஆகும். கருவுறுதலுக்கு முன்போ அல்லது பின்போ பாலினத்தைத் தேர்ந்தெடுப்பதை தடை செய்யவும் விருப்பமான பாலினத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக கருவுறுதலுக்கு முன் மற்றும் கருவுற்ற பின்பு ஸ்கேன் தொழில்நுட்பங்களைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் கருவுறுதலுக்கு முன்பும் கருவுற்ற பின்பும் மேற்கொள்ளும் பரிசோதனைகள் தொழில்நுட்பங்கள் (பாலினத் தேர்ந்தெடுப்பைத் தடுத்தல்) சட்டம் 1994ஐ அரசு இயற்றி யுள்ளது. இந்த நெறிமுறைப்படுத்தும் சட்டத்தோடு கூடவே நாங்கள் “பெண் குழந்தைகளைக் காப்போம் பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்” என்ற எங்களது முன்னோடித் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறோம். இதன் மூலமாக பெண் குழந்தை என்பவள் மதிப்பு மிக்கவள் என்ற சமூகத்தின் புரிதலை மேம்படுத்துகிறோம். இதற்காக சமூகப் பொருளாதார நிலைமைகளில் கவனம் செலுத்துகிறோம்.

பெண்கள் வலிமையானவர்களாக, சமமானவர்களாக, செயலூக்கம் நிறைந்தவர்களாக மற்றும் செயலாற்றல் கொண்டவர்களாக இருக்கும் வகையில் சமுதாயத்தில் சிறப்பான ஒரு நாகரிகத்தை உருவாக்குவதை ஒரு நாடு தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தால், அதற்குத் தரமான மற்றும் சமவாய்ப்பான சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் பெண்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்வது என்பதும் முக்கியம் ஆகும். இதனை அங்கீகரித்த சுகாதாரம் மற்றும் குடும்ப நல்வாழ்வு அமைச்சகம் பெண்களின் சுகாதாரத்திற்காக பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களுக்காக வாழ்க்கைச் சுழற்சி வட்டத்துக்கான “தொடர் பராமரிப்பு” அணுகுமுறை கடைபிடிக்கப்படுகிறது. இந்த அணுகுமுறை பெண்களின் பல்வேறு வாழ்க்கைச் சுழற்சி கட்டங்கள் மீது சமமான கவனம் செலுத்துகிறது. கர்ப்பிணிப் பெண்கள், பச்சிளங் குழந்தைகள், குழந்தைகள், சிறுவர்கள், வளர் இளம்பருவத்தினர் ஆகியோருக்கு பல்வேறு வகையான திட்டங்கள் முதல், குழந்தை பெறும் வயதுள்ள பெண்களுக்கான குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வரை இந்த அணுகுமுறையானது செயல்படுத்தப்படுகிறது. சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதோடு, பொது சுகாதாரத் துறைகள் பொருளாதார ரீதியிலும் பெண்கள் அதிகாரம் பெற வழிவகுத்துள்ளது. கிராம அளவிலான பதிவு பெற்ற சமுதாய சுகாதாரச் செயல்பாட்டாளர்கள் (ASHA) முதல் துணை தாதியர்கள் (ANM) வரையிலான பல்வேறு பதவிகள், சுகாதாரப் பராமரிப்பு நிர்வாகிகள், தேசிய மற்றும் மாநில அளவில் கொள்கை உருவாக்குநர்கள் எனப் பல பதவிகளில் பெண்களை நியமிப்பதன் மூலம் பொருளாதார ரீதியில் அதிகாரம் அளித்தல் என்பது மேற்கொள்ளப்படுகிறது. தற்போது சுமார் 10,31,805 சமுதாய சுகாதாரச் செயல்பாட்டாளர்கள் (ASHA) மற்றும் 2,20,707 துணை தாதியர்கள் (ANM) (அதாவது மார்ச் 2018 அன்றுள்ளபடி) இருக்கின்றனர். இவர்கள் தான் சுகாதாரப் பணி செய்பவர்களில் முன்னணிப் படையினராக உள்ளனர். இந்தப் பெண்கள்தான் நாட்டின் சுகாதாரப் பராமரிப்பு உள்கட்டமைப்பின் முதுகெலும்பாகத் திகழ்கிறார்கள்.

கர்ப்பம் தொடர்பாக ஒவ்வொரு பெண்ணும் பிரசவத்திற்கு முன்பு, பிரசவத்தின் போது மற்றும் பிரசவத்துக்குப் பிறகான பராமரிப்புச் சேவைகளைப் பெற தகுதி உள்ளவர் ஆவர். நமது மாண்புமிகு பாரதப் பிரதம மந்திரியின் இந்தத் தொலைநோக்குப் பார்வையை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்காக பிரதம மந்திரி பேறுகால சிகிச்சைத் திட்டம் (PMSMA) தொடங்கப்பட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் 9ஆம் தேதி தரமான கர்ப்பகால பராமரிப்பு (ANC) கிடைக்க இந்தத் திட்டம் உதவுகிறது (ஒன்பது மாதம் கர்ப்பம் என்பதைக் குறியீடாகச் சொல்வதற்கு மாதத்தின் 9ஆம் தேதி எடுத்துக்

கொள்ளப்பட்டுள்ளது). மாதம் முழுவதும் பொது சுகாதார மருத்துவமனைகளில் கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்பக்கால பராமரிப்பு வழக்கமான முறையில் கிடைத்து வருகிறது என்றாலும் பிரதம மந்திரி பேறுகால சிகிச்சைத் திட்டத்தின் (PMSMA) கீழ் அரசாங்க மருத்துவமனைகளில் கர்ப்பக்கால - பேறுகால சிறப்பு மருத்துவர்கள் (OBGY) / கதிரியக்க நிபுணர்கள் / பொது மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் கர்ப்பிணிகளுக்கு சிறப்பான மற்றும் தரமான கர்ப்பக்கால பராமரிப்பு (ANC) சேவைகளை வழங்குகிறார்கள்.

ஏப்ரல் 2018 வரை 1.40 கோடி பேர் இவ்வாறு தரமான கர்ப்பகால பராமரிப்பு (ANC) சேவையைப் பெற்றுள்ளனர் என்று நான் பெருமிதமாகக் கூறுகிறேன். மேலும் பிரதம மந்திரி பேறுகால சிகிச்சைத் திட்டத்தின் (PMSMA) கீழ் 7 இலட்சம் கர்ப்பிணிகள் பிரசவக்கால ஆபத்துக் காரணிகள் உடையவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளனர். இதே போன்று ஆரம்பகால பராமரிப்புச் சேவைகள் கிராம அளவில் கிராம சுகாதார - ஊட்டச்சத்து தினங்கள் (VHNDs) கடைபிடிக்கப்படுவதன் மூலம் கிடைக்கிறது. கர்ப்பக்காலத்தில் ஒரு பெண்ணுக்கு குறைந்தது நான்கு கர்ப்பக்காலப் பராமரிப்புச் சேவைகளும் பரிசோதனைகளும் மருத்துவமனைகளில் கிடைப்பதும் உறுதி செய்யப்படுகிறது. இத்தகைய கர்ப்பக்கால பரிசோதனைகள் மிகவும் அவசியமானவை ஆகும். இரும்புச் சத்து, கால்சியம் போன்ற மாத்திரைகள் பரிசோதனையின் போது கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படுகின்றன. கர்ப்பத்தில் ஏதேனும் சிக்கல் இருக்கிறதா எனக் கண்டறியவும் பாதுகாப்பான பிரசவத்தை உறுதிப்படுத்தவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. கர்ப்ப காலத்தில் பராமரிக்க வேண்டிய இன்றியமையாத அம்சங்கள் குறித்து தெரிவிப்பதற்காக கர்ப்பிணிப் பெண்களுக்கு தாய் சேய் பாதுகாப்பு அட்டைகளும் (MCP) பாதுகாப்பான தாய்மை குறித்த பிரசுரங்களும் வழங்கப் படுகின்றன. இவை மட்டுமின்றி சுகாதார அமைச்சகம் அதிக அளவில் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புள்ளவர்கள் மற்றும் தொலைதூரத்தில் அணுக முடியாத நிலையில் இருப்பவர்களையும் இத்தகைய வசதிகள் சென்றடையும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. அமைச்சகமானது தாய் மற்றும் சேய் தடம் அறியும் அமைப்பு (MCTS), இனப்பெருக்க குழந்தை நலத்துக்கான (RCH) போர்ட்டல் மற்றும் கில்காரி மொபைல் சேவைகள் ஆகியவற்றை வழங்குகிறது. பெண்களுக்கு சரியான நேரத்தில் கர்ப்பக்கால மற்றும் பேறுகால பராமரிப்பு சேவைகள் கிடைக்க இவை உதவுகின்றன மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி, தடுப்பு மருந்து ஆகியன அட்டவணைப்படி கிடைக்கவும் உதவுகின்றன. இவற்றை முன் வரிசையிலும், கீழ்நிலைலும் இருக்கின்ற பணியாளர்கள் வழங்குகின்றனர். இதனை முறையான அட்டவணை நிரல் மூலமும் குறிப்பிட்ட வயதினருக்கான செய்திகளைத் தருவதன் மூலமும் அவர்களை தொலைபேசியில் அழைத்து ஞாபகப்படுத்துவதன் மூலமும் செயல்படுத்துகின்றனர்.

ஜனனி சிசு சுரக்ஷா கார்யகரம் (JSSK) என்ற திட்டமானது பொது சுகாதார மருத்துவமனைகளில் கர்ப்பிணிப் பெண்கள் இலவசமாகவும் எந்தச் செலவும் இல்லாமல் சிசேரியன் அறுவை சிகிக்சை உட்பட பிரசவம் பார்த்துக் கொள்ளவும் வழி செய்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் மருந்துகள், பரிசோதனைகள், ரத்தம் செலுத்துதல் மற்றும் உணவு, வீட்டில் இருந்து மருத்துவமனைக்குச் செல்லும் பயணச் செலவு என அனைத்தும் இலவசமாகக் கிடைக்கிறது. ஒருவேளை பெரிய மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டால் அங்கு சென்று மருத்துவம் பார்த்த பிறகு வீடு திரும்பும் வரையிலான பயணச் செலவும் இலவசமே ஆகும். இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை 1.33 கோடிக்கும் அதிகமான கர்ப்பிணிப் பெண்கள் பலன் அடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தின் கீழ் இலவச போக்குவரத்துச் சேவைகளைப் பெற பெண்கள் 102 / 108 என்ற எண்களை அழைக்க வேண்டும். மேலும் விரிவான தகவல்களுக்கு அருகில் உள்ள கிராம அளவிலான பதிவு பெற்ற சமுதாய சுகாதாரச் செயல்பாட்டாளர்கள் (ASHA) / துணை தாதியர்கள் (ANM) / பொது மருத்துவமனைகள் ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம். மருத்துவமனையில் இருக்கும் போது பிரசவம் தொடர்பான தரமான சேவைகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக நாங்கள் அண்மையில் லக்ஷயா என்ற திட்டத்தைத் தொடங்கி உள்ளோம். பிரசவ அறை மற்றும் பேறுகால அறுவை சிகிச்சைக் கூடங்கள் தொடர்பான முக்கிய செயல்முறைகளை வலுப்படுத்துவதை இலக்காகவும் கவனத்தில் கொள்வதாகவும் இருக்கும் வகையில் பிரசவ அறையின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சுகாதாரம் மற்றும் குடும்ப நல்வாழ்வு அமைச்சகம் மற்றொரு திட்டமான

ஜனனி சுரக்ஷா திட்டத்தை (JSY) செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவமனைகளில் பிரசவம் செய்து கொள்வதை அதிகப்படுத்துவதற்கான நிதி உதவியானது நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. அடிப்படை மற்றும் அவசரகால மகப்பேறியல் சேவைகளை வழங்குவதற்காக முதல் பரிந்துரை மருத்துவமனைகள் (FRU), தாய் மற்றும் சேய் நலப்பிரிவுகள், மகப்பேறியல் தீவிர சிகிச்சைப் பிரிவுகள், பிரசவ மையங்கள் ஆகியன நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் விளைவாக நம் நாட்டில் மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்கள் அதிகரித்துள்ளன. 2007-08ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட DLHS-3 கணக்கெடுப்பின்படி 47 சதவிகிதமாக இருந்த மருத்துவமனையில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கையானது 2015-16இல் எடுக்கப்பட்ட NFHS4 கணக்கெடுப்பில் 78.9 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் அதனுடைய முதல் ஓராயிரம் (1,000) நாட்களே அந்தக் குழந்தை ஒரு நபராக வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பதற்கான திறவுகோலாக இருக்கிறது. மேலும் பிற்கால வாழ்க்கையை வடிவமைப்பதாகவும் இருக்கிறது. குழந்தைக்கு இரண்டு வயதாகும் போது அதன் மூளை 85 சதவிகிதம் வளர்ந்து விடுகிறது. இவைதான் அடித்தள உருவாக்க காலகட்டமாக உள்ளன. இந்தக் காலகட்டத்தில்தான் போதுமான சுகாதார பராமரிப்பு, சிறப்பான ஊட்டச்சத்து, குழந்தைப் பருவத்திலேயே கற்றல் மற்றும் தூண்டுதல், தரமான குழந்தை பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் சுத்தமான பாதுகாப்பான சுற்றுச்சூழல் ஆகியன குழந்தையின் எதிர்காலத்தின் மீது குறிப்பிடத்தக்க மற்றும் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெற்றோர்களுக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்பவர்களுக்கும் சிறப்பான குழந்தை வளர்ப்பு குறித்த நடைமுறைகளைக் கற்றுத் தருவதற்கான முக்கியமான முயற்சியாக ‘‘முதல் 1,000 நாட்களின் பயணம்’’ என்ற தலைப்பிலான புத்தகத்தை சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

ஆரோக்கியமான வளர் இளம்பருவமானது பெண்களுக்கு தங்களது முழு ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கான அடித்தளமாக விளங்குகிறது. வளர் இளம்பருவத்தினரிடம் உள்ள பல்வேறு வகைப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஆபத்துக் காரணிகளின் பரிமாணத்தை கவனத்தில் கொண்டு சுகாதார அமைச்சகம் ராஷ்ட்ரிய கிஷோர் ஸ்வஸ்த்ய கார்யகரம் (RKSK) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலே கூறிய ஆபத்துக் காரணிகள் பிற்காலத்தில் தாய் மற்றும் சேய் நலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ராஷ்ட்ரிய கிஷோர் ஸ்வஸ்த்ய கார்யகரம் (RKSK) திட்டத்தின் நோக்கம் என்பது வளர் இளம்பருவ ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்துதல் மற்றும் அது குறித்த தகவல்களை கிடைக்கச் செய்தல் என்பதாகும். மேலும் ஆலோசனை மற்றும் சுகாதாரச் சேவைகளை வழங்குதல், சானிட்டரி நேப்கின்கள் வழங்குதல், இரும்புச் சத்து மாத்திரைகளைத் தருதல் போன்ற குறிப்பிட்ட சேவைகளும் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப் படுகின்றன. ராஷ்ட்ரிய கிஷோர் ஸ்வஸ்த்ய கார்யகரம் (RKSK) திட்டத்தின் கீழ் உள்ள வாராந்திர இரும்புச்சத்து - ஃபோலிக் அமில மாற்று (WFA) என்ற அம்சமானது பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவ மற்றும் மாணவிகள், பள்ளிக்கு வெளியில் உள்ள சிறுமிகள் ஆகியோருக்கு கண்காணிப்பின் கீழ் வாராந்திர இரும்புச்சத்து - ஃபோலிக் அமில மாற்று (WFA) மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. இரும்புச்சத்து மற்றும் ஃபோலிக் அமிலப் பற்றாக்குறையால் ஏற்படும் ரத்தசோகையைத் தடுப்பதற்கான வயிற்றில் உள்ள பூச்சிகள் மற்றும் புழுக்களை நீக்குவதற்காக வருடம் இருமுறை அல்பென்டாஜோல் (Albendazole tablet) மாத்திரை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக 3.7 கோடி வளர் இளம்பருவத்தினர் வாராந்திர இரும்புச்சத்து மற்றும் ஃபோலிக் அமில மாத்திரைகளைப் பெறுகின்றனர். மேலும் சமவயது உடையோரின் நீடித்த நிலையான கல்விக்காக ஏப்ரல் 2018 அன்றுள்ளபடி, 2 இலட்சம் சமவயது கல்வியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டனர். குறிப்பாக ஊரகப் பகுதிகளில் உள்ள 10 முதல் 19 வரை வயதுப் பிரிவில் உள்ள வளர் இளம்பருவப் பெண்களுக்காக மாதவிடாய் கால சுத்தத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. வளர் இளம் பெண்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற குறிப்பிட்ட நோக்குநிலை இந்தத் திட்டத்துக்கு உள்ளது. வளம் இளம்பருவத்தினருக்கு பராமரிப்பு மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கான சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை நிர்மாணிக்க 7,516 வளர் இளம்பருவத்தினருக்கு இணக்கமான ஹெல்த் கிளினிக்குகள் உருவாக்கப்

பட்டுள்ளன. இவை வளம் இளம் பருவத்தினருக்கு பராமரிப்பையும் ஆலோசனை சேவைகளையும் வழங்கி வருகின்றன.

ஒவ்வொரு பெண்ணுக்கும் தனது கர்ப்பம் குறித்து திட்டமிட்டுக் கொள்வதற்கான உரிமை இருக்கிறது. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் நடைமுறைப்படுத்தி உள்ள குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் தங்களுக்கு எத்தனை குழந்தைகள் வேண்டும் மற்றும் குழந்தைகளுக்கு இடையில் எத்தனை ஆண்டுகள் இடைவெளி விடுவது போன்ற விஷயங்களில் பெற்றோர்கள் சுதந்திரமாகவும் பொறுப்புணர்வுடனும் முடிவு எடுப்பதற்கான பல்வேறு வாய்ப்புகளை வழங்குகின்றன. அண்மையில் சுகாதார அமைச்சகம் மக்களின் மாறிவரும் தேவைகளை நிறைவேற்றும் வகையில்

- அன்ட்டாரா எனப்படும் ஊசிமூலம் செலுத்தப்படும் மெட்ராக்சி புரோஜெஸ்ட்டெரோன் அசெடேட் (MPA) என்ற மருந்து
- சாயா எனப்படும் ஹார்மோன் அல்லாத, ஸ்டீராய்டு அல்லாத வாரம் ஒரு முறை உட்கொள்ளும் சென்ட்குரோமான் மாத்திரை.

என புதிய கர்ப்பத்தடை மருந்துகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

குழந்தை பெறுவதில் போதிய இடைவெளி விடுவதற்கு பெண்களுக்கு உதவும் வகையில் பிரசவத்துக்குப் பின்பு காப்பர்டி (PPIUCD) பொருத்துதல், பிரசவத்துக்குப் பின்பு கர்ப்பத்தடை அறுவை சிகிச்சை மற்றும் கருக்கலைவுக்குப் பிறகு காப்பர்டி (PPIUCD) பொருத்துதல் ஆகியவற்றின் மீது இந்தத் திட்டமானது கவனம் செலுத்துகிறது. குழந்தை பெறத் தகுதி உள்ள தம்பதிகளுக்கு கர்ப்பத்தடைக்கான பொருட்கள் எளிதில் கிடைப்பதை மேம்படுத்தும் வகையில் சமுதாய சுகாதாரச் செயல்பாட்டாளர்கள் (ASHA) மூலம் அவை வீடுகளுக்கே விநியோகிக்கப்படுகின்றன. அதாவது தேவைப்படும் பயனாளிகளுக்கு அவர்களின் வீடுகளுக்கே சென்று அவர்களிடம் கர்ப்பத்தடைக்கான பொருட்கள் வழங்கப்படுகின்றன. திருமணம் முடிந்த உடன் இரண்டு ஆண்டுகளுக்கு குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடுதல் மற்றும் முதல் குழந்தை பிறந்த பிறகு அடுத்த குழந்தைக்கு மூன்று ஆண்டுகள் இடைவெளி விடுதல் ஆகிய இந்த இரண்டு விஷயங்களையும் புதியதாக திருமணம் ஆன தம்பதிகளுக்கு தகுந்த வகையில் ஆலோசனை வழங்க சமுதாய சுகாதாரச் செயல்பாட்டாளர்களுக்குப் (ASHA) பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலே கூறியவற்றோடு மட்டும் அல்லாமல் மேலும் கூடுதலாக பெண் குழந்தைக்கு ஆரோக்கியமான குழந்தைப் பருவம் கிடைப்பதை உறுதி செய்வதற்காகவும் பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிக்கலான பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு சிறப்புக் கவனச் சேவைகள் அளிக்கும் வகையில் மாவட்ட அளவில் சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. கோட்ட அளவில் பிறந்த குழந்தைகளுக்கான நிலைப்படுத்தல் பிரிவுகளும் பிறந்த குழந்தைகளுக்கான பராமரிப்பு மையங்களும் தொடங்கப்பட்டுள்ளன. வீட்டு அடிப்படையிலான பச்சிளம் குழந்தை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் பிறந்த குழந்தைகளைக் கண்காணிக்க சமுதாய சுகாதாரச் செயல்பாட்டாளர்கள் (ASHA) குழந்தைகள் இருக்கும் வீடுகளுக்குத் தொடர்ச்சியாக செல்கின்றனர். உலகிலேயே மிகப்பெரிய அளவில் "அனைவருக்கும் தடுப்பூசி திட்டத்தை" இந்தியா செயல்படுத்தி வருகிறது என்ற விஷயம் பெருமிதம் தரக்கூடிய விஷயம் ஆகும். இரண்டு வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் முழு அட்டவணைப்படி தடுப்பூசிகளும் தடுப்பு மருந்துகளும் வழங்குவதற்காக 2014ஆம் ஆண்டில் மிஷன் இந்திரதனுஷ் என்ற சிறப்புத் திட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. வழக்கமான தடுப்பூசித் திட்டத்தில் விடுபட்ட, தடுப்பூசி போடாத குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் தடுப்பு மருந்து கிடைக்க இந்தத் திட்டமானது உதவியது. இதுவரை 3.15 கோடி குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது (இதில் 80.58 லட்சம் குழந்தைகளுக்கு அனைத்து தடுப்பூசிகளும் தடுப்பு மருந்துகளும் தரப்பட்டுள்ளன). இந்தத் திட்டத்தின் கீழ் 91.94 இலட்சம் விட்டமின் ஏ தவணைகள் வழங்கப்பட்டுள்ளன. தீவிரமான குறுகியகால ஊட்டச்சத்துப் பற்றாக்குறை உள்ள குழந்தைகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்த ஊட்டச்சத்து மறுவாழ்வு மையங்கள் (NRC) ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளிடம் உள்ள பிறவி ஊனங்கள், நோய்கள், குறைபாடுகள், வளர்ச்சியில் தேக்கம் ஆகியவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலம் அந்தக் குழந்தைகள் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ராஷ்டிரிய பால் ஸ்வஸ்தய கார்யகிரம் (RBSK) என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு

வருகிறது. இத் திட்டத்தின் கீழ் செப்டம்பர் 2017 வரை 70.9 கோடி குழந்தைகளுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 1.55 இலட்சம் குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அரசு பொது மருத்துவ மனைகளில் அத்தியாவசியமான மருந்துகளுக்கான "இலவச மருந்து மற்றும் இலவச பரிசோதனைத் திட்டம்" மற்றும் நடமாடும் மருத்துவமனைகள் ஆகிய வசதிகள் மூலமும் பெண்கள் இலவசமான சுகாதாரப் பராமரிப்பு சேவைகளைப் பெற முடியும். இதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலங்களுக்கு ரூ.16,000 கோடிக்கும் மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் "சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்கள்" (HWC) அமைக்கப் படுகின்றன. இதன் மூலம் பல்வேறு முன்தடுப்பு மற்றும் ஆரோக்கிய மேம்பாட்டு சேவைகள் பெண்களுக்கு வழங்கப்பட உள்ளன. இந்த மையங்களில் விரிவான ஆரம்ப சுகாதார பராமரிப்போடு விசேஷமான தாய்சேய் பராமரிப்புச் சேவைகளும் வழங்கப்பட உள்ளன. ஒவ்வொரு காலகட்டமாக மொத்தம் 1.5 இலட்சம் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்கள் (HWC) அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் இடைநிலை சுகாதாரச் சேவை வழங்குபவர்களுக்கு விரிவான சேவைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இனப்பெருக்க மற்றும் குழந்தை நலச் சேவைகள் முதல் தொற்றும் - தொற்றாத நோய்களுக்கான சேவைகள் வரை இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த மையங்கள் முன் வரிசையில் அடிமட்ட அளவில் சுகாதாரப் பணிபுரிவதற்கான வேலை வாய்ப்புகளை பெண்களுக்கு வழங்கும்.

நாடு முழுவதும் பெண்களுக்கு விரிவான சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதில் இந்திய அரசு முனைப்பாக உள்ளது. இந்த முயற்சிகள் இந்தியாவில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் மற்றும் பேறுகால பெண்களின் இறப்பு விகிதம் ஆகியவற்றை குறிப்பிடத்தக்க வகையில் குறைத்துள்ளன. ஏப்ரல் 2015இல் தாய் மற்றும் பச்சிளங் குழந்தை டெட்டனஸ் நோய் ஒழிப்பில் (MNTE) இந்தியா தகுதி பெற்றுள்ளது. இதற்கான சர்வதேச காலக்கெடு டிசம்பர் 2015 வரை என்று இருந்தபோதிலும் முன்கூட்டியே இந்தியா இந்த இலக்கை அடைந்துவிட்டது. அதுமட்டும் அல்லாமல் அண்மையில் இந்தியா மற்றொரு சாதனையையும் புரிந்துள்ளது. பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதத்திலும் நாம் மில்லினியம் வளர்ச்சி இலக்கினை (MDG) அடைந்துள்ளோம். பேறுகால சமயத்தில் இறக்கும் தாய்மார்களின் இறப்பு விகிதமானது குறிப்பிடத்தக்க அளவில் அதாவது 37 புள்ளிகள் குறைந்துள்ளன. இந்த விகிதம் 2011-13இல் உயிருடன் நிகழும் ஒரு இலட்சம் பிரசவங்களுக்கு இறப்பு 167 என இருந்தது இப்போது உயிருடன் நிகழும் ஒரு இலட்சம் பிரசவங்களுக்கு இறப்பு 130 என குறைந்துள்ளது. கடந்த பல பத்தாண்டுகளின் புள்ளி விகிதத்தோடு ஒப்பிட இது சாதனை ஆகும். அதாவது 2011-13 காலகட்டத்தோடு ஒப்பிட இப்போது நாம் கூடுதலாக 12,000 கர்ப்பிணிப் பெண்களை மரணத்தில் இருந்து காப்பாற்றியுள்ளோம்.

மாநிலங்களின் உறுதியான ஆதரவு மற்றும் முன்வரிசையில் உள்ள சுகாதாரப் பணியாளர்களின் அர்ப்பணிப்பான, முழுமனதுடனான சேவை ஆகியவற்றால் பேறுகாலத் தாயின் சுகாதாரம் என்ற பிரிவில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்கினை (SDG) அடைவதற்கான இலக்குக் காலவரம்பான 2030ஆம் ஆண்டுக்கு வெகு முன்பாகவே அடைந்து விட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இதனால் இந்தியப் பெண்களுக்கு ஆரோக்கியமான, அதிகாரம் கைவரப்பெற்ற, ஒளிமயமான எதிர்காலம் கிடைக்கும்.

- **பிரீத்தி சுதன்**, இந்திய அரசின் சுகாதாரம் மற்றும குடும்ப நல அமைச்சகத்தின் செயலாளர்.

*அடுத்த இதழில்*

# துப்புரவு: சிந்தனையிருந்து செயலை நோக்கி

*என்ற தலைப்பில் கட்டுரைகள் இடம்பெறும்.*

# தொழில்முனைவு மேம்பாடு மூலம் மகளிருக்கு அதிகாரம் அளித்தல்

- என்.வி.மாதுரி

கடந்த அரை நூற்றாண்டில் இந்தியாவின் மக்கள்தொகை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் அதற்கேற்ப தொழில் வாய்ப்புகள் வளர்ச்சி பெறவில்லை. அதிலும் குறிப்பாக ஊரகப்பகுதிகளில் தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கவே இல்லை. மக்கள் தொகையில் பெண்கள் 50 சதவிகிதம் இருக்கிறார்கள். பெண்கள்தான் குடும்பத்தின் முதுகெலும்பாக உள்ளனர். அண்மைக் காலங்களில் பொருளாதாரத் தேவைகளின் பொருட்டு பெண்களின் பாராம் பரியமான பங்களிப்புகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் சமுதாய மேம்பாட்டில் பெண்களின் பங்களிப்பை வெளிப்படுத்தவும் அந்தப் பங்களிப்பை பொதுவான கண்ணோட்டத்தில் இணைக்கவும் சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியா உட்பட அனைத்து வளரும் நாடுகளிலும் ஏழைப் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சுயஉதவிக்குழுக்கள் (SHG) ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. அதாவது தொழில்முனைவு மேம்பாடு மூலம் இது நடந்து வருகிறது (அஞ்சலி, 2017).

பெண்களுக்கு அதிகாரம் அளிக்கக் கூடிய முயற்சிகளுக்கு சாத்தியமாகக் கூடிய தீர்வாக தொழில்முனைவு மேம்பாடும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளும் இருக்கின்றன. அதிகாரம் அளித்தல் என்பது பெண்கள் தங்களுக்கான வாய்ப்புகளை தங்கள் கட்டுப்பாட்டிலும் தங்களுக்குச் சொந்தமாகவும் மாற்றிக்கொள்ளும் வழிமுறையாக வரையறுக்கப்படுகிறது. செயல்படுத்தும் தன்மை (ஒருவரின் இலக்குகளை வரையறுத்து அவற்றை அவடைவதற்காக செயல்படும் திறமை), பாலின அதிகார அமைப்புகள் குறித்த விழிப்புணர்வு, சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கை (கபீர், 2001) தொடர்பான அதிகாரம் அளித்தல் என்பது அதிகாரப் படிநிலை வரிசையில் பல அடுக்குகளில் நிகழலாம் - தனிநபர், குடும்பம், சமுதாயம் மற்றும் சமூகநிலை என நிகழலாம். ஊக்கப்படுத்தும் காரணிகளை முன்வைப்பதன் மூலமும் (எ.டு. திறமைகளை வளர்க்கக்கூடிய புதிய நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளுதல்) தடை ஏற்படுத்தும் காரணிகளை நீக்குவதன் மூலமும் (எ.டு. மூலவளங்கள் மற்றும் தொழில் திறன்களின் போதாமை) அதிகாரம் அளித்தல் சாத்தியமாகலாம்.

இந்தச் சூழலில், சுயஉதவிக் குழுக்களுக்கு (SHG) நுண்கடன் உதவி அளித்தல் என்பது பெண்களின் தொழில்முனைவையும் அவர்களது நிதிசார் அதிகாரத்தையும் மேம்படுத்துவதில் மிக முக்கியமான பங்கினை ஆற்றுகிறது. இது வறுமையைப் போக்குவதற்காக உள்ள ஒரு திறமையான உபகரணமாக மட்டும் இல்லாமல் மக்கள்தொகையில் மிகவும் விளிம்பு நிலையில் உள்ள பிரிவினர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் செயலை மேம்படுத்துவதற்கான உபகரணமாகவும் உள்ளது. சுயஉதவிக் குழுக்கள் (SHG) என்ற கருத்தாக்கம் இந்தியாவின் சில மாநிலங்களில் ஊரகப் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருந்தது நிரூபிக்கப்பட்டுள்ளது. இன்று பெண்கள் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியை அடைவதற்கு வேண்டிய ஒரு முக்கிய கூறாக பெண்களுக்கு அதிகாரம் அளித்தலும் பாலினச் சமத்துவமும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன (சஞ்சய் காந்திதாஸ், 2012).

நுண்ணளவு தொழில் முனைவானது பெண்களுக்கு அதிகாரம் அளித்தலையும் பாலின சமத்துவம் இல்லாத நிலையை நீக்கும் செயல்பாடுகளையும் வலுப்படுத்துகிறது. சுயஉதவிக் குழுக்களின் நுண்கடன் செயல்முறை அந்தக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்களது சமுதாயம் சார்ந்த இதர



மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடவும் உதவுகிறது. நுண்கடன் வசதி என்பது சிறு அளவிலான வணிக நிறுவனங்கள் வளர உதவுகிறது. இதன் முதன்மை நோக்கம் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மூலம் வறுமையைப் போக்குவதே ஆகும். கடன் அளித்தல் மற்றும் வியாபார நடவடிக்கைகளை உறுப்பினர்களே சுயமாக மேற்கொள்ள உதவுவதல் போன்ற செயல்பாடுகளின் மூலம் பல சுயஉதவிக் குழுக்கள் பெண்களுக்கு அதிகாரம் அளித்தலில் ஈடுபட்டுள்ளன. உதாரணமாக அபிநவ் விவசாயிகள்

கூட்டுறவுச் சங்கம், கிராஸ்ரூட்ஸ், கிராமீன் வங்கி, அசாம் தேயிலைக் கழகம், குடும்பஸ்ரீ, இந்திரா கிரந்தி பதமரெ ஆகியவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

மகளிர் சுயஉதவிக்குழுக்கள் (SHG) முக்கியமாக மகளிருக்காகவே தொடங்கப்பட்டன என்று ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்நாடு மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் அவை மிகச் சிறப்பாக வெற்றி பெற்றுள்ளன. நபார்டு வங்கியானது இதர வர்த்தக வங்கிகள் மற்றும் மண்டல கிராம வங்கிகள் ஆகியவற்றோடு இணைந்து மகளிருக்கான சுயஉதவிக் குழுக்களை பரிசோதனை ரீதியில் முன்னோட்ட செயல்திட்டமாகத் தொடங்கி இருந்தது. விவசாயம் சாராத தொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி அளிப்பதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மறுநிதி அளித்தல் வசதிகளும் கூடுதலாக ஏற்படுத்தப் பட்டன. இது தொடர்பாக மூன்று மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுயஉதவிக் குழுக்கள் தாங்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் சரியாக இருந்துள்ளனர், உறுப்பினர்களுக்கு இடையில் கடன் தருவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளனர், வருவாய் ஈட்டித் தரும் சொத்துகளை வாங்குவதற்கு கடன் தொகையைத் திறம்படப் பயன்படுத்தியுள்ளனர், மகளிர் அதிகாரம் பெற்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

சுயஉதவிக் குழுக்களின் (SHG) ஆதரவால் மகளிர் தொழில் முனைதலும் நுண் - தொழில் நிறுவனங்களும் வளர்ச்சி அடைந்து உள்ளன என்பதற்கு கேரளாவும் தமிழ்நாடும் உதாரணங்களாக உள்ளன. இந்த மாநிலங்கள் மகளிருக்கு நுண் கடன் வசதிகளை அளித்துள்ளன பயிற்சித் திட்டங்கள் மூலம் மகளிர் தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்ள உதவியுள்ளன மற்றும் நிதிசார் உதவிகள் மூலம் மகளிரை மேம்படுத்தியுள்ளன. இன்று, இந்திய ரிசர்வ் வங்கியும் (RBI) நிதிக்கடன் வழங்குதில் சுயஉதவிக் குழுக்களின் பங்கினையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்துள்ளது. எனவே பெண் தொழில் முனைவோர்களுக்கு நபார்டு வங்கி உதவியுடன் நடுத்தரக் கடன் வசதித் திட்டத்தை ரிசர்வ் வங்கி நீட்டித்துள்ளது. பெண் தொழில் முனைவோரின் வெற்றியானது தொழில் தொடங்கவேண்டும் என்ற முனைப்பையும் சம வாய்ப்புகளுடன்



பங்கேற்க வேண்டும் என்ற உந்துதலையும் தந்து, வியாபாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளச் செய்கிறது. உலகம் முழுவதிலும் தொழில் முனையும் பெண்களின் தொடக்க முயற்சிகள் நிதி சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாததால் பெரும்பாலும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. ஆனால் இன்று சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டதனால் பெண் தொழில் முனைவோரிடம் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தங்களது கனவுகளை செயலாக்கி நிஜமாக்க முடியும் என இவர்கள் நம்புகிறார்கள. எனவே இத்தகைய வளர்ச்சியானது இந்தியாவில் அனைவரையும் உள்ளடக்கிய வசதியாக உண்மையில் இருக்கிறது. இது மகளிருக்கான நிதி சார்ந்த அதிகாரம் அளித்தலுக்கு வழிவகுக்கும் (சபிகா ஃபஜல்பாய், 2014).

### இந்திய அரசின் நடவடிக்கைகள்

பெண் தொழில் முனைதலின் முக்கியத்துவத்தையும் நாட்டின் வளர்ச்சிக்கும், வளமைக்கும் அவர்களின் பொருளாதாரப் பங்கேற்பும் முக்கியம் என்பதையும் இந்திய அரசு அங்கீகரித்துள்ளது. அதனால் பெண்களுக்கு சமவாய்ப்பு அளிக்கும் வகையில் அனைத்து கொள்கை நடவடிக்கைகளும் இருப்பதை அரசு உறுதி செய்துள்ளது. கடன் வசதி கிடைத்தல், நெட்வொர்க்குகள், சந்தைகள் மற்றும் பயிற்சிகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் இந்தியாவின் தொழில் முனைவு அமைப்புக்குள் முன்னணியில் பெண்களைக் கொண்டு வந்து நிறுத்த அரசு முனைந்துள்ளது.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் வளர்ச்சிக் கழகம் (MSME-DO), பல்வேறு மாநில சிறுதொழில் மேம்பாட்டுக் கழகங்கள் (SSIDCS), தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (NGO) ஆகியவை போதுமான கல்விப் பின்புலம் மற்றும் தொழில் திறன்கள் இல்லாத ஆனால் அதே சமயம் தொழில் முனைய விரும்பும் பெண்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தொழில் முனைவு மேம்பாட்டுத் திட்டங்கள் (EDP) உட்பட பல்வேறு செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. டி.வி பழுது பார்த்தல், பிரின்டட் மின்சுற்றுப் பலகைகள், தோல் பொருள்கள், ஸ்கிரீன் பிரின்டிங் போன்ற தொழில் பிரிவுகளில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் வளர்ச்சிக் கழகமானது (MSME-DO) செயல்முறை / உற்பத்திப் பொருள் சார்ந்த தொழில் முனைவு மேம்பாட்டுப்

பயிற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. பெண் தொழில் முனைவோரின் சாதனைகளை அங்கீகரிக்கவும் பெண் தொழில் முனைவோருக்கு ஊக்கம் அளிக்கவும் ஆண்டின் "தலைசிறந்த பெண் தொழில் முனைவோர்" என்ற சிறப்பு விருதும் அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட பிரச்சினைகளை எதிர் கொள்கின்ற பெண் தொழில் முனைவோருக்கு உதவவும், ஒருங்கிணைக்கவும் டி.சி - (குறு, சிறு, நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கழகம்) (MSME) அலுவலகமானது "பெண்கள் பிரிவு" ஒன்றை உருவாக்கியுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் செயல்படுத்தும் வருவாய் ஈட்டும் திட்டம் போன்ற பல்வேறு அரசு சார்ந்த திட்டங்கள் உள்ளன. வருவாய் ஈட்டும் இந்தத் திட்டமானது பொருளாதார ரீதியில் பிறரைச் சார்ந்து இருக்காமல் தானே வருவாய் ஈட்டும் வகையில் பயிற்சியும் வருவாயும் ஒன்றாகச் சேர்ந்த முறையிலான நடவடிக்கைகளைத் தொடங்க பெண்களுக்கு உதவி செய்கிறது.

மகிளா உதயம் நிதி மற்றும் மகிளா விகாஸ் நிதி என்ற இரண்டு சிறப்புத் திட்டங்களை சிறுதொழில் வளர்ச்சி வங்கி (சிட்பி வங்கி) (SIDBI) நடைமுறைப்படுத்தி வருகிறது. இதில் மகிளா உதயம் நிதித் திட்டமானது பெண் தொழில்முனைவோருக்கு சம வாய்ப்பைத் தரும் ஒரு விசேஷமான திட்டமாகும். மகிளா விகாஸ் நிதித் திட்டமானது பெண் தொழில் முனைவோருக்கு சம வாய்ப்பைத் தரும் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த திட்டமாகும். பெண்கள் வருவாய் ஈட்டும் தொழில் நடவடிக்கைளில் ஈடுபடத் தேவையான அபிவிருத்தி உதவிகளை இந்தத் திட்டம் வழங்குகிறது. பெண்களுக்கு விசேஷ முக்கியத்துவம் தரும் வகையிலான குறுகியகாலக் கடன் வசதிகளைத் தருகின்ற முறைசாராத வழிமுறையை சிட்பி வங்கி உருவாக்கியுள்ளது. இதுமட்டும் அல்லாமல், பெண்களுக்காக பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு கடனைப் பயன்படுத்துதல் மற்றும் கடன் வழங்கும் திறன்கள் குறித்து பயிற்சி வகுப்புகளையும் சிட்பி நடத்தி வருகின்றது. மத்திய சமூக நல வாரியம் செயல்படுத்தும் சமூக - பொருளாதாரத் திட்டத்தின் கீழ் தொழில் உற்பத்திப் பிரிவினை அமைக்கவும் மானியம் தரப்படுகிறது.

**தொழில் முனைதல் மற்றும் புத்தாக்கச் செயல்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் சில முயற்சிகள்:**

**ஸ்டார்ட் அப் இந்தியா:** இந்திய அரசு ஸ்டார்ட் அப் இந்தியா திட்டத்தை தொடங்கியதன் மூலம் தொழில் முனைதலை ஊக்குவிக்கிறது, ஆதரிக்கிறது மற்றும் உதவிகள் செய்கிறது. அதாவது தொழிலின் அனைத்து கட்டங்களிலும் இந்த உதவி மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட ஜனவரி 2016இல் இருந்து தொழில் தொடங்க ஆசைப்படும் எண்ணற்றோர் வெற்றிகரமாகத் தொழில் தொடங்கி உள்ளனர். ஸ்டார்ட் அப்புகளுக்கு எல்லா பரிமாணங்களிலும் அதாவது 360 டிகிரி அணுகுமுறையில் உதவி செய்யப்படுகிறது. இந்தத் திட்டம் நான்கு வார கால இலவச ஆன்லைன் பயிற்சி வகுப்பை வழங்குகிறது. நாடு முழுவதும் ஆராய்ச்சிப் பூங்காக்கள், இன்குபேட்டர்கள் மற்றும் ஸ்டார்ட் அப் மையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. கல்வியாளர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் வலுவான நெட்வொர்க்கை ஏற்படுத்துவதன் மூலம் இவை உருவாக்கப்பட்டுள்ளன.



**பெண்களுக்கான பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு ஆதரவுத் திட்டம் (STEP):**

முறைசார் தொழில் பயிற்சி பெற வாய்ப்பில்லாத பெண்களுக்கு அதிலும் குறிப்பாக கிராமப்புறப் பெண்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஸ்டெப் என்ற இந்தத் திட்டத்தை தொடங்கியது. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம், நிதி ஆயோக் ஆகியன அண்மையில் 30 ஆண்டுகள் பழமையான இந்தத் திட்டத்தின் வழிமுறைகளை இன்றைய காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைத்துள்ளன. இந்தப் புதிய முயற்சியின் பலன் 16 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இந்தியப் பெண்களுக்கும் சென்று சேர்கிறது. இந்தத் திட்டம் விவசாயம், தோட்டக்கலை, உணவு பதப்படுத்துதல், கைத்தறி, பூத்தையல் போன்ற பாரம்பரிய கைவினைக் கலைகள், பயணம் மற்றும் சுற்றுலா, விருந்தோம்பல், கணிப்பொறி மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகள் போன்ற பல்வேறு பிரிவுகளில் திறன் பயிற்சி அளிக்கிறது.

**ஸ்டேன்ட் அப் இந்தியா:** இந்தத் திட்டம் 2015இல் தொடங்கப்பட்டது. இந்தியாவில் முன்னுரிமை பெறாத பிரிவினருக்கு நிறுவனக் கடன்கள் கிடைக்க உதவுவதை ஸ்டேன்ட்அப் இந்தியா திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெண் தொழில் முனைவோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் பொருளாதாரத்தில் பங்கேற்க உதவுவதும் இந்தியாவின் வளர்ச்சியால் கிடைக்கும் பலன்கள் அவர்களுக்கும் கிடைக்கச் செய்வதும் இந்தத் திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் எஸ்.சி அல்லது எஸ்.டி சமுதாயத்தில் இருந்து குறைந்தது ஒரு பெண் மற்றும் ஒரு தனிநபருக்கு சுற்றுச்சூழலைப் பாதிக்காத தொழில்களைத் தொடங்க உதவுதல், சேவைகள் அல்லது வர்த்தகப் பிரிவில் தொழில் தொடங்க ரூ.10 இலட்சம் முதல் ரூ.1கோடி வரை கடன்கள் வழங்கப்படுகின்றன. சிறு தொழில் முனைவோர்களுக்கு ஸ்டேன்ட்அப் இந்தியா போர்ட்டல் ஒரு டிஜிட்டல் பிளாட்பார்ம் ஆகச் செயல்படுகிறது. இந்தப் போர்ட்டலானது நிதி அளித்தல் மற்றும் கடன் உத்திரவாதம் குறித்த தகவலையும் தருகிறது.




**வர்த்தகம் தொடர்பான தொழில் முனைவுக்கான உதவி மற்றும் மேம்பாடு (TREAD):**

இந்தியாவில் முன்னுரிமை பெறாமல் பின்தங்கி இருக்கின்ற பெண்களுக்கு தொழில் தொடங்க கடன் கிடைக்காமல் இருக்கிறது என்ற முக்கியப் பிரச்சினையை எதிர்கொண்டு அதனைத் தீர்ப்பதற்காகவே இந்த வர்த்தகம் தொடர்பான தொழில் முனைவுக்கான உதவி மற்றும் மேம்பாட்டுத் (TREAD) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. விருப்பம் உள்ள பெண்களுக்கு அரசு சாராத தொண்டு நிறுவனங்கள் (NGO) மூலம் கடன் வசதி கிடைக்க இந்தத் திட்டம் உதவுகிறது. அதற்கேற்ப பதிவு பெற்ற தொண்டு நிறுவனங்களிடம் இருந்து பெண்கள் உதவிகளைப் பெறலாம். கடன் வசதிகளைப் பெறுதல், ஆலோசனை மற்றும் பயிற்சி வாய்ப்புகளைப் பெறுதல் ஆகிய உதவிகள் தொழில்களைத் தடையின்றி தொடங்க பெண்களுக்குக் கிடைக்கும். விவசாயம் சாராத நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதற்கான வழிமுறைகளையும் இந்தத் திட்டமானது முன்வைக்கிறது.

**பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் திட்டம் (PMKVY):**

இந்தத் திட்டமானது திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தின் (MSDE) ஒரு முன்னோடித் திட்டமாகும். இளைஞர்களுக்குத் தேவையான வாழ்வாதாரம் கிடைக்கவும் வேலை கிடைப்பதற்கான தகுதிகளைப் பெறுவதற்குத் தேவையாக உள்ள வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் தொழிற்சாலை சார்ந்த திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சிகளை வழங்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. முன்பே தொழில்திறன்களைக் கற்று வைத்துள்ள தனிநபர்களின் அனுபவம் அல்லது அவர்களுக்கு முன்பே இருக்கின்ற திறன்கள் போன்றவை மதிப்பீடு செய்யப்பட்டு "முன்பே கற்றறிந்தவர் என்ற அங்கீகாரம்" அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி மற்றும் மதிப்பீட்டுக்கான கட்டணங்களை அரசே செலுத்தி விடுகிறது.

**சமமான அதிகாரம் அளித்தல் மற்றும் மேம்பாட்டுக்கான அறிவியல் (SEED):**

பெண்கள் மீது தனி கவனம் செலுத்துகின்ற களப்பணியாளர்கள் மற்றும் முனைப்பூக்கம் உள்ள விஞ்ஞானிகள் ஆகியோருக்கு சமூகப் - பொருளாதாரப் பலன்கள் தொடர்பான குறிப்பிட்ட இடம் சார்ந்த, குறிப்பிட்ட செயல்முறை சார்ந்த திட்டங்களை அதிலும் சிறப்பாக ஊரகப் பகுதிகளில் அமல்படுத்த எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதையே சமமான அதிகாரம் அளித்தல் மற்றும் மேம்பாட்டுக்கான அறிவியல் (SEED) குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

தேசிய அளவிலான ஆய்வுக்கூடங்கள் மற்றும் இதர விசேஷமான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவற்றை கீழ்மட்ட நிலையில் புத்தாக்க அடிப்படையில் ஒருங்கிணைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிபுணர்களிடம் இருந்து உள்ளீடுகளைப் பெற உதவுதல், தரமான உள்கட்டமைப்பு வசதிகளைப் பெறுதல் ஆகியன இதில் அடங்கும். சமமான அதிகாரம் அளித்தல் மற்றும் மேம்பாட்டுக்கான அறிவியல் (SEED) திட்டமானது வளர்ச்சி என்பது அனைவருக்கும் சமமானதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

அப்போதுதான் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒட்டுமொத்தப் பலன்கள் மக்கள் தொகையின் பெரும்பான்மைப் பிரிவினருக்கும் சென்று சேரும். அதிலும் குறிப்பாக பின்தங்கிய பிரிவினருக்கு பலன்கள் கிடைக்க வாய்ப்பு கிடைக்கும்.

பெண்கள் தொழில்முனைவு தளத்தை (WEP) நிதிஆயோக் தொடங்கியுள்ளது. இந்தியா முழுவதும் உள்ள பெண்களுக்கு அவர்களது தொழில்முனைவு ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒரு சூழல்சார்ந்த அமைப்பை கட்டமைத்துத் தருவதுவே இந்தத் தொடக்க நிலை நடவடிக்கையின் நோக்கம் ஆகும். புத்தாக்கம் சார்ந்த தொடக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், தங்களது வர்த்தகத்துக்கான நிலையான, நீண்டகால செயல் உத்திகளை உருவாக்குவதற்கும் இந்த நோக்கங்கள் உதவும். பெண் தொழில்முனைவோரின் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிப்பதை இந்த தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்தகைய மகளிர்தான் செயலூக்கமிக்க ஒரு புதிய இந்தியாவை உருவாக்குபவர்களாக இருப்பார்கள். இத்தகைய உள்ளார்ந்த முனைப்புகள் மூன்று தூண்களில் வெளிப்படுகின்றன. இந்தத் தூண்கள் மீதுதான் பெண்கள் தொழில்முனைவுத் தளம் (WEP) கட்டமைக்கப்பட்டுள்ளது.

**அவை:**

1. இச்சா சக்தி (ஆசைப்படும் தொழில் முனைவோர் தங்களது விருப்பத்துக்கேற்ற தொழிலைத் தொடங்க ஊக்குவித்தல்)
2. கியான் சக்தி (பெண் தொழில் முனைவோர்களுக்கு தொழில் முனைவை வளர்த்தெடுக்க உதவியாக இருக்கும் அறிவு மற்றும் சூழல்சார் அமைப்பு)
3. கர்மா சக்தி (வர்த்தகத்தைத் தொடங்கவும் அந்த வர்த்தகத்தை வளர்த்தெடுக்கவும் பணிசெய்யும் இடத்தில் தொழில் முனைவோருக்கு உதவி செய்தல்).

**பெண்களுக்கான முத்ரா திட்டம்**

அழகு நிலையங்கள், தையல் பிரிவுகள், தனிப்பயிற்சி மையங்கள் போன்ற வர்த்தகங்கள் மற்றும் சிறிய அளவிலான புதிய தொழில்களைத் தொடங்க விரும்பும் தனிப்பட்ட பெண்களுக்கு உதவும் வகையில் இந்திய அரசு இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெற எந்த வகையான பிணைப்பாதுகாப்பும் தர வேண்டியது இல்லை. இந்தக் கடன் வசதியை மூன்று திட்டங்களின் கீழ் பெறலாம்.

I. சிஷு - கடன் வரம்பு ரூ.50,000 என வரையறுக்கப்பட்டுள்ளது. தொடக்க நிலையில் தொழில் தொடங்க உள்ளவர்கள் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

II. கிஷோர் - இந்தத் திட்டத்தின கீழ் கடன் தொகையின் அளவு ரூ.50,000 முதல் ரூ.5 இலட்சம் வரை இருக்கிறது. ஏற்கனவே நன்கு பராமரிக்கப்படும் தொழில் பிரிவின் உரிமையாளராக உள்ளவர்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

III. தருண் - கடன் வரம்பு ரூ. 10 இலட்சம் ஆகும். ஏற்கனவே நன்கு செயல்பட்டு வருகின்ற தொழில்களை நடத்துபவர்கள் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**முடிவுரை:**

பொருளாதார வளர்ச்சியின் முக்கிய ஆதாரமாக பெண்களுக்கு தொழில்முனைதல் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. பெண் தொழில் முனைவோர் தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் புதிய வேலைகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். மேலும் சமுதாயத்துக்காக மேலாண்மை, நிறுவனம் மற்றும் வர்த்தகம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன் வைக்கிறார்கள். எனினும், இவர்கள் இன்னமும் அனைத்து தொழில் முனைவோர்களோடு ஒப்பிடும் போது சிறுபான்மையின ராகவே உள்ளனர். குடும்பம், சமுதாயம் இரண்டும் பொருளாதார ரீதியில் நன்கு இருக்கவும் வறுமை ஒழிப்புக்கும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தலுக்கும் வலுவான பங்களிப்பை பெண் தொழில் முனைவோர் செலுத்துகின்றனர்.

இதன் மூலம் அவர்கள் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (MDG) அடைவதற்கான பங்களிப்பைத் தருகின்றனர். எனவே உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் வளர்ச்சிக்கான நிறுவனங்கள் பல்வேறு திட்டங்கள், சலுகைகள், மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலமாக பெண் தொழில் முனைவோரின் அபிவிருத்திக்காக ஆக்கப்பூர்வமாகச் செயல்படுகிறார்கள்.

---

- **என்.வி.மாதுரி**, ஹைதராபாத்தில் உள்ள NIRD&PR நிறுவனத்தின் பாலின ஆய்வுகள் மற்றும் மேம்பாட்டுக்கான மையத்தில் பேராசிரியராகவும், அந்த மையத்தின் தலைவராகவும் (பொறுப்பு) உள்ளார்.

# அனைவரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை: இந்திய மகளிருக்கு அதிகாரமளிக்க சிறப்பான வழி

- லேகா சக்ரவர்த்தி
- பியூஷ் காந்தி

**அறிமுகம்:**

நிதிசார் மேம்பாடு தனிநபர் ஒருவரின் மேம்பாட்டிற்கு முக்கிய உந்துதலாக உள்ளது என்பது பொதுவான கருத்து. எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையால் பொருளாதாரத்தின் நிதி நிலைமைகளோடு மக்களை இணைப்பதன் மூலம் அவர்கள் நிதிசார்ந்த சேவைகளிலிருந்து புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது. குறைந்த வருமானம் உள்ளவர்களை வங்கிசார் துறைகளோடு இணைப்பதால் நெருக்கடியான காலத்தில் அது அவர்களைப் பாதுகாக்கிறது. முறைப்படியான வங்கிக் கடன்கள் எளிதாகக் கிடைக்கும் நிலையில் இப்படிப்பட்ட நிதி சார்ந்த அனைவரையும் உள்ளடக்கிய நிலைமை அதிக வட்டிக்கு கடன் கொடுப்பவர்களிடமிருந்து காப்பாற்றுகிறது.

பெண்கள் எந்த அளவுக்கு நிதிசார் வேலைகளில் சேருகிறார்களோ அந்த அளவிற்கு அந்த குடும்பத்தின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து நல்ல நிதி நிலைமை பெற்று அவர்களுடைய குழந்தைகளுக்கு சிறந்த கல்வியும், குடும்பத்திற்கு நல்ல சுகாதார நிலைமைகளும் ஏற்படுகிறது என்பதற்கு நல்ல சான்றுகள் உள்ளன.

எளிதாகக் கிடைக்கும் மலிவு வட்டி கடன்களால் பெண்கள் தொழில் முனைவை மேற்கொண்டு சுய உதவிக் குழுக்கள் மூலமாக குறுநிதி வழங்கும் அமைப்புகளிட மிருந்து கடன் பெற்று வணிகம் செய்யமுடியும். தனியாரிடமிருந்து கடன் பெறுவது மிகவும் எளிதாக உள்ள நிலையில் அதற்காக மிக அதிகப்படியான வட்டியை கொடுக்கும் நிலைமையில் அவர்கள் கடன்களில் மூழ்கி தங்கள் உடைமைகளையும் நகைகளையும் இழக்கிறார்கள்.

மக்களுக்கு கடன்கள் கிடைப்பதில் உள்ள தொல்லைகளை கண்டறிந்த அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும் முத்ரா திட்டம், முன்னுரிமைத்துறை கடன் வழங்கல் ஆகிய திட்டங்கள் மூலம் இந்த இடைவெளியை நிவர்த்தி செய்துள்ளன. நீண்டகால நிலைமையில் பணம் வழங்கு வங்கிகள் மற்றும் சிறுநிதி வங்கிகள் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்களை உள்ளடக்கிய நிதிநிலைசார் நிலைமை என்பது மகளிருக்கு அதிகாரமளித்தலில் கடன் சார்ந்த திட்டங்கள் மூலமே நிறைவு செய்ய முடியாது. நீண்ட காலமாக ஒரு போராட்டமாகவே உள்ள நிலைமை மகளிர் தங்களுடைய செல்வத்தை பாதுகாப்பாகவும், எளிமையாகவும் சிறந்த முறையிலும் சேமித்து வைப்பதாகும். முறைப் படுத்தப்படாத நிலைமைகள் என்பது, அவர்கள் நகைகளை வாங்குவது (காலப்போக்கில் அவசரத்தில் விற்கும் போது மதிப்பு குறைந்து போகும்) அல்லது வீட்டில் பணத்தை சேமித்து வைப்பது (இதனால் வட்டியிழப்பும் சில சமயங்களில் களவும் ஏற்படுகின்றன). பல குடும்பங்களில் மாதத் துவக்கத்தில் சம்பளம் வரும்போது, செலவுகள் மிகுந்து மாதமுடிவில் பணத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் மகளிர் தலைமையில் இயங்கும் குழுவில் அவர்கள் முறையாக சேமித்து வைத்தால் மாதம் முழுவதும் உள்ள செலவுகளை சமாளித்து சேமிப்புத் திட்டங்களிலும் பயன் பெறலாம். எல்லா மக்களுக்கு வங்கிச் சேவை அளிக்கும் ஒரு திட்டமாக சமீபத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட பிரதம மந்திரி ஜன்தன் திட்டம் விளங்குகிறது.

ஆயுள் காப்புத் திட்டங்கள், மக்களிடையே பெருகி வருவதும்கூட, எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையாக இப்போது பார்க்கப்படுவதை இந்தியாவும் உணருகிறது. மக்களின் உடல்நலம் மற்றும் உடல்நலக்குறைவு நிகழ்வுகளுக்கு அரசின் ஆயுள் பாதுகாப்புத் திட்டம் மற்றும் உடல்நலப் பாதுகாப்பு திட்டம் ஆகியவை நல்ல பயனளிக்கின்றன. இவைகளோடு கூட இப்போது, அட்டல் ஓய்வூதிய திட்டமும் நல்ல பலனை அளிக்கிறது. இப்போது மகளிர், கணவன் மற்றும் குழந்தைகளின் விருப்பத்திற்குப் பணியாமல் தங்களுடைய வயோதிகக் காலத்தை பாதுகாத்துக் கொள்ளலாம். தங்களுக்கு ஏற்படும் எந்த வகையான நிகழ்வுகளுக்கும் எதிரான பாதுகாப்பு மேற்கொள்ள மகளிர் பல திட்டங்களைத் தேர்ந்தெடுக்கலாம். இதனால், அடித்தளத்து மகளிர் மிகவும் பயன்பெறுவர்.

நவம்பர் 2016இல் பணமதிப்பு இழப்புத் திட்டத்தை பிரதமர் மேற்கொள்வதற்கு முன்பு எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளான விற்பனை இடங்களில் வங்கிகளிலிருந்து பணத்தைப் பெறும் வகையிலான கருவிகள், வங்கி முகவர்கள் மற்றும் கைபேசி மூலம் வங்கி சேவைகளைப் பெறும் அனைத்து செயல்பாடுகளும் மகளிர் மிகுந்த அளவில் வங்கிச் சேவைகளை மேற்கொள்வதற்காகவே செய்யப்பட்டதாகும்.

இந்திய ரிசர்வ் வங்கி முகவர்களையும், பிற அலுவலர்களையும் நியமனம் செய்யும்படி பணித்தது. இப்படிப் பட்ட முகவர்களின் மூலம் கிராமப்புற மக்களுக்கு அவர்களுடைய வீட்டிலேயே வங்கிச் சேவை கிடைக்கிறது. 2007-08இல் எல்லோரையும் உள்ளடக்கிய நிதிசேவை நிதியம், மற்றும் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி சேவைசார் தொழில் நிதியம் என்ற இரண்டு நிதியங்கள் துவக்கப்பட்டன.

என்னவென்றால் இந்தக் கணக்குகளில் பெரும்பான்மையானவை, 0 இருப்பு தொகையாக உள்ளதால் மக்கள் வங்கிச் சேவைகளைப் பெறவில்லை என்பதே பொருள்.

**இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கைசார் நிலைமைகள்:**

- வங்கிகள் முகவர்கள் மூலம் கிராமப்புறம் மற்றும் தொலைதூர பகுதிகளில் உள்ளவர்களுக்கு வங்கிச் சேவைகள் அளிப்பதில் சிறப்பான விளைவு ஏற்படாததற்கு முக்கிய காரணம், இவற்றை சரியாக விளம்பரப்படுத்தப்படுத்தாதும், முகவர்களுக்குக் கொடுக்கப்படும் குறைந்த ஊக்கத்தொகையுமாகும். மேலும் கிராமப்புற மக்களும் கட்டடங்களில் செயல்படும் வங்கிச் சேவையையே விரும்புகிறார்கள்.
- அஞ்சல் நிலையங்கள் மூலம் பல நிதிசார் சேவைகள் வழங்கப்பட்டாலும் நமக்குள்ள அஞ்சல் நிலையங்களின் உள் கட்டமைப்பு வசதிகளை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்வில்லை. அஞ்சலகங்கள் மூலம் அளிக்கப்படக்கூடிய சேவைகளுக்கு ஏற்ப அவைகளில் தேவையான மனித வளம் இல்லாததே முக்கியமான குறைபாடாகும்.

**இந்தியாவில் முறைப்படுத்தப்பட்ட வங்கிச் சேவைகளின் இன்றைய நிலைமை**

| ஆண்டு | கணக்கு (ஆண்கள்) | கணக்கு (மகளிர்) | நிதிநிறுவன கணக்கு, வருமானம், ஏழ்மையானவர்கள் சதவிகிதம் | கைப்பேசி அல்லது வலைதளம் மூலம் வங்கிச்சேவை உள்ளவர்கள் (ஆண்கள்) | கைபேசி அல்லது வலைதளம் மூலம் வங்கிச்சேவை உள்ளவர்கள் (பெண்கள்) | குடும்ப உறுப்பினர் மற்றும் நண்பர்களிட மிருந்து கடன் பெற்றவர்கள் (ஆண்கள்) | குடும்ப உறுப்பினர் மற்றும் நண்பர்களிட மிருந்து கடன் பெற்றவர்கள் (பெண்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| 2011 | 44% | 26% | 27% | | | 22% | 18% |
| 2014 | 63% | 43% | 43% | | | 35% | 30% |
| 2017 | 83% | 77% | 77% | 7% | 4% | 35% | 30% |

**ஆதாரம் : பன்னாட்டு நிதிசார் தகவல்கள் • விவரங்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்களை சார்ந்தவை.**


எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை என்பது 2005-06இல் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆண்டு அறிக்கையில் தெளிவுபடுத்திய, பெரும்பான்மையான மக்கள் வங்கிச் சேவை பெறுவதில் உள்ள குறைகள் என்ற கருத்தின் வெளிப்பாடேயாகும். இந்த அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளின் செயல்பாடுகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி குறைந்த வருமானம் உள்ள மக்கள் குறைந்தபட்ச நிதி இல்லாமலும்கூட அல்லது மிகக்குறைந்த அளவிலான தொகையுடன் வங்கிக் கணக்கை துவக்கும் பல திட்டங்களை செயல்படுத்தி எல்லோரையும் உள்ளடக்கிய நிதிசார் சேவைகளை வழங்கியது.

கிராமப்புறங்களில் மக்கள் வாழும் இடங்களிலேயே வங்கிச் சேவைகளை வழங்க 2006இல்

**கொள்கைப் பரிந்துரைகள்**

2011-17 கால கட்டத்தில் 15 வயதிற்கு மேற்பட்ட மகளிரில் 77 சதவிகிதம் பேர் வங்கிக் கணக்கு வைத்திருந்தனர், இது 2011ஆம் ஆண்டு நிலைமையைவிட 51 சதவிகிதம் அதிகம் (பன்னாட்டு நிதிசார் தகவல்கள் 2017). எல்லா குடிமக்களுக்கும் பலவகையான வங்கிச் சேவைகளை வழங்க ஏதுவான பிரதம மந்திரி ஜனதன் யோஜனா திட்டத்தை தற்போதைய அரசு செயல்படுத்தியதை அடுத்து, இந்த வங்கிக்கணக்கு உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் அரசிடமிருந்து மக்கள் பெறும் அனைத்து சேவைகளுக்குமான தொகைகளும், சமூகப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுத் தொகைகளும் நேரடியாக செலுத்தப்படும். ஆனால், இதில் பிரச்சினை

அஞ்சலகங்களில் கடன் வழங்கப்படாத நிலையில் நாட்டிலுள்ள 1.54 இலட்சம் அஞ்சலகங்களில், 1.39 இலட்சம் கிராமப்புறங்களில் இருந்தாலும், அம்மக்கள் தனியாரிடமிருந்தே கடன்களைப் பெறுகிறார்கள். தற்போது. கடன் வழங்கல் உட்பட்ட அடிப்படை



சேவைகளை வழங்க அஞ்சலகங்களுக்கு வசதிகள் இல்லை.

- **நடமாடும் வங்கிகள்:** வலிமையான வங்கி உள் கட்டமைப்பு இருந்தும், கென்யா போன்ற நாடுகளில் உள்ளதை போன்ற நடமாடும் வங்கி மூலம் பெரும் மேம்பாட்டை நம்மால் ஏற்படுத்த முடியவில்லை. கென்யாவில் வயது முதிர்ந்தவர்களில் 70 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்களுக்கு நடமாடும் வங்கிக் கணக்குகள் உள்ளன.
- **விழிப்புணர்வுத் திட்டம்:** பெண்கள் பெரும்பாலும் முறைப்படுத்தப் படாத வகையில் கடன் பெறுகிறார்கள். 15 வயதிற்கு மேற்பட்ட மகளிரில் 30 சதவிகிதத்தினர் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்தே கடன்களைப் பெறுகிறார்கள். (பன்னாட்டு நிதிசார் தகவல்கள் 2017). இதனால், மக்களின் மனமாற்றம் ஏற்படாதது புலப்படுவதோடு, தூர்தர்ஷன் மூலமாக மேற்கொள்ளப்பட்ட நிதிநிலைமைசார் கல்வி மற்றும் விழிப்புணர்வு சிறப்பாக செயல்படவில்லை என்றும் தெரிகிறது.

மகளிர் உள்ளடக்கிய நிதிசார் சேவை சார்ந்த சில கொள்கைகளை இங்கே நாம் தெரிவு செய்கிறோம்.

1. **அங்கன்வாடி முறை**: இந்தியாவில் 10,53,000 அங்கன்வாடி மையங்கள் உள்ளன. இங்கு மேலும் ஒரு சேவையை துவங்குவது பெருந்தன்மையான செயலாக இருக்கும். மகளிருக்கு வங்கி சேவைகள் சார்ந்த கல்வி வழங்குவதால் நிதி நிலைமைகளில் சுயமாக செயல்பட முடியும். அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு வங்கித்துறையில் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களை வங்கி முகவர்களாக செயல்பட வைக்க முடியும். இதன் மூலம் ஏற்கனவே உள்ள உள் கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்திக் கொள்வதோடு அல்லாமல் வங்கிகள் இல்லாத கிராமப்புறப் பகுதிகளில் இந்த முகவர்கள் மூலம் மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களில் சேவைகளை வழங்க முடியும். இந்த மையங்களில் வங்கிக் கணக்கைத் துவக்கும் வசதிகளை அமைப்பதன் மூலம் அவர்களுக்கு வங்கிச் சேவையை வழங்குவதோடு கடன்களை எப்படி பயன்படுத்துவது, மானியங்கள் மற்றும் காப்பீட்டுத் திட்டங்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.
2. **மகளிருக்கான கடன் பெறும் தகுதிகளில் மாற்றம் தேவை :** மகளிருக்கு நிதி சார்ந்த வசதிகளை அளிக்கும் நேரத்தில் அவர்கள் கடன் பெறும் தகுதிகளைப் பற்றி நாம் மறந்து விடுகிறோம். ஒரு மனிதரின் வருமானம், கடன் நிலைமைகள், அடமானத்திற்காக வைக்கப்படும் பொருகள் ஆகியவற்றை சார்ந்தே ஒருவரின் கடன் பெறும் தகுதி நிர்ணயிக்கப்படுவதால், மகளிர் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, மாற்று சிந்தனையில் மகளிருக்கு கடன் வழங்கும் தகுதிகளை நிர்ணயிக்க வேண்டும். ஆப்ரிக்க நாடுகளில் செயல்படும் மனநிலை சார்ந்த தேர்வுகள் மூலம் மகளிரின் திறன்கள், அறிவு, மற்றும் நன்னடத்தை ஆகியவை சார்ந்தவற்றை கடன் பெறும் தகுதிகளாக நிர்ணயிக்கலாம்.
3. **முன்னுரிமைத் துறைகளுக்கான கடன்களின் பங்கு:** கிராமப்புற மக்களின் தேவைகளை அறிவதில் குறைபாடுகள் உள்ளன. கிராமப்புற பகுதிகளில் குறுந்தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் (பெரும்பாலும் பெண்கள்) தனியாரிடமிருந்து கடன் பெறுவதைத் தவிர்க்கும் வண்ணம் அவர்கள் தொழில் துவங்குவதற்கும், சுயமாக வியாபாரம் செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் ஏதுவாக சிறப்பு வங்கிக் கடன்களை வழங்க வேண்டும்.
4. **மகளிருக்கு ஏற்ற கடன் திட்டங்களை உருவாக்கல்:** இந்தியாவில் ஆண், பெண் சொத்து இடையே பெரிய இடைவெளி உள்ளது. ஆண்களுக்கு நிலம் மற்றும் வீடுகள் சார்ந்த சொத்து இருக்கும் நிலையில் பெண்களுக்கு நகைகள் மற்றும் பிற ஆபரணங்களே சொத்துக்களாக உள்ளன. ஆகவே, அவர்களுடைய

சொத்துக்கள் மீது கடன் பெறுவதற்கான வழிமுறைகளை இந்திய ரிசர்வ் வங்கி செய்யவேண்டும்.

5. **நிதிசார் கல்வி மற்றும் ஜனத்தொகை வயது நிலைமையின் பயன்களைப் பெறுவது**: இந்தியாவில் மக்கள்தொகையில் இளைஞர்களின் சதவிகிதம் மிக அதிகமாக உள்ள நிலையில் அவர்கள் பெருமளவில் இப்போது பணியில் சேருவார்கள். தற்போது, மகளிர் அதிகப்படியாக பணிகளில் சேர்வதால் அவர்களுக்கு வைப்பு நிதி, ஆயுள் காப்பு, அரசு சேவைகளுக்கான பயன்களை நேரடியாக வங்கிகள் செலுத்துவது ஆகியவை சம்மந்தப்பட்ட கல்வியும், விழிப்புணர்வும் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் வேலைக்கு சேர்வதற்கு முன்பாகவே வங்கிக் கணக்கின் மதிப்பை அறிந்து மற்றவர்கள் உதவி இல்லாமல் அவற்றைப் பயன்படுத்துவார்கள். இது மிகவும் முக்கியம். ஏனென்றால் வங்கிக் கணக்குகள் சார்ந்த விபரங்களும், அவை பற்றிய தவறான எண்ணங்களினாலும் மகளிர் அதிகமாக வங்கிக் கணக்குகளை துவக்குவதில்லை.

6. **கைபேசிசார் பணப்பரிவர்த்தனை - புதிய நிலைமை**: இந்தியாவில் தனியார் துறையின் முனைப்பால் பெருமளவிலான மக்கள் கைப்பேசியயை பயன்படுத்துகிறார்கள். கைபேசியில் எளிதாக ஒரு நொடியில் பணப்பரிவர்த்தனை செய்யலாம். ஸ்மார்ட் கைபேசி இல்லாதவர்கள் கூட குறுஞ்செய்திகள் மூலம் பணப்பரிவர்த்தனை செய்யலாம். ஆண்களும் பெண்களும் சரிசமமாக கைபேசிகளை பயன்படுத்துவதால் வங்கிகளுக்கு சென்று பணம் வழங்கும் இயந்திரங்களை பயன்படுத்த முடியாதவர்கள் கூட கைபேசிகள் மூலம் பணப்பரிவர்த்தனைகள் செய்யலாம். கிராமப்புறங்களிலிருந்து வங்கிகளுக்குச் செல்ல வேண்டிய செலவு இல்லாமலேயே இதை செய்ய வேண்டும். ஆகவே, கிராமப்புற மகளிருக்கு கைபேசி மூலம் பணபரிவர்த்தனை செய்யக் கூடிய கல்வியையும், செய்முறையையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். பஞ்சாயத்துக்களிலும், நியாயவிலைக் கடைகளிலும் இந்தப் பயிற்சிகளை வழங்கலாம். கைபேசிகளில் மிக எளிதான இந்த மின்னணு பணப்பரிமாற்ற செயலிகளை முதற்கட்டத்திலேயே சேர்த்து விற்கும்படி கைபேசி நிறுவனங்களைப் பணித்து, இந்தச் செயலிகள் அதிக வலைதள பயன்பாடு இல்லாத வகையில்கூட செயல்படுத்தச் செய்ய வேண்டும்.

7. **ஆய்வுகளும், பாலினம் சார்ந்த தகவல்கள் சேகரிப்பும்**: குடும்பங்களில் மகளிர் நிதி சார்ந்த சேவைகளை ஏன் பெறாமல் இருக்கிறார்கள் என்பதை அறிய ஆண், பெண் ஆகியோரின் தனித்தனி தகவல்கள் பெறப்பட வேண்டும். அதன் அடிப்படையிலேயே கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். பெண்களின் செய்முறை பழக்க வழக்கங்கள், விழிப்புணர்வு ஆகியவைகளை ஆராய்ந்து நிதிசார்ந்த துறைகளில் அவர்களின் பங்கு குறைந்திருப்பதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும். அப்படி செய்தால்தான் பொதுவான கொள்கைகளை வகுக்காமல் அவர்களின் பின்னணி சார்ந்த கொள்கைகளை வகுக்க முடியும்.

**முடிவாக**

மிகுந்த கடன் காரணமாக ஒரு விவசாயி, தற்கொலை செய்து கொள்வது, ஏழை மகளிர் ஒரு வங்கிக் கணக்கை துவக்க முடியாத நிலை, ஒரு தொழிலாளி தன்னுடைய சேமிப்புகளை திறன்பட பயன்படுத்த முடியாமை ஆகியவைகள் எல்லாம் நமக்கு குறிப்பிடுவது - பணத்தின் தேவை; அமைப்பு சார்ந்த நிதிச்சேவை ஆகியவை இருந்தால்தான் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை இந்தியாவில் ஏற்படும் என்பதைத்தான்.

முன்னுரிமைத் துறைகளுக்கு கடன் வழங்குவதன் மூலம், பொருளாதாரத்தில் மிகவும் நலிந்த மக்களை மையமாகக் கொண்டு கடன் வழங்குவதால் அவர்களுக்கு நல்ல நிதிச் சேவைகள் கிடைக்கின்றன. தென் மாநிலங்களில் இந்த முன்னுரிமைத் துறைக்கான கடன்களை மகளிர் சிறு வியாபாரத்திற்காக பெருமளவில் பெற்றிருப்பதால் அவர்கள் கடன் தொல்லையிலிருந்து ஓரளவு விடுபட்டிருக்கிறார்கள்.

ஆகவே, அங்கன்வாடி மற்றும் முன்னுரிமைத் துறை கடன் வழங்குதல் மூலம் நாம் பெண்களுக்கு அதிக நிதிசார் சேவைகளை வழங்கமுடியும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. பணப்பரிவர்த்தனை அற்ற செயல்பாடுகளுக்கு தேவையான பழக்க வழக்க மாற்றங்களை நாம் விழிப்புணர்வு மூலம் ஏற்படுத்த வேண்டும். கைபேசி வங்கிச் செயல்பாடுகள், அதற்கேற்ற உள் கட்டமைப்பு வசதிகள் மற்றும் வலைதளம்சார் நிதிப் பரிமாற்றங்களுக்கு ஏற்படும் இழப்புக்கு காப்பு வசதி ஆகியவை மூலம் நாம் இவற்றை விரிவுபடுத்தலாம்.

எனினும், மகளிருக்கு நிதிசார்ந்த சேவைகள் என்பது, ஒரு புதிய முயற்சியாக இருக்கும் நிலையில் சிறந்த திட்டங்களை நாம் செயல்படுத்த வேண்டும்.

---

- **லேகா சக்ரவர்த்தி**, கூடுதல் பேராசிரியர், பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனம்.

- **பியூஷ் காந்தி**, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆய்வாளர்.

# இஸ்லாமியப் பெண்கள் - உரிமைகளும், சவால்களும்!

- சயீதா ஹமீது

இஸ்லாமியப்பெண்கள் தங்களைத் தனி அமைப்பாக வரையறுத்துக் காண்பதை எப்போதுமே ஏற்பதில்லை. அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களுக்குமான வரையரைகளை இஸ்லாமியப் பெண்களும் பகிர்ந்துகொள்ள விழைகின்றனர். ஒரு இஸ்லாமியப் பெண்ணுக்கு அவரது மதம் அனைத்து நன்மைகளையும் வழங்கியுள்ளது ஆனால், இஸ்லாமிய சமூகம் தான் இஸ்லாமியப் பெண்களுக்கு வழங்க வேண்டியவற்றை வழங்கவில்லை. இஸ்லாத்தில் பாலினம் எவ்வாறு உருவகப் படுத்தப்பட்டுள்ளது என்பதை அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்டுள்ள பின்வரும் சூரத் அல் அஹ்சாப் வரிகளின் மூலம் காண்போம்:

**இஸ்லாமிய ஆண்களும் பெண்களும்**
**நம்பிக்கையுள்ள ஆண்களும் பெண்களும்**
**கீழ்ப்படியும் ஆண்களும் பெண்களும்**
**உண்மையான ஆண்களும் பெண்களும்**
**பொறுமையான ஆண்களும் பெண்களும்**
**பணிவான ஆண்களும் பெண்களும்**
**உதவும் தன்மையுள்ள ஆண்களும் பெண்களும்**
**கற்புள்ள ஆண்களும் பெண்களும்**
**அல்லாவின் புகழ்பாடும் ஆண்களும் பெண்களும்**
**இவர்களுக்கு அல்லா பெரும் மன்னிப்பையும், வெகுமதியையும் அளிப்பார்.**

இது தான் இஸ்லாமியப் பெண்கள் குறித்த உலகளாவிய குரான் மதிப்பீடு ஆகும். இது இஸ்லாமியப் பெண்களை அம்மதத்தில் உள்ள ஆண்களுக்கு இணையாக வைக்கிறது. அப்படியானால் குரானும், நபிகளும் மகளிருக்காக வலியுறுத்திய சமத்துவம், கண்ணியம், தகுதி ஆகியவை எங்கே? என்ற வினா எழும். உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியப் பெண்கள் தங்களின் அடையாளத்தை வெளிப்படுத்தத் தடையாக இருக்கும் ஒடுக்குமுறை கலாச்சாரத்தை உடைத்துக்கொண்டு வெளியேற இன்னும் தடுமாறுவது ஏன்? அவர்கள் ஏன் தொடர்ந்து ஒடுக்குமுறைக்கும், அத்துமீறலுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள்? ஏற்கனவே நலிவடைந்த சமுதாயத்தின் கீழ்நிலை பாலினத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அவர்களின் தகுதி உலகம் முழுவதும் முத்திரை குத்தப்பட்டுள்ளது. சுருக்கமாகக் கேட்கவேண்டுமானால் இஸ்லாமியப் பெண்கள் ஏன் இன்னும் வளர்ச்சிப் பாதைக்கு வெகு தொலைவில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்றுதான் கேட்கவேண்டும்.

இஸ்லாம் என்பது ஒரு வேறுபட்ட சூழலில் பிறந்த மார்க்கமாகும். இஸ்லாம் மார்க்கம் பிறப்பதற்கு முன்பிருந்த காலத்தில் பெண்கள் விலங்குகளை விட மிகவும் மோசமாக நடத்தப்பட்டனர். அந்தக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட பாவங்களை சீர்த்திருத்துவதற்காக உருவெடுத்தது தான் இஸ்லாமிய மார்க்கம் ஆகும். அந்தக்காலத்தில் முகமது நபிகள் நாயகத்தின் போதனைகளை சமுதாயத்தில் ஒருவிதமான புரட்சியை ஏற்படுத்தின. துயரக்கிணற்றில் மூழ்கடிக்கப்பட்டிருந்த பெண்களை நபிகளின் போதனைகள் மீட்டெடுத்ததுடன், அவர்களுக்கு முதன்முறையாக உரிமைகளையும் வழங்கியது. மகளிருக்கு அதிகாரமளிப்பதற்கான வழிகளை திருக்குரான் எங்களுக்குக் காட்டியது. அத்தகைய திருக்குரானை நாம் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய பாதையாகக் கருதாமல், ஆணாதிக்க மனநிலை கொண்ட இஸ்லாமியர்கள் அதையே தங்களின் இலக்காகக் கருதினார்கள். புதுமை மற்றும் விளக்கத்திற்கான கதவுகளை சில சுயநலசக்திகள் அடைத்தன. இஸ்லாமியர்களான நாம் மாறவில்லை; முன்னேறவில்லை. சில அடிகள் மட்டும் முன்னெடுத்து வைத்துவிட்டு அந்த இடத்திலேயே நின்று கொண்டிருக்கிறோம். நபிகளின் போதனைகளையும், செயல்பாடு களையும் படிப்பதை நிறுத்திவிட்டோம். அவருடைய செய்தியைப் புரிந்துகொள்வதை நிறுத்திவிட்டோம். மாறாக அவரது செய்தி குறித்து மற்றவர்கள் அளிக்கும் விளக்கங்களை நம்பத் தொடங்கிவிட்டோம். ஆரோக்கியமான செயல்பாடுகளைப் பின்பற்றுவதற்கு பதிலாக மற்ற மதங்கள் மற்றும் கலாச்சாரங்களில் உள்ள ஆணாதிக்க மாண்புகளைக் கடன் வாங்கினோம். உதாரணமாக வரதட்சணை வாங்குவது நமது வழக்கமாக மாறியிருக்கிறது. ஆனால், இஸ்லாத்தில் அது முழுமையாகத் தடை செய்யப் பட்டிருக்கிறது. இஸ்லாத்தில் சாதி என்ற தத்துவமே கிடையாது. சாதிப் படிநிலை இல்லை என்பது தான் இஸ்லாத்தின் கொள்கை. ஆனால், தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகம் நடத்திய கணக்கெடுப்பின்படி, 2004-05 ஆம் ஆண்டில் இஸ்லாமியர்களில் 41 விழுக்காட்டினர் தங்களை பிற

பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதுகின்றனர். சாதிமுறை இஸ்லாத்திற்குள் ஊடுருவிய பிறகு, பெண்களுக்கு எதிரான ஆணவக்குற்றங்களை செய்வதற்கு அது ஒரு காரணமாக மாறிவிட்டது. அதற்கான சிறந்த உதாரணம் 1997ஆம் ஆண்டில் இந்திய தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினராக நான் விசாரித்த முதல் வழக்கு தான். அந்த வழக்கில் ஹரியானா மாநிலம் மேவாத் மாவட்டம் சுதாகா கிராமத்தைச் சேர்ந்த மைமூன் என்ற 19 வயதுப் பெண் ஆணவப்படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க முயன்று தோல்வியடைந்தேன்.

தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் (1997-2000) என்ற வகையில் நாடு முழுவதும் உள்ள இஸ்லாமியப் பெண்களின் நிலையை ஆய்வு செய்ய முடிவு செய்தேன். அவர்களை சந்தித்துப் பேசி, அவர்கள் கூறுவதைக் கேட்டு பதிவுசெய்து, அவர்களின் குரல்களை இந்த நாட்டின் முன் நிறுத்த முடிவு செய்தேன். இதற்காக இஸ்லாமியப் பெண்களிடம் கருத்து கேட்கும் கூட்டங்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளுக்குட்பட்ட அகமதாபாத், இந்தூர், ஜபல்பூர், மும்பை, கோலாப்பூர், ஹைதராபாத், பெங்களூரு, சென்னை, கோழிக்கோடு, திருவனந்தபுரம், கொல்கத்தா, தேஜ்பூர் போன்ற நகரங்களில் நடைபெற்றது. ஒவ்வொரு கூட்டத்திலும் நூற்றுக்கணக்கான பெண்கள் வந்து கருத்து தெரிவித்தனர். எல்லா இடங்களிலும் வறுமைக்கு அடுத்தபடியாக பெரிய பிரச்சினையாக பெண்கள் கூறியது முஸ்லீம் தனிநபர் சட்டம் தங்கள் கழுத்தை நெறிக்கும் அளவுக்கு கடுமையாக உள்ளது என்பது தான். ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணங்கள், முத்தலாக்குகள், ஜீவனாம்சம் தராமலேயே பெண்களைக் கைவிட்டுச் செல்லுதல் ஆகியவை குறித்து பெண்கள் கதை கதையாய் கூறினார்கள். புடவைகளில் அலங்காரப் பணிசெய்யும் பணியாளர்கள், பீடி சுற்றுபவர்கள், வீட்டு வேலை செய்யும் பெண்கள், வேளாண்மை கூலித்தொழிலாளர்கள் ஆகிய அனைவரும் இந்த முப் பாதகம் குறித்து எடுத்துக் கூறினார்கள். இந்த கருத்துக் கேட்பு முயற்சி தான், இந்தியாவில் குரலற்ற நிலையில் உள்ள இஸ்லாமியப் பெண்களின் குரல் 2000 என்ற தலைப்பில் அவர்களின் பிரச்சினைகளை விளக்கும் வகையிலான அறிக்கையை தயாரித்து அளிக்கக் காரணமாக அமைந்தது.

அந்த ஆய்வின் முடிவில் தொகுக்கப்பட்ட பரிந்துரைகள் அரசு, மத அமைப்புகள், குடிமக்கள் சமுதாயம் ஆகியவற்றிடம் கொள்கைகளை வகுப்பதற்காக வழங்கப்பட்டன. இஸ்லாமிய சமுதாயத்திற்குள்ளும், அதன் மூலம் இஸ்லாமியப் பெண்களிடமும் அவர்களின் சமயம் சார்ந்த தலைவர்களின் கருத்துகள் தான் ஊடுருவிச்செல்லும் என்பதால் அவர்களின் விரிவான கருத்துகளை இந்த ஆய்வு பதிவு செய்திருந்தது. அந்த நேரத்தில் பல்வேறு இறையியல் நிலை கொண்டவர்கள் அங்கம் வகிக்கும் இஸ்லாமியர்களின் வலிமை வாய்ந்த தேசிய அமைப்பான இஸ்லாமிய தனிநபர் சட்ட வாரியத்தின் தலைவராக கல்வியாளர் மவுலானா அலி மியான் இருந்தார். இஸ்லாத்தில் பாலினம் குறித்தும், இந்த விஷயத்தில் இஸ்லாம் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்தும், பெண்களை ஒடுக்குவதற்காக இஸ்லாமிய தனிநபர் சட்டவாரியத்தின் பெயர் பயன்படுத்தப்படுவது குறித்தும் விவாதிக்க அவர் ஒப்புக் கொண்டார். அதைத் தொடர்ந்து பெண் உறுப்பினர்களை இஸ்லாமிய தனிநபர் சட்டவாரியம் சேர்த்துக் கொள்ளத்தொடங்கியது. இவர்கள் விட்டுக்கொடுக்கும் தன்மை கொண்டவர்களாகவும், குறைந்த எண்ணிக்கையிலானவர்களாகவும் இருந்தாலும் அது ஒரு முக்கியமான மாற்றமாக அமைந்தது. அவருக்குப் பிறகு சட்ட வாரியத்தின் தலைவராக வந்த மவுலானா முஜாகிதுல் இஸ்லாம் காஸ்மியும் இத்தகைய தாராளவாதக் கொள்கையைக் கடைபிடித்தார்.

இந்தப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும், எங்கள் பரிந்துரைகளின் பயன்களை அறிந்து கொள்வதற்குமான தேவை இருந்தது. அதனால், 2001ஆம் ஆண்டில் இஸ்லாமியப் பெண்கள் பேரவை என்ற புதிய அமைப்பை டாக்டர் சுக்ரா மெஹ்தி என்பவருடன் இணைந்து ஏற்படுத்தினேன். அந்த அமைப்பின் நிறுவன துணைத்தலைவராக இருந்த பேகம் சயீத் குர்ஷித் இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ஜாகிர் உசேனின் மகள் ஆவார். அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் ஏற்கனவே கருத்துக் கேட்புக்கூட்டங்கள் நடத்தப்பட்ட பல நகரங்களில், மீண்டும் கருத்துக் கேட்புக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. இஸ்லாமியப் பெண்களின் கருத்து நிலையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக கடந்த முறை கூட்டம் நடத்தப்படாத நகரங்களிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தொகுக்கப்பட்டு, ''எனது குரல் கேட்கப்பட

வேண்டும்'' என்ற தலைப்புடன் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டது. இஸ்லாமியப் பெண்களின் நிலையில் எந்த முன்னேற்றமும், மேம்பாடும் இல்லை என்பது இந்தக் கண்டுபிடிப்புகளில் தெரியவந்தது. தேசிய மகளிர் ஆணையத்தின் தலையீடுகள் இஸ்லாமியப் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கவில்லை என்பது உறுதியானது. அதேநேரத்தில் மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள் பெண்களிடையே முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பதைக் காட்டுவதற்கு அந்த கால அவகாசம் போது மானதல்ல என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். இவை யெல்லாம் நடந்தவை 2003ஆம் ஆண்டில் ஆகும்.

''எனது குரல் கேட்கப்பட வேண்டும்'' என்ற தலைப்பில் நாங்கள் அறிக்கை தாக்கல் செய்ததற்கு ஓராண்டு கழித்து, இஸ்லாமியர்களின் சமூக, பொருளாதார நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக நீதிபதி ராஜிந்தர் சச்சார் தலைமையில் உயர்நிலைக்குழுவை அமைக்க 2004ஆம் ஆண்டில் புதிதாகப் பொறுப்பேற்ற மத்திய அரசு முடிவு செய்தது. அக்குழுவின் மைல்கல் அறிக்கை 2007ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இஸ்லாமிய மக்களின் பின்தங்கிய நிலையை அந்த அறிக்கை எடுத்துக்கூறியது. கடந்த 67 ஆண்டுகளில் இஸ்லாமிய சமுதாயம் ஏற்கனவே பின்தங்கிக்கிடக்கும் தலித்துகள் மற்றும் பழங்குடியினரை விட பல விஷயங்களில் எந்த அளவுக்குப் பின்தங்கியுள்ளனர் என்பதை சச்சார் குழு அறிக்கை படம் பிடித்துக்காட்டியது. 2000ஆவது ஆண்டுக்குப் பிறகு இஸ்லாமிய தனிநபர் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று வெளிப்படையாக குரல் கொடுக்கும் இஸ்லாமிய மகளிர் அமைப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இஸ்லாத்தின் புனித நூலான குரானில் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி பாலினச் சமத்துவம் குறித்த தங்களின் கோரிக்கைகளை அப்பெண்கள் வலியுறுத்தத் தொடங்கினார்கள். இந்த நிகழ்வுகள் அனைத்துமே, திருக்குரானை பெண்கள் பார்வையில் தீவிரமாகவும், விமர்சனப் பார்வையுடனும் படிக்கத் தொடங்கியுள்ள இஸ்லாமியப் பெண் சான்றோர்கள் நிறைந்த இஸ்லாமிய உலகில் கடைபிடிக்கப்பட்டு வரும் போக்குகளின் தொடர்ச்சியே ஆகும்.

இஸ்லாமியப் பெண்கள் பேரவை தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து மேலும் பல குடிமக்கள் சமுதாய அமைப்புகள் இஸ்லாமியப் பெண்களின் பிரச்சினை குறித்து பேசத் தொடங்கின. பாரதிய முஸ்லிம் மகளிர் அமைப்பு (Bharatiya Muslim Mahila Andolan) என்ற புதிய அமைப்பு 2006ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அது தான் இஸ்லாமிய மகளிர் உரிமைகள் குறித்து பல்வேறு அமைப்புகளிடம் வாதிடும் அமைப்பாக மாறியது. அதைத் தொடர்ந்து இஸ்லாமியப் பெண்களின் பிரச்சினைகள் குறித்து இஸ்லாமிய தனிநபர் சட்டத்தின் எல்லைக்குட்பட்டு அகில இந்திய இஸ்லாமிய தனிநபர் சட்ட வாரியம் விவாதிக்கத் தொடங்கியது. அந்த நேரத்தில் மற்றொரு திருப்பமாக இஸ்லாமியப் பெண்களுக்கு ஆதரவாக நீதிமன்றங்கள் தீர்ப்பளிக்கத் தொடங்கின. 2009ஆம் ஆண்டில் குவாலியர் நகரைச் சேர்ந்த ஷபனா ஷாபானு-இம்ரான் கான் விவாகரத்து வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125ஆவது பிரிவின்படி, விவாகரத்து செய்யப்படும் பெண் மறு திருமணம் செய்து கொள்ளும் வரை விவாகரத்து செய்யப்பட்ட கணவனிடமிருந்து ஜீவனாம்சம் பெற உரிமை உண்டு என்று கூறியது. இதன் மூலம் இஸ்லாமியப் பெண்களுக்கு பயன் கிடைத்தது.

ஆனால், இஸ்லாமிய தனிநபர் சட்டத்தால் குடியாக்கள், இம்ரானாக்கள் போன்ற இஸ்லாமியப் பெண்கள் பழிவாங்கப்பட்ட செய்திகள் தான் ஊடகங்களில் மிகப்பெரிய தலைப்பு செய்திகளாக்கப்பட்டன. இஸ்லாமியப் பெண்களின் உரிமைகள் குறித்த ஆக்கப்பூர்வமான பல செய்திகள் இஸ்லாமிய கிராமங்களிலும், நகர்ப்புறங்களில் உள்ள சேரிகளிலும் புதையுண்டன. எப்போதுமே நல்லதும், கெட்டதும் கலந்து தான் இருக்கும். ஆனால், முஸ்லிம் பெண்கள் குறித்த பரபரப்பான செய்திகளை மட்டும் தான், அதிலும் குறிப்பாக ஷரியா சட்டத்தைக் கண்டிப்பது போன்ற செய்திகளுக்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. இந்தப் போக்கு தான் 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12ஆம் தேதி ஓர் இஸ்லாமியத் திருமணத்தை நடத்திவைக்கும் ஆர்வத்தை எனக்கு ஏற்படுத்தியது. இந்தியாவில் இஸ்லாமியத் திருமணத்தை நடத்தி வைத்த முதல் பெண்மணி நானாகத் தான் இருப்பேன் என்று நினைக்கிறேன். உலக அளவிலும் இவ்வாறு நடத்தி வைக்கப்பட்ட முதல் திருமணம் இது தான் என்று பல்வேறு தரப்பினரும் கூறிய போதிலும் கூட, உலக சாதனை படைத்து விட்டதாக நான் கருதவில்லை. நைஷ் ஹாசன், இம்ரான் அலி திருமணத்தைத் தான் லண்டனில் நான் நடத்திவைத்தேன். ஒரு

## புதிய பாதை படைத்த பெண்கள்!
## தியாபா கேடிவ் ஜுங் (1873-1921)

தியாபா கேடிவ் ஜுங் ஹைதராபாத்தில் பிறந்தவர். இவர் 1894ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றவர். இந்தியாவில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற முதல் இஸ்லாமியப் பெண் இவர் தான் என்பது குறிப்பிடத் தக்கது. தியாபா தமது திருமணத்திற்குப் பிறகு முறைசார்ந்த கல்வியைக் கைவிட்டு விட்டாலும், தொடர்ந்து அராபிக், பெர்சியன் மொழிகளைக் கற்றார். லண்டனில் இருந்து வெளிவரும் இந்தியப் பத்திரிகையில் இந்திய நாட்டுப்புறப் பாடல்கள் குறித்த தொகுப்பை வெளியிட்டார். அவரது உரைகளும், சமூகவியல் எழுத்துக்களும் இஸ்லாமிய கோணத்தில், குறிப்பாக கல்வி சார்ந்ததாகவே அமைந்திருந்தன. அன்வாரி பேகம் என்ற தலைப்பிலான இவரது நாவல் 1905ஆம் ஆண்டு வெளிவந்தது. இது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த புகழ்பெற்ற உருது புனைவுகளில் குறிப்பிடத்தக்கதாகும். ஹைதாராபாத் சமஸ்தானத்தின் உயர்குடி மக்களுக்கான வீடுகளின் ஒதுக்குப்புறமான உள்ளறைகளில் இந்த புதினக்காட்சிகள் நடைபெறுகின்றன. இந்திய இஸ்லாமிய சமுதாயம் மேற்கத்திய, காலனியத் தாக்கத்திற்கு ஆளாகி எவ்வாறு மாறுகிறது என்பது குறித்து இந்தப் புதினம் விளக்குகிறது. தியாபா பிரம்மசமாஜத்தின் ஆண்டு மகளிர் மாநாட்டை ஒருமுறை தலைமையேற்று நடத்தியுள்ளார். இவரது முயற்சியால் தான் அன்ஜுமன் குவாத்தீன் இஸ்லாம் போன்ற கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. இவரது அன்வாரி பேகம் புதினத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சில வரிகள்:

**''அந்த நாள் முடிவுக்கு வருவதைக் குறிக்கும் சயன மணியோசை ஒலிக்கிறது,**
**தாழ்ந்து வீசும் காற்று புல்வெளியை மெல்லத் தாலாட்டுகிறது**
**உழுது முடித்த உழவன் களைப்புடன் வீட்டை நோக்கி தளர்வாக நடக்கிறான்,**
**உலகம் இருட்டாகவும், என்னுடையதாகவும் மாறுகிறது!**

பெண் காஸியும், ஒரு பெண் சாட்சியும் முன்னின்று ஒரு திருமணத்தை நடத்தி வைத்தது பெரும் பரபரப்பாகவும், மிகப்பெரிய செய்தியாகவும் உருவெடுத்தது. ஆனால், இந்த விஷயத்தில் வெளியில் வராத உண்மை என்னவென்றால், பெண்கள் இத்தகைய சடங்குகளை செய்வதற்கு எதிராக எந்தத் தடையும் விதிக்காத ஒரே மதம் இஸ்லாம் என்பது தான். இஸ்லாத்தில் பெண் காஸிக்கள் இல்லை என்பது பாரம்பரியமான வழக்கம் என்பதும் மற்றொரு உண்மை. இந்த விஷயத்தில் இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால், லக்னோவில் நடைபெற்ற இந்த புரட்சிகரமான திருமணத்திற்கு எதிராக ஒரு கண்டனம் கூட எழவில்லை என்பது குறித்து ஊடகங்களில் பெரிதாக எந்த செய்திகளும் வெளிவரவில்லை என்பது தான்.

இந்தியாவில் இஸ்லாமியப் பெண்களுக்கான சட்ட உதவியை அதிகரிக்க இஸ்லாமியப் பெண் செயல்பாட்டாளர்களின் பங்கு மிகவும் முக்கியம் ஆகும். இஸ்லாமியப் பெண்களின் விடுதலைக்காக உருவாக்கப்பட்டு இப்போது நடைமுறையில் இல்லாமல் இருக்கும் இஸ்லாமிய சட்டங்களை மதத்தலைவர்கள் தொடர்ந்து செயல்படுத்தத் தவறியதால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு தீர்வு காண நாம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். முத்தலாக் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு திருக்குரானில் இஸ்லாமியப் பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகளை மீட்டெடுத்துத் தர முயலுகிறது. உச்சநீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பை நீதிபதிகள் நாரிமன், உதய் உமேஷ் லலித் ஆகியோருடன் இணைந்து வழங்கிய மூத்த நீதிபதி குரியன் ஜோசப், முத்தலாக்கை தடை செய்வதை எதிர்க்கும் சிறுபான்மைத் தீர்ப்பில் உள்ள முரண்பாடுகளைப் பட்டியலிட்டதுடன் கீழ்க்கண்ட கருத்தையும் கூறினார். ''இந்தியாவில் 1937ஆம் ஆண்டில் முஸ்லீம் தனிநபர் பயன்பாட்டு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு குரானின் கருத்துக்களுக்கு எதிரான எந்த செயலுக்கும் அனுமதி இல்லை. எனவே, முத்தலாக் முறைக்கு அரசியல் சட்டப்படி எந்தப் பாதுகாப்பும் இருக்கமுடியாது. எனவே, முத்தலாக்குக்கு அரசியல் சட்டப் பாதுகாப்பு வழங்கும் தலைமை நீதிபதியின் தீர்ப்புடன் நான் முரண்படுகிறேன்'' என்று நீதிபதி குரியன் ஜோசப் கூறினார்.

அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம் என்பது குறித்த விவாதம் கடந்த 70 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அனைவருக்கும் பொது சிவில் சட்டம் அல்லது முஸ்லிம் தனிநபர் சட்டத்திற்குள் ஏதேனும் புதிய சட்டம் கொண்டு வரப்படலாம் என்ற அச்சம் இஸ்லாமியர்களிடையே உள்ளது. முத்தலாக் வழக்கம்

## புதிய பாதை படைத்த பெண்கள்!

**ஷரிஃபா ஹமித் அலி (1883-1971)**

பேகம் ஷரிஃபா ஹமித் அலி குஜராத் மாநிலம் வதோதரா நகரில், முற்போக்கு சிந்தனையும், தேசியப் பார்வையும், தேசிய ஒற்றுமைக்காகப் பாடுபடும் குணமும் கொண்ட குடும்பத்தில் பிறந்தார். 1907ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் சுதேசி இயக்கத்திற்காக சேவையாற்றுவது என்றும், ஹரிஜன்களின் சமூக நீதிக்காக உழைப்பது என்றும் உறுதி பூண்டார். அதற்காக அவர் அகில இந்திய மகளிர் காங்கிரசில் இணைந்தார். மகளிர் காங்கிரசை சரோஜினி நாயுடு, ராணி ராஜ்வாடே, கமலாதேவி சட்டோபாத்யாயா ஆகியோருடன் இணைந்து நிறுவியவர்களில் இவரும் ஒருவர். ஒரு கட்டத்தில் மகளிர் காங்கிரசின் தலைவராகவும் இவர் பணியாற்றினார்.

பெண்களின் நிலை குறித்த ஐ.நா ஆணையத்தின் இந்தியப் பிரதிநிதியாக ஷரிஃபா ஹமித் அலி இடம் பெற்றிருந்தார். இஸ்லாமியப் பெண்களுக்கான திருமண வயதை உயர்த்துதல் உள்ளிட்ட சட்டச் சீர்திருத்தங்களை இவர் வலியுறுத்தினார். பெண்களுக்கு அதிக உரிமைகளை வழங்குதல் உள்ளிட்ட பிரிவுகளை திருமண பந்தத்தில் சேர்த்து, மாதிரி திருமண ஒப்பந்த (நிக்கா நாமா) வரைவையும் ஷரிஃபா ஹமித் அலி தயாரித்தார். இந்திய தேசிய காங்கிரசின் தேசிய திட்ட ஆணையம், இந்துஸ்தான் பாடநூல் குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும், அனைத்திந்திய மகளிர் கல்விச் சங்கத்தின் தலைவராகவும் ஷரிஃபா ஹமித் அலி பணியாற்றினார்.

தடை செய்யப்பட்டால் அது பொதுசிவில் சட்டத்திற்கு வழிவகுத்துவிடும் என்ற அச்சத்தில் தான் முத்தலாக்கை ரத்து செய்யக்கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் இஸ்லாமியர் தனிநபர் சட்ட வாரியம் வாதிட்டது. ஆனால், பொது சிவில் சட்டமும், முத்தலாக் முறையும் தனித்தனியான விஷயங்கள் என்று கூறி இரண்டையும் ஒன்றாக விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது. ஆனால், மத்திய அரசு அதன் அரசியல் இலாபத்திற்காக இந்தத் தீர்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமோ என்ற அச்சம் நீடிக்கிறது. இந்தப் பிரச்சினை இப்போது மாநிலங்களவையின் ஆய்வில் உள்ளது. இந்தப் பிரச்சினையின் தீவிரம் கருதி இது குறித்து விரிவான விவாதங்கள் தேவை என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த விஷயத்தில் அண்மையில் ஏற்பட்ட முன்னேற்றம் என்னவென்றால் இது தொடர்பாக சட்ட ஆணையம் அதன் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாக கடந்த வாரம் தாக்கல் செய்த சட்ட ஆணைய அறிக்கை தான். பலதார மணம், நிக்கா ஹலாலா, கள்ளக்காதல் சட்டம் ஆகியவை உச்சநீதிமன்றத்தின் ஆய்வில் இருப்பதால், அது குறித்த சீர்திருத்தங்கள் குறித்து சட்ட ஆணையம் விரிவாக விவாதித்தது. ஆனால், பரிந்துரை எதுவும் செய்யவில்லை. ''இஸ்லாத்தில் பலதார மணம் என்பது அனுமதிக்கப்பட்டது தான் என்றாலும் கூட இந்திய இஸ்லாமியர்களிடையே இது மிகவும் அரிதாகத் தான் நடைபெறுகிறது. ஆனால், இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்பதற்காக பிற மதங்களில் இருந்து இஸ்லாமிய மதத்திற்கு மாறுபவர்கள் தான் இந்த சட்டத்தை அடிக்கடி தவறாகப் பயன்படுத்து கின்றனர்'' என்று சட்ட ஆணையத்தின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. பலதார மணம் என்பது கிரிமினல் குற்றம் என்று நிக்கா நாமா தெளிவாகக் குறிப்பிடவேண்டும் என்று சட்ட ஆணையம் வலியுறுத்தியுள்ளது. சட்ட ஆணையத்தின் இந்த நிலைப்பாடு ஒரு தார மணம் குறித்த தார்மீக நிலைப்பாட்டின் அடிப்படையிலானது அல்ல. மாறாக இது ஆண்களுக்கு சாதகமாகவே செயல்படுத்தப்படுவதால் தான் இப்படி ஒரு நிலைப்பாட்டை சட்ட ஆணையம் எடுத்தது.

பொதுசிவில் சட்டம் குறித்த முக்கிய அறிவிப்பையும் சட்ட ஆணையம் வெளியிட்டுள்ளது. பொதுசிவில் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக காலம் இன்னும் கணியவில்லை என்று ஆணையம் கூறியுள்ளது. பல்வேறு சமுதாயங்களிடையே சமத்துவத்தை (பொதுசிவில் சட்டம்) ஏற்படுத்துவதை விட, சமுதாயங்களுக்குள் சமத்துவம் ஏற்படுத்துவதைத் தான் சட்ட ஆணையம் ஆதரிக்கிறது. இந்தியக் கலாச்சாரத்தின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுவது என்பது சில பிரிவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்து விடக்கூடாது என்று சட்ட ஆணையம் வலியுறுத்துகிறது. பெண்கள் அவர்களின் சுதந்திரம், சமத்துவம் ஆகிய இரண்டில் ஒன்றைத் தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று வலியுறுத்துவது நியாயமல்ல என்பதால் ''பெண்களுக்கு அவர்களின் சமத்துவ உரிமையில் எந்த சமரசமும் செய்து கொள்ளாமல் நம்பிக்கை மீதான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்'' என்று சட்ட ஆணையம் கூறியிருக்கிறது.

சொத்துரிமை மற்றும் வாரிசு உரிமை குறித்த இஸ்லாமியச் சட்டம் என்பது சன்னி, ஷியா ஆகிய இரு பிரிவுகளுக்கும் பொருந்தும் என்பதால் இந்த உரிமைகள் ஆண் வாரிசுகள் என்ற



அடிப்படையில் வழங்கப்படாமல் இறந்தவர்களுக்கு நெருக்கமான சொந்தங்கள் என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்றும் சட்ட ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

இஸ்லாமியப் பெண்கள் ஒடுக்கப்பட்டவர்கள் என்ற தோற்றத்தை உடைத்த இருபதாம் நூற்றாண்டு இஸ்லாமியப் பெண்களின் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் வகையில், இஸ்லாமியப் பெண்கள் பேரவை சார்பில் ''புதிய பாதை படைப்பவர்கள்: இந்தியாவின் 20 ஆம் நூற்றாண்டு இஸ்லாமியப் பெண்கள்'' என்ற தலைப்பில் கண்காட்சியும், ஆய்வரங்கமும் நடந்தது. இந்தப் பெண்களும் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, மௌலானா ஆசாத் போன்ற தலைவர்கள் வழியில் தேசத்தைக் கட்டி எழுப்பியவர்கள் ஆவர். அவர்கள் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்களாகவும், முதல் மூன்று பொதுத்தேர்தல்களில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சூரத் நகரில் பிறந்த ஷரிஃபா ஹமித் அலி அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராக இருந்தவர். பெண்களின் நிலை குறித்த ஐ.நா ஆணையத்தின் இந்தியப் பிரதிநிதியாக இடம் பெற்றிருந்தார். மாதிரி நிக்கா நாமாவை இவர் தான் உருவாக்கினார். இன்னொரு இஸ்லாமியப் பெண்ணான மோஃபிடா அகமது அஸ்ஸாம் மாநிலம் ஜோர்கத் தொகுதியிலிருந்து சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார். அஜீஸ் இமாம், அனிஸ் கித்வாய், குத்சியா ஐசாஸ் ரசூல் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகித்தவர்கள் ஆவர். குத்சியா சைதி என்ற பெண்மணி சுதந்திர இந்தியாவின் முதல் தொழில்முறை நாடகக் குழுவை ஏற்படுத்தியவர். சுரய்யா தியாப்ஜி இந்தியக் கொடியை வடிவமைத்தவர். இதில் பங்கேற்ற பலர் எழுத்தாளர்கள், கவிஞர்கள், வரலாற்று ஆசிரியர்களாக இருந்தவர்கள் ஆவர். அவர்களின் சாதனைப் பட்டியல் மிகவும் நீளமானது.

இஸ்லாம் மார்க்கம் பெண்களுக்கு எதிரானது; அது ஆணாதிக்க சமுதாயம் என்பது போன்ற வாதங்கள் அனைத்தும், புதிய பாதை படைக்கும் இந்த பெண்மணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் இஸ்லாமியப் பெண்கள் குழுவினரின் துணிச்சலான செயல்களால் தகர்க்கப்பட்டன. இஸ்லாமியப் பெண்கள் குறித்த உண்மை என்ன? அர்த்தமுள்ள விஷயங்கள் என்ன? என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

இதையே வாசிம் பரேல்வியின் வார்த்தைகளில் கூறுவதென்றால். எந்த இடத்தில் வைத்தாலும், அது ஒளி வீசும். விளக்குக்கு சொந்த வீடென்று ஒன்று கிடையாது!

- **சயீதா ஹமீது**, இந்திய சமுதாய, பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளர், தேசிய பெண்கள் ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர். ●

# பழங்குடியினப் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்: பிரச்சினைகளும் செல்லவேண்டிய பாதையும்

- தீபக் கந்தேகர்

இந்தியாவில் 705 வகையான பழங்குடியின சமுதாயங்கள் அல்லது குழுக்கள் உள்ளன. இவை தவிர, எளிதில் பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடிய நிலையில் இருக்கும் 75 பழங்குடியினப் பிரிவுகளும் தற்போது இருக்கின்றன. 2011ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 8.6 விழுக்காட்டினர் பழங்குடியின மக்களாவர். எண்ணிக்கையின் அடிப்படையில் பழங்குடியின மக்கள் தொகை 1961இல் இருந்த 3 கோடியிலிருந்து 2011இல் 10.4 கோடியாக அதிகரித்துள்ளது. இதில் பழங்குடியினப் பெண்களின் எண்ணிக்கை 5.19 கோடியாகும். ஒட்டுமொத்த பழங்குடியின மக்கள் தொகையில் பழங்குடியினப் பெண்களின் விழுக்காடு 49.7 ஆகும்.

பழங்குடியினருக்கான சமுதாய வலைப்பின்னலில் பட்டியலினப் பெண்கள் எப்போதும் சிறப்பான இடத்தைப் பெற்று வந்துள்ளனர். ஒரு சமுதாயத்தில் பெண்களுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்பதை அறிவதற்கு அவர்களின் பாலின விகிதம், அதாவது ஆயிரம் ஆண்களுக்கு எவ்வளவு பெண்கள் உள்ளனர் என்பதுதான் அடையாளமாகும். இந்தியாவில் அனைத்துத் தரப்பு மக்களிடையேயும் பெண்களின் பாலின விகிதம் கவலை அளிக்கும் வகையில் உள்ள நிலையில், பழங்குடியினத்தில் மட்டும் பெண்களின் பாலின விகிதம் சிறப்பாக உள்ளது. 2001ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஆயிரம் ஆண்களுக்கு 978 பெண்கள் என்ற நிலை இருந்தது. 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது இது ஆயிரம் ஆண்களுக்கு 990 பெண்கள் என்ற அளவுக்கு முன்னேறியிருக்கிறது. பழங்குடியின மக்களிடையே நிலவும் சமூக கலாச்சார நடைமுறைகளின் காரணமாகவே பெண்களுக்கு இந்த அளவுக்கு முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது. எனினும் பழங்குடியினப் பெண்களுக்குக் கிடைக்கும் இந்த முக்கியத்துவம் அவர்களின் முன்னேற்றத்திற்கு வகை செய்யவில்லை. இந்திய மக்களிடையே எழுத்தறிவு விகிதம் 73 விழுக்காடாகவும், பழங்குடியின ஆண்களிடையே 69 விழுக்காடாகவும் ஆகவும் இருக்கிறது. பழங்குடியின மக்களின் எழுத்தறிவு விகிதம் இந்தியாவின் சராசரி எழுத்தறிவு விகிதத்தைவிட குறைவாக இருக்கும் நிலையில், பழங்குடியினப் பெண்களின் எழுத்தறிவு விகிதமோ 49% என்ற அடிமட்ட அளவில் உள்ளது. இந்தியாவிலேயே பழங்குடியினப் பெண்களின் எழுத்தறிவு விகிதம்தான் மிகவும் குறைவாகும்.

இந்தியப் பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம் இந்தியாவில் உள்ள பழங்குடியின மக்களிடையே சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தவேண்டும் என்ற உன்னத நோக்குடன் 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பழங்குடியின மக்களின் கண்ணியம், கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் அதே நேரத்தில், அவர்களுக்கும், பிற சமுதாயக் குழுக்களுக்கும் இடையே மனித வாழ்நிலை குறியீடுகளில் காணப்படும் இடைவெளியை முடிவு சார்ந்த அணுகுமுறை மூலம், குறிப்பாக தரமான கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் குறைப்பதுதான் இந்த அமைச்சகத்தின் பணியாகும். பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக உழைக்க இந்த அமைச்சகம் உறுதிபூண்டிருக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மகளிருக்கு சமத்துவம் வழங்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, அவர்களுக்குச் சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயக ஆட்சிமுறை செயல் திட்டத்திற்கு உட்பட்டு நமது சட்டங்கள், வளர்ச்சிக்கொள்கைகள், திட்டமிடல்கள் மற்றும் திட்டங்கள் ஆகிய அனைத்தும் பல்வேறு துறைகளில் பெண்களின் முன்னேற்றத்தை உறுதி செய்யவேண்டும் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. பழங்குடியினப் பெண்களின் உரிமைகளையும், சட்டபூர்வமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டியவற்றையும் பாதுகாப்பதற்காக, 2003ஆம் ஆண்டில் 89ஆவது சட்டத்திருத்தத்தின் மூலம் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் (National Commission for Scheduled Tribes - NCST)அமைக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி

பழங்குடியினருக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் முறையாக செயல்படுத்தப் படுகின்றனவா என்பதை தேசிய பழங்குடியினர் ஆணையம் மேற்பார்வையிடுகிறது.

**அமைச்சகம் செயல்படுத்தும் திட்டங்கள்**

**ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள்**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275 (1) பிரிவின் கீழ் செயல்படுத்தப்படும் ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள் திட்டத்தின்படி, மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இங்கு சேர்க்கப் படுபவர்களில் பாதி பேர் பெண்கள். சுமார் 20 ஏகலைவா பள்ளிகள் மாணவிகள் மட்டும் பயிலும் பள்ளிகளாகும். பழங்குடியினத்தைச் சேர்ந்த குழந்தைகள், குறிப்பாக பெண் குழந்தைகள் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்குவதற்கான தளத்தை இந்தப் பள்ளிகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. தொலைதூரப் பகுதிகளில் வாழும் பட்டியலின மாணவர்களுக்கு தரமான இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்விகள் வழங்குவதுதான் இந்தத்திட்டத்தின் நோக்கமாகும்.

**கல்வி உதவித் தொகைகள்**

ஒன்பது மற்றும் பத்தாவது வகுப்பு பயிலும் பழங்குடியின மாணவர்களுக்கும் முன் மெட்ரிக் கல்வி உதவித்தொகைகளும், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி பயிலும் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு பின் மெட்ரிக் உதவித்தொகைகளும் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் மூலம் வழங்கப்படுகின்றன. உயர்கல்வி பயிலும் பழங்குடியின மாணவர்களுக்கான




தேசிய ஆய்வு உதவி மற்றும் கல்வி உதவித்தொகைத்திட்டம் என்ற பெயரில் ஆய்வு உதவித் தொகை வழங்கி எம்.பில்., பி.எச்டி போன்ற ஆய்வுப் படிப்புகளை படிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களில் பயிலும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஆய்வு உதவிகளில் 30% பழங்குடியின மாணவிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்குச் சென்று பட்ட மேற்படிப்பு, பி.எச்டி, முனைவர் ஆய்வுக்கு பிந்தைய படிப்பு ஆகியவற்றுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள மாணவ, மாணவியருக்கு தேசிய வெளிநாட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 20 பேருக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதில் 6 உதவித்தொகைகள், அதாவது 30 விழுக்காடு உதவித் தொகைகள் மாணவிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

**வாழ்வாதார உதவி**

பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான உயர் அமைப்பு தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஆகும். பழங்குடியினப் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, ‘ஆதிவாசிப் பெண்களுக்கு அதிகாரமளித்தல் திட்டம்’ என்ற சிறப்புத் திட்டத்தை இந்தக் கழகம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்படி ரூ.ஒரு இலட்சம் வரை மதிப்புள்ள தொழில் பிரிவுகளை தொடங்க பழங்குடியினப் பெண்களுக்கு 90% வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்த நிதியுதவி ஆண்டுக்கு 4% என்ற சலுகை வட்டியில் வழங்கப்படுகிறது. வருவாய்ப் பெருக்கத்துக்கான மற்ற திட்டங்களுக்கும் இந்த நிறுவனம் நிதியுதவி வழங்குகிறது. இவை தவிர பழங்குடியின கலைஞர்களுக்கு உதவும் வகையில் இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தை மேம்பாட்டு கூட்டமைப்பின் சார்பில் செயல்படுத்தப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை முதல், வனத்தில் கிடைக்கும் சிறு பொருட்கள் வரையிலானத் திட்டமும் பழங்குடியினப் பெண்களுக்கு பெருமளவில் உதவுவதாக அமைந்திருக்கிறது.

**வன உரிமைகள் சட்டம்**

பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டம் 2006இன் 2 (ஜி) பிரிவின்படி 18 வயது நிரம்பிய கிராமவாசிகளை உள்ளடக்கிய அமைப்பு கிராமசபை என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தின் ஒன்றாவது உட்பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள உரிமைகள் பரம்பரை பரம்பரையாக அனுபவிக்கத் தக்கதாகும் என்று பிரிவு 4(4) கூறுகிறது. ஆனால், இந்த உரிமைகளை மாற்றவோ, மற்றவர்களுக்கு எழுதிக் கொடுக்கவோ முடியாது. திருமணமான தம்பதியராக இருந்தால் அந்த உரிமை இருவரின் பெயரிலும் கூட்டாகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் குடும்பத்தலைவர் தனிநபராக இருந்தால் அவரது பெயரில் மட்டும் பதிவு செய்யப்பட வேண்டும். நேரடி வாரிசுகள் இல்லாவிட்டால் அடுத்த நிலை உறவினர் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் பிரிவு 4(4) கூறுகிறது. அதுமட்டுமின்றி, 2012ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டத்தின் 3(1) படி கிராமசபைக் கூட்டத்தை ஊராட்சிகள் தான் கூட்ட வேண்டும்; கிராமசபையின் முதல் கூட்டத்தில் 10 முதல் 15 உறுப்பினர்களைக் கொண்ட வன உரிமைகள் குழு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்களில் மூன்றில் இரு பங்கினர் பழங்குடியினராகவும், மூன்றில் ஒரு பங்கினர் மகளிராகவும் இருக்க வேண்டும். பழங்குடியினர் இல்லாத இடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களை தேர்வு செய்யவும் இந்த சட்டம் வகை செய்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275 (1) பிரிவின் கீழ் வழங்கப்படும் மானியங்கள் பழங்குடியினரின் முன்னேற்றம் மற்றும் அவர்கள் வாழும் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கானது ஆகும். இந்தியாவின் மற்ற பகுதிகளில் உள்ளதற்கு இணையாக பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் குறிப்பிட்டத் திட்டங்களை செயல்படுத்து வதற்காகவே மாநில அரசுகளுக்கு இந்த மானியம் வழங்கப்படுகிறது. திட்டங்களைத் தயாரிக்கும் போது பெண்களைப் பாதிக்கும் பிரச்சினைகள்/ பெண்களின் கவலைகள் சார்ந்த விஷயங்கள் மையமாகக் கொள்ளப்பட வேண்டும், திட்டங்களை வகுப்பதில் தொடங்கி செயல்படுத்தி முடிக்கும் வரை அனைத்து நிலைகளிலும் பெண்களை ஈடுபடுத்துவதையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று இத்திட்ட விதிகளில் கூறப்பட்டுள்ளது. பழங்குடி இனத்தவரின் விழாக்களை தேசிய அளவிலும், மாநில அளவிலும் ஊக்கப்படுத்தி அவர்களின் திறமைகள் வெளிப்பட அமைச்சகம் துணை செய்கிறது.

கல்வி, சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல், வாழ்வாதாரம், வேளாண்மை, நீர்ப்பாசனம், வருவாய் ஈட்டும் திட்டங்கள், சாலைகள் அமைத்தல், மின் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வளர்ச்சியை உறுதி செய்வதற்காக பல்முனை அணுகு முறையை பழங்குடியினர் கூறு திட்டம் கடைபிடித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி, பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் காணப்படும் வளர்ச்சிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிதியாகக் கருதப்படுகிறது. மத்திய அரசின் 41 அமைச்சகங்கள் / துறைகள் தங்களின் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டில் ஒரு குறிப்பிட்ட பிரிவை பழங்குடியினர் கூறு திட்டத்திற்கு ஒதுக்கவேண்டியது கட்டாயமாகும். அதேபோல், மாநில அரசுகளும், ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் பழங்குடியினரின் மக்கள்தொகை எவ்வளவு என்பதைக் கண்டறிந்து, அதற்கு இணையான தொகையை பழங்குடியினர் கூறு திட்டத்திற்கு ஒதுக்கவேண்டியதும் கட்டாயமாகும்.

பழங்குடியினப் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது தொடர் நடவடிக்கையாகும். அதைத் தொடர்ந்து மேற்கொள்ள அமைச்சகமும் உறுதி பூண்டுள்ளது. பல்வேறு சவால்கள் ஏற்படுகின்றன. அவை படிப்படியாக சரிசெய்யப்பட்டு வருகின்றன. பொதுப்பிரிவு மக்களுக்கும், பழங்குடியினருக்கும் இடையிலான இடைவெளியும் பொதுப்பிரிவு பெண்களுக்கும், பழங்குடியினப் பெண்களுக்கும் இடையிலான இடைவெளியும் நீக்கப்படவேண்டும். கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் ஆகியவை சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளுக்கு நல்ல பயன் கிடைத்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் பழங்குடியின மக்களை பொதுப்பிரிவு மக்களுக்கு இணையாக முன்னேற்றலாம் என்ற நம்பிக்கையை இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றி ஏற்படுத்தியுள்ளது.

- **தீபக் கந்தேகர்**, செயலாளர், பழங்குடியினர் நலத்துறை. ●

# பெண்களும் பொருளாதாரக் குடியுரிமையும்: இந்தியாவில் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான தேடல்


- பிருந்தா விஸ்வநாதன்
- சஞ்சனா சர்மா

இந்தியாவில் உள்ள வயதுக்கு வந்த பெண்களின் முதன்மைப்பணி வீட்டு வேலைகளை செய்வதாகத்தான் உள்ளது. குறைந்த எண்ணிக்கையிலான பெண்களே வருவாய் ஈட்டும் வேலைவாய்ப்புகளில் உள்ளனர். இந்த எண்ணிக்கையும் அதிக பொருளாதார வளர்ச்சிக் காலங்களில் குறைந்து வருகிறது. பெண்களுக்கு ஒரே மாதிரியான வேலை வழங்குதல், பெண்களுக்கான வேலைகளில் பாகுபாடு காட்டுதல், ஒரே மாதிரியான வேலைக்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேறுபட்ட ஊதியம் வழங்குதல், வளர்ச்சிக்கான வளங்களைப் பெற வாய்ப்பு மறுக்கப்படுதல் அல்லது ஓரளவு மட்டுமே வாய்ப்பு வழங்குதல் ஆகியவைதான் பெண்களுக்கான பொருளாதார சமத்துவமற்ற நிலையை அதிகரிக்கின்றன. அதுமட்டுமின்றி, முழுமையான குடியுரிமையை பெண்கள் பெறுவதற்கு இதுதான் பெரும் தடையாக உள்ளது. திறமை மற்றும் மனித மூலதனங்கள் முறையாக ஒதுக்கப்படாதது ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தை கடுமையாக பாதிக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கேற்பை 10 சதவீதம் அதிகரிப்பதன் மூலம் 2025ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 70,000 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு அதிகரிக்கும்.

தொழிலாளர் சந்தையில் பெண்கள் நுழைதல், பெண்களுக்கு எதிராக அதிக அளவில் பாகுபாடு காட்டப்படாமை குறித்து இந்தக் கட்டுரை விவாதிக்கிறது. இந்தியாவில் பெண்களின் வேலைவாய்ப்பு குறித்த புதிய தகவல்களையும் இக்கட்டுரை வழங்குகிறது. பெண்களின் வேலைவாய்ப்பில் அரசின் நடவடிக்கைகள் உள்ளிட்ட எந்தெந்த அம்சங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது குறித்தும் இந்தக் கட்டுரை விளக்குகிறது.

### பெண்களின் வேலைவாய்ப்பு குறித்த உண்மைகள்

இந்தியாவில் வேலைக்குச் செல்லும் பெண்களின் விகிதம் ஏற்கெனவே குறைவாக இருக்கும் நிலையில், உலகின் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் வேலைக்குச் செல்லும் பெண்களின் விகிதம் படிப்படியாக குறைந்து வருகிறது. வேலைக்குச் செல்லும் ஆண்கள், பெண்களிடையிலான விகிதாச்சார இடைவெளி நகர்ப்புறங்களில் மிகவும் குறைவாகவும், முன்னேற்றமில்லாமலும் தேங்கி நிற்கும் பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம், கிராமங்களில் குறைந்து வரும் பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம், இந்தியாவின் அனைத்து பிராந்தியங்கள் மற்றும் துறைகளிலிருந்து வேலைவாய்ப்புச் சந்தையில்




**இந்தியாவிலும் உலகநாடுகளிலும் வேலைக்குச் செல்லும் பெண்களின் விகிதம்**

இருந்து பெண்கள் வெளியேறுவது ஆகியவைதான் இந்தக் கட்டுரையின் முக்கிய அம்சங்களாகும். இந்தியாவின் தலைநகர் டெல்லியில் வேலைக்குச் செல்லும் பெண்களின் விகிதம் 17 சதவீதமாக உள்ளது. மற்ற மாநகரங்களில் இந்த விகிதம் 24 சதவிகிதமாக ஆக உள்ளது. லூதியானாவில் வேலைக்குச் செல்லும் ஆண்களின் விகிதம் 83 சதவீதமாக உள்ள நிலையில், வேலைக்குச் செல்லும் பெண்களின் விகிதம் வெறும் 12 சதவீதமாக உள்ளது.

பெருமளவிலான பெண்கள் கூடுதல் பணிக்கு தயாராக உள்ளனர். தங்களின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்பதைத்தான் இதற்கான காரணமாக அவர்கள் கூறுகின்றனர். வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பமும், தேவையும் பெண்களிடையே இப்போதும் அதிகமாக உள்ளது. வேலையில்லாத் திண்டாட்டமும் ஆண்களைவிட பெண்களிடம்தான் அதிகமாக உள்ளது. ஆண்களிடையே வேலையில்லா திண்டாட்டம் கிராமப்புறங்களில் 2 முதல் 3 சதவீதம் என்ற அளவிலும், நகர்ப்புறங்களில் 3 முதல் 4 சதவீதம் என்ற அளவிலும் உள்ளது. பெண்களிடையே வேலையில்லாத் திட்டாட்டம் கிராமப்புறங்களில் 3 முதல் 4 சதவீதம் என்ற அளவிலும், நகர்ப்புறங்களில் 7 முதல் 9 சதவீதம் என்ற அளவிலும் உள்ளது.


2011-12ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 2வது இந்திய மனித வாழ்நிலை மேம்பாட்டுக் கணக்கெடுப்பில் வேலைவாய்ப்புச் சந்தையில் தனிநபர்கள், குடும்பத்தினர் என இருபிரிவினருமே நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

பெண்களின் கல்வி விகிதம் அதிகரிக்க அதிகரிக்க, வேலை வாய்ப்பு விகிதம் குறைகிறது. உயர் மேல்நிலைக் கல்வி பயின்ற பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம் சற்று அதிகரிக்கிறது. 2005ஆம் ஆண்டு நிலவரத்தைவிட, 2011ஆம் ஆண்டு நிலவரத்தில் இதைத் தெளிவாக உணரமுடிகிறது. பெருநகரங்களில் இந்த நிலை அதிகமாகவும், பெருநகரங்கள் அல்லாத நகரங்களில் அதைவிட சற்று குறைவாகவும் காணப்படுகிறது எந்தவொரு கல்வி நிலையை எடுத்துக்கொண்டாலும், பெண்களின் வேலைவாய்ப்பின்மை நிலை 2011-12ஆம் ஆண்டில் 2 5 சதவீதம் அதிகமாக உள்ளது. கிராமப்பகுதிகளில் மேல்நிலைக் கல்வி மற்றும் பட்டயப்படிப்பு படித்த பெண்களிடையே இது 17 முதல் 18 சதவீதம் ஆக (ஆண்களில் 4 முதல் 5 சதவீதம்) உள்ளது.


வேலைவாய்ப்பின் தன்மை என்பது பிராந்தியங்கள், தொழில்துறைகள், தொழில் வகைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப மாறுபடுகிறது. தென் மாநிலப் பெண்களுடன் ஒப்பிடும்போது, வடமாநிலப் பெண்களின் வேலைவாய்ப்பு பங்கேற்பு விகிதம் குறைவாக உள்ளது. ஊரகப் பகுதிகளாக இருந்தாலும், நகரப் பகுதிகளாக இருந்தாலும் பெரும்பான்மையான பெண்கள் துணைப் பணிகளையே செய்து வருகின்றனர். பெரும்பாலும் அவர்கள் வேளாண்துறையில்தான் பணியாற்றுகின்றனர். வேளாண்மைக்கு அடுத்தபடியாக பெண்கள் அதிக அளவில் பணியாற்றுவது பொது சேவைகள் பிரிவு ஆகும். இந்தப் பிரிவில் அரசு தான் அதிக வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. அதற்கு அடுத்தபடியாக, ஜவுளித்துறை போன்ற தொழில் துறைகள் அதிக வேலைவாய்ப்பை வழங்குகின்றன.

### பெண்களின் வேலை பங்கேற்பு விகிதத்தைத் தீர்மானிக்கும் சக்திகள்

தேவைகள் அல்லது அமைப்பு சார்ந்த அம்சங்கள், வழங்கல் வீதம் அல்லது




பொருத்தமான வேலை உங்களுக்குக் கிடைத்ததா? வேலை செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?




பொருத்தமான வேலை உங்களுக்குக் கிடைத்ததா? வேலை செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

குடும்பப்பணிகள் சார்ந்த கலாச்சார அம்சங்கள், சமூகவிதிகள் ஆகியவைதான் வேலைவாய்ப்பில் பெண்களின் பங்கேற்பு விகிதத்தைத் தீர்மானிக்கின்றன.

வீட்டில் உள்ளவர்களை பெண்களே கவனித்துக்கொள்ள வேண்டிய சூழல், வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொள்வதில் ஆண்கள் குறைந்த அளவு நேரத்தை மட்டும் செலவிடுவது ஆகியவைதான் பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதம் மிகவும் குறைவாக இருப்பதற்குக் காரணமாகும். வீட்டு வேலைக்கு பணியாட்களை வைத்துக்கொள்ளுதல் அல்லது பிற குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதத்தை அதிகரிப்பதாக ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

போக்குவரத்து வசதியை எளிதாகப் பெறமுடிந்தால் அது பெண்களின் நேரத்தை சேமிக்க உதவியாக இருக்கும். இதன் மூலம் அவர்கள் வீட்டை கவனித்துக்கொள்வது தவிர்த்து சில பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட வகை செய்கிறது. ஊரகப்பகுதிகளில் அரசுப் போக்குவரத்து வசதியை அதிகரிக்கும் போது அப்பகுதியில் உள்ள பெண்கள், விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்புகளில் ஈடுபடுவதும் அதிகரிப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இது குடும்பம் மற்றும் சமுதாயத்தில் நிலவும் பாலின விதிகளைப் பொறுத்தே அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.


அரசு வேலைவாய்ப்புகள் குறைந்து வரும் நிலையில், தமிழ்நாடு, அசாம், குஜராத், கர்நாடகம், மராட்டியம் போன்ற சில மாநிலங்களில் அரசு வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது, அவர்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ள பெரு நிறுவன நிர்வாகக் கொள்கைகளின் ஓர் அங்கமாக நிர்வாகக்குழுவில் பெண்களுக்கு இந்தியா இடஒதுக்கீடு வழங்கியுள்ளது. 1913ஆம் ஆண்டிலிருந்து இது நடைமுறையில் உள்ளது. பெரு நிறுவனங்களில் பெண்கள் அதிக அளவில் பணி செய்வது, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மாண்பையும், செயல்பாட்டையும் உயர்த்துகிறது. அதே நேரத்தில், குடும்ப நிறுவனங்களில் காணப்படும் ஒருவிதக் கட்டுப்பாடு காரணமாக இவை குறைகின்றன.

குற்றங்களைத் தடுப்பதிலும், பாலியல் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதிலும் மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் விகிதம், இரவு நேரப்பணிகளில் பெண்களை அனுமதிக்கும் சட்டங்கள், பெண் தொழில் முனைவோர்களுக்கான ஊக்குவிப்புகள் ஆகியவற்றின் காரணமாக பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதம் பல்வேறு மாநிலங்களுக்கு இடையே மாறுபடுகிறது. எந்தெந்த மாநிலங்களில் எல்லாம் காவல்துறை / நீதித்துறை மீது அதிக நம்பிக்கையும், குறைந்த குற்ற விகிதமும் காணப்படுகின்றனவோ அங்கேயெல்லாம் பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதம் சற்று அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

நிறைவாக, அரசியலில் பெண்கள் அதிகமாகப் பங்கேற்கும் மாநிலங்களில் பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதம் மேம்படுகிறது. அரசியலில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் பங்கேற்கும் மாநிலங்களில் நன்றாக அமைக்கப்பட்ட சாலைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், வங்கிகள் போன்ற சேவைகள் சிறப்பாக வழங்கப்படுவதால் பெண்கள் அதிக எண்ணிக்கையில் வேலைக்குச் செல்கின்றனர். உள்ளடக்கிய வளர்ச்சிக்கான தேடலுக்கு அரசின் பங்களிப்பும் அவசியமாகும். பொதுச் சேவைகள் மற்றும் வசதிகளை ஏற்படுத்தித் தருவதுடன், ஒவ்வொரு குடும்பமும் சமுதாயத்தில் தாராளமான சமூகக் கலாச்சார விதிகளை ஏற்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தும் அமைப்பாக அரசு செயல்படவேண்டும்.

குறைவான வரி போன்ற அரசின் நிதிக்கொள்கைகள் பெண்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதில்லை. ஏனெனில், குறைவான வரி மூலம் கிடைக்கும் பயன் என்பது பெண்களுக்கு வேலை வழங்குவதற்காக ஆகும் செலவுகளை ஈடுசெய்யும் வகையில் இல்லை. அமைப்புசார்ந்த வேலை வாய்ப்புகளில் பெண்களின் பங்கேற்பு விகிதம் மிகவும் குறைவாகவும், வளர்ச்சியின்றி தேங்கிய நிலையிலும் இருக்கும் சூழலில், பெண் தொழிலாளர்கள் வீட்டிற்கு கொண்டு செல்லும் ஊதியத்தை அதிகரிக்கும் வகையில் அவர்கள் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தும் தொகையின் அளவு அவர்களின் ஊதியத்தில் 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்படும் என்று 2018ஆம் ஆண்டு மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு, பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதத்தை அதிகரிக்கவோ அல்லது பெண்கள் வேலையில் தொடர்ந்து நீடிப்பதை உறுதி செய்யவோ எந்த வகையிலும் உதவாது.

சமத்துவம், வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையிலான மோதலை அரசின் கொள்கைகள் போக்குகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வேலைவாய்ப்பு, பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதத்தை அதிகரித்ததுடன், மற்ற சந்தைகளில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான ஊதிய இடைவெளியைக் குறைக்கவும் உதவியது. இதனால், வறுமை, பெண்களின் நுண்ணூட்டச்சத்து நிலைமை, குழந்தைகளின் நுண்ணூட்டச்சத்து நிலைமை, அதிகாரம் அளித்தல் ஆகியவற்றில் சாதகமான தாக்கம் ஏற்படவும்



இந்தத் திட்டம் உதவியது. தேசிய ஊரக சுகாதார இயக்கம் விரிவுபடுத்தப்பட்டிருப்பதால், கிராமப்புற செவிலியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதத்தில் சாதகமான தாக்கம் ஏற்பட்டுள்ளது. அங்கன்வாடித் திட்டம், குழந்தைகள் காப்பகம் திட்டம் ஆகிய இரு திட்டங்களிலும் பெண்கள்தான் சேவை வழங்குபவர்களாக உள்ளனர். இந்த இரு திட்டங்களும் வலுப்படுத்தப்படுவதன் மூலம் கிராமப்புற இந்தியாவில் பெண்கள் அதிக அளவில் வேலைக்குச் செல்லும் நிலை உருவாகும். குழந்தைகள் காப்பகங்களில் பகல் நேரங்களில் குழந்தைகள் பாதுகாப்பாக கவனித்துக்கொள்ளப்படுவார்கள் என்பதால், அவர்களை கவனித்துக் கொள்ளும் வேலை குறைந்து, அவர்களின் தாய்மார்கள் பணிக்குச் செல்வது எளிதானதாக மாறும்.

2018ஆம் ஆண்டு மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில், பெண்கள் மற்றும் பொதுப் போக்குவரத்துக்காக 173 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் ஸ்கூட்டர் வழங்கப்படுவதும் மிகவும் முக்கியமான நடவடிக்கை ஆகும். இதன் பயன்களை நாம் பொறுத் திருந்துதான் பார்க்கவேண்டும்.

பணிக்குச் செல்லும் பெண்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படுத்தித்தர வேண்டும், பிறந்த ஊரிலிருந்து வெளியேறி நகரங்களில் பணியாற்றும் பெண்களுக்கு கட்டுபடியாகும் விலையில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாகவே பணியாற்றும் பெண்களுக்கான உறைவிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டன.

1961ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மகப்பேறு பயன்கள் சட்டம், 2017ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. அந்தத் திருத்தத்தின் மூலம் மகப்பேறு விடுமுறை கால அளவை 12 வாரங்களில் இருந்து 26 வாரங்களாக உயர்த்த வகை செய்யப்பட்டது. அதுமட்டுமின்றி, 26 வாரங்களுக்குப் பிறகு பெண்கள் வீட்டில் இருந்தபடியே பணி செய்யவும் இந்தச் சட்டத்திருத்தம் வகை செய்தது. குழந்தைகளை வளர்க்கும் பெண்களுக்கு அலுவலகத்திலேயே காப்பக வசதியை ஏற்படுத்தித் தருதல், விடுமுறை வழங்குதல் ஆகியவையும் சட்டத்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள். இந்த வசதிகள் அனைத்தும் அமைப்பு சார்ந்த தொழில் துறையில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே. அமைப்புசாரா துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு இந்தச் சலுகைகள் கிடையாது. அதன் தாக்கங்கள் குறித்து இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை.

மேக் இன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா திட்டங்களின் ஓர் அங்கமாக இந்தியப் பெண் தொழில் முனைவோருக்கு ஆன்லைன் சந்தைத் தரம் ஏற்படுத்தித் தரப்பட்டது. மகளிர் மின்னணு சந்தை என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த வசதி காரணமாக சந்தைகளைப் பெண்கள் எளிதில் அணுகமுடியும். பிரதம மந்திரியின் முத்ரா திட்டத்தின்கீழ் நிறுவனம் சாரா சிறுவணிகங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி, மகளிர் கடனாளிகளுக்கு வட்டியில் 0.25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம், பெண் தொழில் முனைவோர் ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்தகைய திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதும், இத்திட்டங்களை எளிதாக செயல்படுத்துவதும், பெண்களுக்குச் சாதகமான பொருளாதாரச் சூழலை ஏற்படுத்த வகை செய்யும். உதாரணமாக, சேவா வங்கி தொடக்கத்தில் பயிலரங்கை நடத்துவதுடன், நிதியுதவியையும் வழங்குவதன் மூலம் சுயவேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்துள்ளது. இதன் மூலம், சமூக கட்டமைப்பை அது அதிகரித்திருக்கிறது.

அதுமட்டுமின்றி, தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலம் செய்யப்படுவதைப்போல, மக்களின் சமூக நடத்தைகளை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்களின் சமூக நடத்தையை மாற்றுவதற்கு அதிக காலம் ஆகும் என்றாலும்கூட, சமூகப் பங்களிப் பின்மூலம் முன்னேற்றத்தை எட்டமுடியும் என்பதால், அதற்கு இத்தகைய நடவடிக்கைகள் மிகவும் அவசியமாகும். பெண்களின் நேரப்பயன்பாடு குறித்த தகவல்களைத் திரட்டுவதன் மூலம் அவர்கள் சமூகப் பயனுக்காக எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும். அதுமட்டுமின்றி, குடும்பப் பணிகளை ஆண்கள் எந்த அளவுக்கு பகிர்ந்துகொள்கிறார்கள் என்ற விவரங்களையும் இது வழங்கும். இந்தியாவில் தனிநபர்களின் மேம்பட்ட நலனுக்கு வீட்டு கவனிப்பும், வருவாய் ஈட்டுதலும் சம அளவு முக்கியமாகும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஆதரிக்கும் கொள்கைகளும், நிறுவனங்களும் மேம்படும் பட்சத்தில், பெண்கள் உள்ளிட்ட சமூக அளவில் நலிவடைந்த பிரிவினரின் பொருளாதாரக் குடியுரிமையும் மேம்படும் என்பதுதான் உண்மையாகும்.

- **பிருந்தா விஸ்வநாதன்**, பேராசிரியர், சென்னை பொருளாதாரப் பள்ளி, சென்னை.

- **சஞ்சனா சர்மா**, தகவல் பகுப்பாய்வு இணை ஆய்வாளர், ராயல் ஸ்காட்லாந்து வங்கி, புதுதில்லி.

# மகளிருக்கு அதிகாரமளித்தல் : சட்டவிதிகள்

- கீதா லூத்ரா

**"மக்களை விழிப்புறச் செய்ய முதலில் மகளிரை விழிப்புறச் செய்யவேண்டும். மகளிர் முன்னேறினால் குடும்பமே முன்னேறும். கிராமம் முன்னேறும், நாடும் முன்னேறும்." - பண்டித ஜவஹர்லால் நேரு.**


மகளிர் எந்தவொரு தடங்கலுமின்றி முடிவுகளை எடுப்பதும், ஆண்களுக்கு இணையாக மதிக்கப்படுவதும் இருந்தால்தான் அவர்கள் அதிகாரம் பெற்று நாடு முழுமையாக முன்னேற முடியும். நமது அரசியல் சாசன சட்டத்தில் அவர்களுக்கு சமத்துவம் வழங்கப்பட்டு பாலினம் சார்ந்த புறக்கணிப்பு இருக்கக்கூடாது என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் கூட, பழங்காலம் தொட்டே பெண்கள் வேற்றுமையாகக் கருதப்படுகிறார்கள்.

சமீப காலங்களில் உச்சநீதி மன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு விவாதித்த சில முக்கியமான விவரங்களை இந்தக்கட்டுரையில் நாம் பார்ப்போம். தற்போது மிகவும் பழமையாகிவிட்ட சட்டங்களை, குறிப்பாக இந்திய தண்டனைச் சட்டம் 1860 சார்ந்தவைகளாகவும், குறிப்பாக கற்பழிப்பு சார்ந்த பிரிவு 376, ஓரினச்சேர்க்கை சார்ந்த பிரிவு 377 மற்றும் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உடலுறவு சார்ந்த பிரிவு 497 ஆகியவை சார்ந்த சட்டங்களை உன்னிப்பாக ஆராய்ந்துவருகிறது. இந்த வழக்குகளின் விவாதங்களும், தீர்ப்புகளும் மிகவும் முக்கியமான வையாகும்.

ஒரு மனிதன் மற்றொருவரின் மனைவியோடு அவளது கணவரின் அனுமதி இல்லாமலும், கூட்டுறவு இல்லாமலும், கள்ள உறவு கொள்வதை பிரிவு 497 தண்டிக்கிறது. இது, பாலினம் சார்ந்த பாரபட்சமாகும். இது, அரசியலமைப்பு சட்டம் பிரிவு 14 மற்றும் 15க்குப் புறம்பானதாகும். முதலாவதாக, தன் கணவனின் ஒரு உடமையாக பெண்ணை இது கருதுகிறது. இந்தச் செயலை ஒருவர் அப்பெண்ணின் கணவரின் ஒப்புதலோடும், ஒத்துழைப்போடும் செய்தால் அது குற்றமல்ல. இரண்டாவதாக, இப்படிப்பட்ட கள்ள உறவுகளில் ஆண் குற்றம் இழைத்தவராகவும், இந்த குற்றத்திற்கு உடந்தையாக இருந்த மாற்றான் மனைவி தண்டிக்கப்படாமல், பாதிக்கப்பட்ட ஒருவராகவுமே கருதப்படுகிறார். மூன்றாவதாக, ஒருவர், தன் மண வாழ்க்கைக்கு வெளியே, இப்படிப்பட்ட உறவு வைத்திருந்தால் அவரையும், அவரோடு உறவில் இருக்கும் பெண்ணையும் தண்டிக்க முடியாது. மெக்காலே 1860இல் இந்தச் சட்டத்தை முதன்முறையாக வரைந்தபின் எந்தவொரு முற்போக்கான திருத்தமும் ஏற்படவில்லை. இந்தக் குற்றத்தை, ஆண், பெண் என்று பாராமல் பொதுவாகக் கருதவேண்டும் என்று கூறியிருக்கும் 1971ஆம் ஆண்டின் 42வது சட்ட அறிக்கை மற்றும் 2003ஆம் ஆண்டு மல்லிமத் குழு அறிக்கை ஆகியவற்றின்படி இந்தச் சட்டம் திருத்தப்படவேண்டும் என்ற பரிந்துரைகள் செயல்படுத்தப் படாமலேயே உள்ளன. இது மட்டுமல்லாமல் கடந்த பல ஆண்டுகளாக பல நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகளின்படி இது அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டதாகவே கருதப்படுகிறது. இந்த நிலைமை சமீபத்தில், உச்சநீதிமன்றத்தில், இந்திய அரசுக்கு எதிரான ஜோசப் ஷைன் வழக்கில், அரசியல் அமைப்புக்குப் புறம்பானது என்று தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து மீண்டும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதை விசாரித்த அமர்வு, தற்போதுள்ள இந்த எண்ணம், இரு பாலினத்தவருக்கும் பொதுவானதாக இல்லாமல், கணவனின் ஒப்புதல் அல்லது ஒத்துழைப்பு என்பதைக் குறியிடுவதால் இது, பெண்களுக்கு எதிராகவும் மிகவும் புரையோடிவிட்ட ஒரு நிலைமையாகவும் காணப்படுகிறது என்று கூறியது. ஆனால், இந்தியாவில் திருமணங்களுக்கு உண்டான தார்மீக மதிப்பை உணரும் போது, பிரிவு 497 திருமணம் என்ற நிகழ்வை ஆதரித்துப் பாதுகாப்பதால் இந்தப் பிரிவை செல்லாது என்று அறிவித்தால் திருமணத்திற்கு அளிக்கப்படும் மேன்மையான இந்திய உணர்வு பாதிக்கப்படும் என்று மத்திய அரசு கூறியது. இதில், ஆச்சரியமூட்டும் விஷயம் இந்து திருமணச் சட்டம் 1955இன்படி திருமண உறவைத் தாண்டி உடலுறவு கொள்வது ஒரு குற்றமாகவும், திருமணத்தை முறித்துக்கொள்வதற்கான ஆதாரமாகவும் கருதப்பட்டது. இந்தச் செயலை ஆண், பெண் இருவருக்கும் பொதுவான ஒரு நிகழ்வான கருதுவதற்கு முன் இதை ஒரு கிரிமினல் குற்றமாகக் கருதவேண்டுமா? அல்லது திருமண உறவை முறிப்பதற்கான

ஆதாரமாக மட்டுமே கருதவேண்டுமா? என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

உச்சநீதிமன்றம் விவாதித்த மற்றொரு செயல் தலாக் என்று மூன்றுமுறை வாய் வார்த்தையாகக் கூறி திருமண உறவை முறிப்பது பற்றியதாகும். இந்தச் செயல்பாடு, இஸ்லாமியர்களின் தனிப்பட்ட சட்டத்தின் ஒரு பகுதியா என்பதுகூட நீதிமன்றத்தின் முன் விளங்கியது. தலாக், தலாக் தலாக் என்று ஒரே சமயத்தில் மூன்று முறை கூறுவதன் மூலம் ஒரு இஸ்லாமிய மனிதன் தன் மனைவியை தன்னிச்சையாகவும், நிரந்தரமாகவும் விவாகரத்து செய்யும் முறை பெரும்பாலும் ஹனாஃபி வகுப்பு எனப்படும் சன்னி இஸ்லாமியர் இடையே பழங்காலம் தொட்டு இருந்துவருகிறது. தற்போது இந்த முறையில், இஸ்லாமியப் பெண்களை இஸ்லாமிய ஆண்கள் குறுஞ்செய்தி மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ மூன்று முறை ஒரே சமயத்தில் தலாக் தலாக் தலாக் என்று கூறி விவாகரத்து செய்துவிடமுடியும். இதனால் இஸ்லாமிய மகளிர் பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். அழுத்தம் காரணமாகவோ, கோபத்திலோ ஒருவர் தலாக் கூறியது சரியானது மற்றும் செயல்படக்கூடியது என்று நீதிமன்றங்கள் இதற்கு முன்பு கூறியுள்ளன (அனிஷா கத்துன் எதிராக ரஷீத் அஹமத் AIR 1932 pc 25) இந்தச் செயல்முறை மூலம் விவாகரத்து பெறுவதற்கு ஒரே ஒரு ஷரத்துதான் அவசியம் - கணவன் வயது வந்தவராகவும் புத்தி சுவாதீனமுள்ளவராகவும் இருந்திருக்கவேண்டும். இந்த வார்த்தைகளை அவர் மனைவியிடம் நேரடியாக கூறப்படாத நிலையில் கூட அது மனைவிக்கு தெரியவந்தவுடன் செயல்படும். (மொய்தீனுக்கு எதிராக பத்தாயி-1968 KLT 763). ஆனால், உத்திரபிரதேச அரசு, மற்றவர்கள் ஆகியோருக்கு எதிரான ஹீனா மற்றும் மற்றவர்களின் வழக்கில் (2017(1) RCR (civil) 313) அலஹாபாத் உயர்நீதிமன்றம் ஒருவர் தகுந்த காரணங்கள் இல்லாமலும், தலாக் என்று கூறுவதற்கு முன்பாக இரண்டு சமாதான முயல்வர்களின் சமரச நடவடிக்கைகள் மேற்கொள்ளாத நிலையிலும் தலாக் கூறினால் அது விவாகரத்தாகாது என்று கூறியது. இதே தீர்ப்பைதான் உத்திரபிரதேச அரசு, பிறருக்கு எதிரான ஷமீன் ஆரா வழக்கில் உச்சநீதிமன்றமும் கூறியது. (AIR 2002 SC 3551) ஆகவே, மூன்று முறை தலாக் கூறுவதுகூட சிந்திக்காமல் மறுபரிசீலனை இல்லாத வகையில் செய்யப்பட முடியாது. பாகிஸ்தான் உள்ளிட்ட பல பெரும்பான்மையான இஸ்லாமியர்கள் வாழும் நாடுகளும் இந்த முறையை ஒழித்துவிட்டன. இந்தியாவில் இறுதியாக 2017இல் மும்முறை தலாக் செயல்பாட்டின் அரசியலமைப்பு சட்ட ஏற்பு இந்திய அரசு, மற்றவர்கள் எதிரான ஷாபானு வழக்கில் உச்சநீதிமன்றத்தின் முன் வந்தது (2017 9SCC1). முத்தலாக் அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பானது, தன்னிச்சையானது மற்றும் பிரிவு 14க்கு எதிரானது என்று மூன்றுக்கு இரண்டு என்ற பெரும்பான்மையுடன் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், முத்தலாக் அரசியல் சாசன சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னும் பாலின சமத்துவம் இந்தியாவில் உள்ளதா என்ற கேள்வி தொடர்ந்து வருகிறது. பிறவகையான தலாக் முறைகளில் விவாகரத்தை சட்டபூர்வமாக அல்லாத பிற வழியில் இஸ்லாமிய ஆண்கள் மேற்கொள்வது இன்னமும் உள்ளது. டிசம்பர் 2017இல் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட இஸ்லாமியப் பெண்கள் (திருமணம் சார் உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2017 முத்தலாக்கை தண்டிக்கப்படக்கூடிய, பிணையில் வெளிவரமுடியாத குற்றமாக அறிவித்தது. அது, மக்களவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாநிலங்கள் அவையில் உள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு, தற்போதுள்ள வடிவத்தில் பிரச்சினையற்றது என்று கூறமுடியாது. இதை, தண்டிக்கப்படக்கூடிய குற்றமாக கூறுவது இஸ்லாமிய ஆண்களுக்கு உகந்த நிலைமையா? இந்திய



தண்டனைச் சட்டம் 1860இன்படி திருமணம் சார்ந்த குற்றங்கள், மனைவிக்கு உடல் அளவிலான தீங்குகள் விளைவிக்காத நிலையில் அவை தண்டனைக்குண்டான குற்றமாகக் கருதப்படுவதில்லை, இது சார்ந்த வழக்குகளை பாதிக்கப்பட்டவர் மட்டுமே தொடர முடியும் என்ற நிலை உள்ளது. முத்தலாக்கை தண்டிக்கப்படக்கூடிய குற்றமாக ஏற்றுக்கொண்டால் மனைவி வழக்கு தொடுக்காத நிலையிலும் ஒரு இஸ்லாமிய ஆணை தண்டிக்கமுடியும். இந்த சட்ட முன்வடிவு இஸ்லாமியப் பெண்களின் உரிமையைப் பாதுகாக்க நினைக்கும் அதே நேரத்தில் இஸ்லாமிய ஆண்களின் உரிமைகளை பாதிக்கக்கூடும்.

பெண்களின் சொத்துரிமை ஆகியவைகூட நீதிமன்றங்களின் ஆய்வுகளுக்கும், தீர்ப்புகளுக்கும், சட்டத்திருத்தங்களுக்கும், சட்ட வடிவங்களுக்கும் உட்பட்டு வருகின்றன. இந்து மரபுரிமைச் சட்டம் 1956இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்குப் பின் கூட்டுக் குடும்பத்திலுள்ள ஒரு பெண்ணுக்கு தன் பெற்றோர் மற்றும் தன் கணவனின் பெற்றோர் சொத்துக்களில் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இதற்குமுன்பு, அவர்களுடைய வாரிசு உரிமை ஒரு அளவுதான் இருந்தது. ஒரு பெண், தன்னுடைய சமூகத்திற்கு வெளியே திருமணம் செய்துகொண்டால் பழங்குடியினர் சட்டங்களின் கீழும், மதம் சார்ந்த பல சட்டங்களின் கீழும் சொத்துக்களை மரபுரிமையாகப் பெறுவது தடைசெய்யப்பட்டிருக்கிறது. சோட்டா நாக்பூர் குத்தகைதாரர் சட்டம் 1908இன்படி தங்கள் சமுதாயத்திற்கு வெளியே திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் தங்களுடைய பெற்றோரின் சொத்துக்களின் மீதான உரிமையை இழப்பார்கள். இதுபோலவே, பார்சி சட்டத்தின் அடிப்படையில் ஒரு பார்சி பெண் வேறொரு சமூகத்தில் திருமணம் செய்து கொண்டால் அவர் தன் மத உரிமையை இழந்து, பெற்றோரின் சொத்து மீதான உரிமையையும் இழக்கிறார். ஒரு பார்சி ஆண் வேறு சமுதாயத்தில் திருமணம் செய்து கொண்டாலும், அவருடைய குழந்தைகள் பார்சியாகவே இருப்பார்கள். ஆனால், ஒரு பார்சி பெண் பிற சமூகத்தில் திருமணம் செய்துகொண்டால் அவரின் குழந்தை பார்சியாக இருக்க முடியாது. ஒரு பார்சி பெண் பிற சமூகத்தில் திருமணம் செய்து கொண்டால் அவர் “அமைதித்தூண்” இல் நடக்கும் தன் பெற்றோரின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளமுடியாது. இதுபற்றி கூல்ருக் குப்தா என்ற பார்சி பெண் குஜராத் உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில் ஒரு பார்சி பெண் பிற சமுதாயத்தில் திருமணம் செய்து கொண்டபின் பார்சி மதப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளமுடியாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ஏனெனில், கிறிஸ்துவ பார்சி அல்லது ஜூடாய் உள்ளிட்ட எல்லா மதங்களிலும் ஒரு பெண் யாரைத் திருமணம் செய்து கொள்கிறாரோ அவருடைய மதத்தின் அடையாளத்தையே பெறுகிறார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் தன் பழங்காலப் பழக்கவழக்கங்களை ஒதுக்கிவைத்து பார்சி அறக்கட்டளை அந்தப்பெண் அமைதித்தூணுக்குச் சென்று தன்னுடைய பெற்றோரின் இறுதி சடங்கில் கலந்து கொள்ளலாம் என்று ஏற்றுக்கொண்டது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஒரு பார்சி ஆண் வேறு சமூகத்தில் திருமணம் செய்யும் போது, அவருடைய மத அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் போது ஏன் பெண்ணுக்கு அந்த உரிமை கிடையாது? ஒருவரை மணந்து கொள்வதால், ஒரு பெண் தன்னை அடமானம் வைத்து மதம் உள்ளிட்ட தன்னுடைய அடையாளங்கள் அனைத்தையும் இழந்து விடுகிறாரா என்ற கேள்விகளை எழுப்பியது.

தற்போது, இந்தியாவில், கற்பழிப்புகள் மிக அதிக அளவில் நடப்பதால் நீதி மன்றங்களும், சட்டமன்றங்களும் குறுக்கீடு செய்து பல திருத்தங்களுக்கு வழிவகை செய்துள்ளன. இந்திய தண்டனைச் சட்டம் 1860இன் பிரிவு 375, கற்பழிப்பு என்பதை புணர்ச்சி என்ற மிகவும் குறுகிய பார்வையில மட்டுமே கவனித்தது. நிர்பயா கூட்டுக் கற்பழிப்புக்குப் பின் குற்றவியல் (திருத்தம்) சட்டம் 2013இல் கற்பழிப்புக்கு எதிரான சட்டம் இயற்றப்பட்டதற்கு பின்புதான் புதிய விளக்கம் விரிவாக்கப்பட்டு உட்புகுதல், பொருள்களை உள்ளே செலுத்துதல் ஆகியவைகளும் சேர்க்கப்பட்டன. அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேரில் நான்கு பேருக்கு உச்சநீதி மன்றம், 2018இல் மரண தண்டனையை உறுதி செய்தது. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், வயது வராதவர் என்பதால் அவருடைய செயல் மிகவும் கொடியதாக இருந்தும் மூன்று வருடங்களுக்குப்பின் அவர் விடுவிக்கப்பட்டார். ஏனெனில் அவர், குற்றம் நடந்தபோது, 18 வயதிற்கு ஒரு சில மாதம் குறைவாகவே இருந்தார். இந்த நிகழ்வுக்குப் பிறகு, வயதுக்கு வராதவர்கள் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 இயற்றப்பட்டு ஏழாண்டுகள் சிறைதண்டனை பெறும் அளவிற்கான கொடிய குற்றங்களை 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் செய்யும்போது, அவர்களை வயது வந்தவர்களாகக் கருதி விசாரிக்கவேண்டும் என்று சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.

கத்துவா கூட்டுக் கற்பழிப்புக்குப் பின் குற்ற நீதி (திருத்தம்) அவசர சட்டம் 2018 குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று அதன் அடிப்படையில் கற்பழிப்புகள், குறிப்பாக 16 வயதிற்கு குறைவான பெண்களுக்கான கற்பழிப்பு வழக்கில் தண்டனையின் அளவு அதிகமாக்கப்பட்டது. இதில், நாம் கவனிக்க வேண்டிய விசித்திரமான நிலைமை என்ன வென்றால், இந்தத் திருத்தத்திற்குப் பின்பும் திருமணமான தம்பதியரில் மனைவி 15 வயதிற்கும் குறைவாக உள்ளவராக இருந்தால் அது கற்பழிப்பாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இந்தச் செயல் ஏன் குற்றமாகக் கருதப்படவில்லை என்பதற்குக் கூறப்பட்டதற்கான காரணம், இதனால் சமுதாயத்தில் திருமணம் என்ற நிலைப்பாடு பாதிக்கப்படும் என்பதாகும்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முன்னுரையில் “இந்திய மக்களாகிய நாங்கள் இந்தியாவை ஒரு இறையாண்மை மிக்க சோசலிச மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசாக உருவாக்குகிறோம்” என்று கூறப்பட்டிருக்கிறது. மதச்சார்பின்மை என்றால் எல்லா மதங்களையும் அரசு ஒரே விதத்தில் பரிசீலிக்கிறது என்று பொருள். மதச்சார்பின்மையின் உண்மையான வெளிப்பாடு எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான சிவில் சட்டம் மூலம் அவர்களுடைய தனிப்பட்ட செயல்பாடுகள் உணரப்பட வேண்டும். இந்தியாவில் பலதரப்பட்ட தனிநபர் சட்டங்களின் கீழ் வெவ்வேறு வகையான அணுகு முறைகள் இருப்பதாலும், அவர்களுக்கு ஆண், பெண் சமத்துவ நிலைமை அளிப்பதில் இன்னும் நீண்ட பயணம் தேவைப் படுவதாலும், எல்லோருக்குமான ஒரே மாதிரியான சிவில் சட்டம் தேவைப்படுகிறது. அரசியல் சாசன சட்டம் பிரிவு 14இன் படி, தனி நபர் சட்டங்களைத் தவிர மற்ற எல்லா சட்டங்களும் - குற்றவியல், சிவில் சட்டங்கள் அனைத்தும்- எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கவேண்டும். தற்போது, பெண்கள் அதிகமாக நீதிமன்றங்களுக்கு சென்று தங்களுடைய அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கக் கோரி வரும் நிலையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனிநபர் சட்டங்கள் ஏற்படும் வகையில், எல்லோருக்கும் பொதுவான சிவில் சட்டம் இயற்றுவதில் சாத்தியக்கூறுகளைப் பற்றி ஆராயுமாறு சட்டக்கமிஷன் பணிக்கப்பட்டுள்ளது. எல்லோருக்கும் பொதுவான சிவில் சட்டம் எப்படி இருக்கவேண்டும் என்று இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் பிரிவு 44 (அரசுக் கொள்கை எப்படி அமையவேண்டும்) அரசுக் கொள்கையின் கட்டளைக்கோட்பாடு விளக்குகிறது. “இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குடிமக்களுக்கும் ஒரே மாதிரியான சிவில் சட்டம் இயற்ற சிவில் சட்டம் கிடைக்கும்படி அரசு முயற்சிக்க வேண்டும்.” என்று கூறுகிறது. நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 44 வெற்று வார்த்தையாகவே இருப்பது மிகவும் கவலையளிக்கிறது. ஷாபானு பேகம் மற்றும் பிறருக்கு எதிரான அகமத் கான் வழக்கில் (AIR 1986 SC 945) எந்த ஒரு சமூகமும் பெருந்தன்மையுடன் இதை நாங்கள் விட்டுக்கொடுக்கிறோம் என்று முன் வர வாய்ப்பில்லாத நிலையில் சட்டம் இயற்றக்கூடிய தகுதி படைத்த அரசே, எல்லோருக்கும் பொதுவான சிவில் சட்டத்தை தன் குடிமக்களுக்குத் தர வேண்டிய பொறுப்பில் உள்ள அரசே இதைச் செய்யவேண்டும்.




அரசியலமைப்புச் சட்டம் அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்றால் எவ்வளவு தொல்லைகள் இருந்தாலும் இது தொடர்பாக நாம் முயற்சிக்க வேண்டும். இந்திய அரசுக்கு எதிரான சரளா முத்கல் (1995 SCC 3 635) வழக்கில் எல்லோருக்கும் பொதுவான சிவில் சட்டத்தின் தேவை பற்றி மீண்டும் விவாதிக்கப்பட்டது. ஆனால், இந்தியா போன்ற பலவகையான பண்பாடுகளையும், பலவகையான பகுதிகளையும் ஜாதிகளையும் கொண்ட நாட்டில் எல்லோருக்கும் பொதுவான சிவில் சட்டம் இயற்றவது கடினம் தான். அப்படிச் செய்யும்போது, சிலரது மத சுதந்திரம் உறுதி செய்யப்பட்டிருப்பதை பாதிக்கக்கூடியதாக அது இருக்கலாம். எப்படிப்பட்ட முற்போக்கான கொள்கையாக இருந்தாலும் மக்கள் ஏற்றுக்கொள்ளாத போது, அவர்கள் மீது அதனைத் திணிக்கமுடியாது.

இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளில் சட்டம் சார்ந்த சீர்திருத்தங்களின் தேவையை இந்தியா உணர்ந்துள்ளது. புரையோடிப்போன சட்டங்களை மாற்றியமைப்பதற்கு உச்சநீதி மன்றமும் ஆதரவான நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனாலும் கூட, சமுதாயத்தில் பெண்களுக்கு சமமான நிலைமையை நாம் வழங்க இன்னும் தொலைதூரம் செல்ல வேண்டியுள்ளது.

- கீதா லுத்ரா, மத்திய அரசின் மூத்த சிறப்பு வழக்கறிஞர்.

# பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் தமிழ்நாட்டில் ஒரு இயக்கமாக செயல்பட்டுவரும் சுய உதவிக்குழுக்கள்

- கண்ணகி பாக்கியநாதன்

சுய உதவிக்குழுக்கள் வங்காளதேசத்தில்தான் முதன் முதலில் 1975ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. கிராமிய வங்கியின் முஹமது யூசுப் என்பவர்தான் இதனை ஆரம்பித்து வைத்தவர். தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) இந்தியாவில் சுய உதவிக் குழுக்களை 1986-87 இல் துவக்கி வைத்தது. அதுவரையிலும் இந்தியாவின் கிராமப்புறங்களில் நிறுவனக்கடன் வசதிகள் உருவாகியிருக்கவில்லை. சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்ட பிறகு இந்த வசதி இந்தியாவின் கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக சுய உதவிக் குழுக்கள் ஒரு இயக்கமாக பரிணமித்து தேசத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்கு பங்காற்றிவருகின்றன. இந்தியாவின் ஊரகப்பகுதிகளில் நிலவிய பரஸ்பர உதவியும், நம்பிக்கையும் சுய உதவிக்குழுக்களின் அடிப்படை எனக் கொள்ளலாம்.

சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் பெரும்பாலும் பெண்களாகவே இருப்பதால் தேசத்தின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு அதிகரித்து வருகிறது. தங்கள் குடும்பங்களின் பொருளாதார நிலைமையை உயர்த்திக் கொள்வதற்கு சுய உதவிக் குழுக்கள் துணை செய்கின்றன. பெண்கள் அதிகாரம் பெறுவதற்கு நிச்சயமாக இது உதவி இருக்கிறது. பெண்களின் சமுதாய நிலையை நிர்ணயிக்கும் ஒரு கூறாக இப்போது இது உள்ளது. மக்கள்தொகையில் பெண்கள் சரிபாதியாக இருப்பதால் சுய உதவிக்குழுக்கள் மூலமாக உருவாகிவரும் பெண்களின் பொருளாதார சக்தி சமூக, பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கைகளைத் திட்டமிடுவதற்கு



அரசாங்கத்தை நிர்பந்தித்து வருகிறது. இதன் மூலம் பெண்கள் எல்லா வகையான பணிகளிலும் ஈடுபட வழி பிறக்கிறது.

சுய உதவிக் குழுக்கள் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த பெண்களோடு தொடர்புடையுதாக இருக்கிறது. பெண்கள் ஆண்களுக்கு கீழ்ப்படிந்தவர்களாக இருப்பதால் அவர்களைக் கீழிருந்து மேலுயர்த்தி, பெண்பாலருக்கு முக்கியத்துவம் வாய்ந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கு சக்திமிக்க ஆயுதமாக சுய உதவிக்குழுக்கள் இருந்து வருகின்றன. பெண்களின் சுய சார்பையும், உள்ளாற்றலையும், மாற்றம் காண்பதற்கேற்ற தெரிவுகளைச் செய்யும் திறத்தையும் சுய உதவிக்குழுக்கள் அதிகரித்துள்ளன.

சுய உதவிக்குழுக்களை வலுப்பெறச் செய்வதன் மூலம் தனி நபர்கள், குடும்பம், சமூகம், கூட்டுச் செயல்பாட்டின் மூலம் வளர்ச்சி ஆகிய பல்வேறுவிதமான பலன்களைப் பெறமுடியும்.

சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் ஒரே மாதிரியான சமூகப் பொருளாதாரப் பின்புலத்தைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். வறுமை ஒழிப்பிற்கும், நிதிசார் உள்ளடக்கல், பெண்கள் அதிகாரம் பெறுதல் ஆகியவற்றிற்கு சுய உதவிக்குழுக்களும், நுண் நிதியமும் இப்போது சக்திமிகுந்த ஆயுதங்களாக மாறி வருகின்றன.

குழு அணுகுமுறை, சமாளிக்கக்கூடிய அளவில் இருக்கும் சிறு சிறு குழுக்களிடையேயான பரஸ்பர நம்பிக்கை, சிக்கன சேமிப்பு உணர்வு, தேவையின் அடிப்படையில் கடன் வழங்குதல், பிணையம் இல்லாத கடன், ஏழைகளுக்கு உகந்த வகையிலான கடன்கள், கடன்களைத் திரும்பச் செலுத்தவேண்டும் என்று உடன் இருப்பவர்கள் தரும் அழுத்தம் , திறன் பயிற்சி, ஆற்றல் பெருக்கம், அதிகாரமளித்தல் ஆகியவை சுய உதவிக்குழுக்களின் அடிப்படைக் கொள்கைகளாகும். வறுமை ஒழிப்பு, பல்வேறு வளர்ச்சி செயல்பாடுகளில் நிதி சார் உள்ளடக்கல் ஆகியவற்றிற்கு இந்தியாவில், சுய உதவிக்குழுக்களின் திட்டங்கள் புகழ்மிக்க நடை முறைகளாக ஆகியிருக்கின்றன.

**சுய உதவிக்குழுக்களும் பெண்கள் அதிகாரம் பெறுதலும்**

வறுமை ஒழிப்பிற்கும், அனைத்துவிதமான பொருளாதார வெற்றிகளுக்கும் முக்கியமான திறவுகோல் பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பதாகும். சுய உதவிக் குழுக்கள் பெண்கள் சுய சார்பைப் பெற உதவுகின்றன. சுய உதவிக் குழுக்கள் நிதிசார் உள்ளடக்கலுக்கு தனித்துவமான அணுகுமுறையை அளித்துவருகின்றன. சுய உதவிக் குழுக்களும், நுண் நிதி அமைப்புகளும் ஏழைகளுக்கு உதவியாக இருக்கின்றன. பெண்கள் கடன்கள் பெறுகிறார்கள், சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், நுண் காப்பீடுகளில் முதலீடு செய்கிறார்கள், பணப்பரிமாற்றச் சேவைகளை மேற்கொள்கிறார்கள்.

சுய உதவிக்குழு உறுப்பினர்கள் நுண்கடன் மேலாண்மையிலும், சந்தைப்படுத்துதலிலும் அதிகமான அளவில் ஈடுபட்டுவருகிறார்கள். பாலின சமத்துவத்தை உருவாக்குவதற்கு பெண்கள் பொருளாதார சுதந்திரம் உடையவர்களாகவும், தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் இருத்தல் அவசியம் என்று தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா கூறியுள்ளார்.

கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழைப் பெண்கள் தாங்களாகவே முன்வந்து ஒரு குழுவாக உருவாகி உறுப்பினர்களின் வறுமையைப் போக்குவதற்காக உழைக்கின்றனர். இதுவே சுய உதவிக்குழுக்கள் உருவாகும் விதமாகும். தொடர்ச்சியாக சேமித்து, அந்த சேமிப்பை ஒரு பொது நிதியாக மாற்றுவதற்கு ஒப்புக்கொண்டு அவர்கள் செயல்படுகிறார்கள். இது குழு தொகுப்பு நிதி என அறியப்படுகிறது.

**பின்வரும் விரிவான வழிகட்டுதல்கள் களின்படி குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.**

சுய உதவிக்குழுவில் பத்து முதல் இருபது உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

பாலைவனங்கள், குன்றுகள், சிறு அளவில் மக்கள்தொகை உள்ள பகுதிகள், மாற்றுத் திறனாளிகள் ஆகிய நிலைமைகளில் ஐந்து முதல் இருபது உறுப்பினர்கள் வரை இருக்கலாம். இதுபோன்ற நிகழ்வுகளில் மாநில அளவிலான சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும், பொருளாதார உதவி அளிக்கும் ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுவரோஜ்கார் யோஜ்னா (SGSY) என்ற அமைப்பிடம் உறுப்பினர் எண்ணிக்கை குறைவுக்கு தளர்வு பெறுவதற்கு அனுமதி பெறவேண்டும்.

பொதுவாக குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வறுமைக்கோட்டிற்கும் கீழ் உள்ள

குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். குழுவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அதிகபட்சம் இருபது சதவீதம் பேரும், விதிவிலக்கான நேர்வுகளில் அதிகபட்சம் முப்பது சதவீதம் பேரும் வறுமைக்கோட்டின் விளிம்புக்கு நெருக்கமான நிலையில் உள்ளவர்களாக இருக்கவேண்டும். இதனை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களாகிய உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். வறுமைக்கோட்டின் விளிம்புக்கு நெருக்கமான நிலையில் உள்ள உறுப்பினர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள உறுப்பினர்கள் முடிவுகள் எடுப்பதில் தீவிரமாக பங்கேற்க வேண்டும். வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள உறுப்பினர்களின் கைகளில் முடிவுகள் எடுப்பதை முழுமையாக ஒப்படைத்து விடக்கூடாது. வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள உறுப்பினர்கள் அந்தக் குழுக்களின் குழுத்தலைவர் களாகவோ, துணைத் தலைவராகவோ, பொருளாளராகவோ இருக்கக்கூடாது.

**ஒவ்வொரு சுய உதவிக்குழுவிற்கும் நடத்தை ஒழுங்குமுறைகள் இருக்கின்றன:**

அ) இவர்கள் அடிக்கடி கூட்டங்களை நடத்தவேண்டும் (வாரந் தோறுமோ, இருவாரங்களுக்கு ஒருமுறையோ).

ஆ) இவர்கள் ஜனநாயக வழிமுறை களின்படி நடந்து கொள்ள வேண்டும்.

இ) கருத்துக்கள் தடங்கலின்றி பகிர்ந்துகொள்ளப்படவேண்டும்.



ஈ) முடிவெடுக்கும் வழிமுறைகளில் பங்கேற்கவேண்டும்.

உ) ஒவ்வொரு கூட்டத்திலும் நடைபெறுபவை பற்றிய குறிப்புகளை எடுக்கவேண்டும்.

தொடர்ச்சியான சேமிப்புகளின் மூலம் தொகுப்பு நிதியை உருவாக்கவேண்டும். உறுப்பினர்களிடமிருந்து, தாமாக முன்வந்து அளிக்கும் ஒரு குறைந்தபட்ச தொகை தொடர்ச்சியாகப் பெறப்பட வேண்டும். இப்படி வசூலிக்கப்படும் தொகை பிறகு சேமிப்பாகவும், தொகுப்பு நிதியாகவும் ஆக வேண்டும். இந்த நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கப்படவேண்டும்.

குழுக்கள் தங்களுக்குரிய நிதி ஒழுங்குகள், கடன் வழங்கும் நடைமுறைகள், கடனைத் திரும்பச் செலுத்தும் கால அளவுகள், பிணையமில்லாக் கடன், வட்டி விகிதம் ஆகியவற்றை உருவாக்கிக் கொள்ளவேண்டும். உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் பங்கேற்பு முறையில் முடிவுகள் எடுக்கும் வழிமுறைகள் அமையவேண்டும்.

சுய உதவிக் குழுக்கள் தங்கள் பகுதியில் உள்ள வங்கியில் கணக்கு தொடங்கவேண்டும். நடவடிக்கைக் குறிப்புப்புத்தகம், வருகைப்பதிவேடு, கடன் தொகைப் பதிவேடு, பொதுவான பதிவேடு, பண வரவு செலவுப் புத்தகம், வங்கிக் கணக்குப்புத்தகம், உறுப்பினர்களின் வங்கிக்கணக்குப் புத்தகங்கள் ஆகியவை பராமரிக்கப்படவேண்டும்.

பொது நிகழ்ச்சிகள், விழாக்களுக்கு உணவு சமைத்து வழங்குதல், பூத்தையல், தோல் பொருள்கள், தையல், நெசவு, மண் பொருள்கள் செய்தல், கொசுவர்த்திச் சுருள், மீன்பிடிவலைகள், மோட்டார் வைண்டிங், சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் ஆகியவை சுய உதவிக்குழுக்களின் செயல்பாடுகளில் சிலவாகும்.

உடல் நலச் சேவைகள், தலைமைப் பயிற்சி, விழிப்புணர்வு பயிற்சிகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழில் பயிற்சி, வேலை வாய்ப்பு வழங்கல் ஆகிய உதவிகள் சுய உதவிக்குழுக்களுக்கு கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

- முனைவர். **கண்ணகி பாக்கியநாதன்** (ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி), தலைவர், தமிழ்நாடு பெண்கள் ஆணையம்.

# மகளிர் மேம்பாட்டிற்கான தமிழ்நாடு அரசின் திட்டங்கள் ஒரு பார்வை

- வே. அமுதவல்லி



மக்கள் தொகையில் ஐம்பது சதவிகித பங்கு வகிக்கும் மகளிர், சமுதாயத்தில் சமநிலை இன்மை, ஊட்டச்சத்துக் குறைபாடு, சமூகப் புறக்கணிப்பு ஆகியவற்றை அன்றாடம் சந்தித்து வருகின்றனர். இந்தக் குறைபாடுகளைக் களைந்து பெண்களை முன்னேற்றப் பாதையில் செலுத்த வேண்டியது அரசின் முக்கியமான பொறுப் பாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு அரசு, பெண்களுக்கு சுய அதிகாரம் மற்றும் சம வாய்ப்பு வழங்குவதில் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

தமிழ்நாட்டில் சமூக நலத்துறை மூலம் செயல் படுத்தப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு முக்கிய திட்டங்கள், குழந்தைத் திருமணம், பெண் சிசுக்கொலை ஆகிய கொடிய வழக்கங்களை ஒழித்து மாநிலத்தில் பாலின சமன்பாடு ஏற்படுத்துவதற்கும், பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்தவும் உதவி வருகிறது.

### தொட்டில் குழந்தைத் திட்டம்

பெண் சிசுக்கொலையைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக 1992 ஆம் ஆண்டு தொட்டில் குழந்தைத் திட்டம் துவங்கப்பட்டது. வறுமை, ஆண் குழந்தையை விரும்பும் மனப்பாங்கு, பெண் குழந்தைகளின் பாதுகாப்புப் பிரச்சினைகள், பெண் குழந்தைகளின் திருமணச்செலவுகள், பிற கலாச்சார நடைமுறைகள், குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளைப் பராமரிக்க ஏற்படும் சிரமங்கள் உள்ளிட்ட பல காரணங்களினால் பெண் சிசுக்கொலை நடைபெறுகிறது. பெற்றோரால் நிராகரிக்கப்படும் இந்தக் குழந்தைகள் அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மற்றும் காப்பகங்கள் மூலம் பெறப்பட்டு, பின் உரிய வகையில் தத்து கொடுக்கப் படுகின்றனர்.

### பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

பெண் குழந்தைகளின் நிலையை சமூகத்தில் உயர்த்தும் நோக்கத்துடன் 1992ஆம் ஆண்டு முதல் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிகளில் பெண் குழந்தைகள் குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயில ஊக்குவித்தல், 18 வயதுக்கு பிறகே திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினை பெண் குழந்தைகளிடமும், பெண் குழந்தைகளைப் பெற்றவர் களிடமும் ஊக்குவித்தல், இரண்டு பெண் குழந்தைகள் பிறந்த உடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள பெற்றோரை ஊக்குவித்தல், பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரத்தினை வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை, அல்லது இரண்டு பெண் குழந்தைகளுடன் பெற்றோர் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து இருந்தால் அப்பெண் குழந்தை(களின்)யின், பெயரில் ரூபாய் ஐம்பதாயிரம் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. மேற்படி வைப்புத்தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு, அந்தக் குழந்தை பதினெட்டு வயதை நிறைவடையும் சமயத்தில், அந்தக் குழந்தையின் மேற்படிப் பிற்கோ அல்லது திருமணத்திற்கோ பயன்படும் வகையில் அந்தக் குழந்தைகளுக்கு முதிர்வுத் தொகை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் நாற்பத்து ஐயாயிரம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். இந்தத் திட்டத்திற்கென தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் 140 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துவருகிறது.

### பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம் பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம் திட்டம்

பாலினப் பாகுபாடு அடிப்படையில் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிந்து, பெண் குழந்தைகள் கொல்லப்படுவதைத் தடுத்து அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்து, அவர்கள் கல்வி கற்பதை மேம்படுத்துவது ஆகியவை இந்த திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

பிறப்பின் போதான பாலின விகிதத்தை உயர்த்துதல், கர்ப்பம் சார்ந்த பதிவுகளை முதல் மூன்று மாதங்களுக்குள் பதிவு செய்வதை உறுதிசெய்தல், உயர்நிலைப் பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகப்படுத்துதல், பெண் குழந்தைகள் பயன் படுத்தத்தக்க கழிப்பிடங்களை உருவாக்குதல், மகப்பேறுக்கு முந்தைய பரிசோதனை நுட்பங்கள், சட்டத்தை முறையாக செயல் படுத்துவதன் மூலம் கருவின் பாலினத்தை அறிந்து சொல்வதைத் தடுத்தல் ஆகிய உத்திகள் இந்தத் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டம் இளம் வயது புதுமணத் தம்பதியர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வளரிளம் பருவத்தினர், தனியார் மருத்துவ மனைகள், பஞ்சாயத்து அமைப்புகள், சுய உதவிக்குழுக்கள் என பல தரப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து பெண் குழந்தையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் செயல் பட்டுவருகிறது.

### குழந்தைத் திருமணத் தடைச் சட்டம்

இந்தியாவில் பெண்களுக்கு 18 வயதும், ஆண்களுக்கு 21 வயதும் திருமணத்திற்கான சட்டப்பூர்வ வயதாக உள்ளது. இந்த வயதுகளுக்கு முன்பாக நடைபெறும் எந்தத் திருமணமும் குழந்தைத் திருமணம் என்று கருதப்படுகிறது. குழந்தைகளின் அடிப்படை உரிமைகளான சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி போன்றவற்றை உறுதி செய்யும் நோக்கத்துடன் இந்தச் சட்டம் சமூக நலத்துறை மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

### திருமண நிதி உதவித் திட்டம்

பெண் கல்வியை ஊக்கு விக்கும் விதத்திலும், பெண் குழந்தைகளைப் பெற்றுள்ள பெற்றோரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் வகையிலும் இந்தத் திருமண நிதிஉதவித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழைப்பெண்களின் திருமணம், கலப்புத்திருமணம் செய்து கொள்வோர், விதவை மறுமணம், விதவை மகள் திருமணம், ஆதரவற்ற பெண்களுக்கான திருமணம் ஆகியவற்றுக்காக அரசின் சார்பில் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. பட்டதாரிப் பெண்களாக இருப்பின் 50,000 ரூபாயும் எட்டு கிராம் தங்க நாணயமும், பட்டதாரி அல்லாத பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பெண்கள் திருமணம் செய்து கொள்ளும் போது 25,000 ரூபாயும், எட்டு கிராம் தங்க நாணயமும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பெண்கள் இந்தத் திட்டங்களின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

### இலவச தையல் எந்திரம் வழங்கும் திட்டம்

விதவைகள், கணவனால் கைவிடப்பட்டப் பெண்கள், பொருளாதாரத்தில் நலிவடைந்த பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோர் சுயமாகத் தொழில் செய்து தங்களின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவியாக சமூக நலத்துறை மூலம் இலவசமாக தையல் எந்திரங்கள் வழங்கப்பட்டுவருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் மூவாயிரம் பெண்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் பயன் பெற குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

### மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

தமிழ்நாடு அரசு பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை பெண்களின் மேம்பாட்டிற்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்திவருகிறது. சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டில், 98 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களும், ஒருங்கிணைந்த

குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்கள் மூலம் 75000க்கும் அதிகமான மகளிர் பயன் பெற்று வருகின்றனர். இவர்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்வதற்காக, பள்ளிக்குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடை வழங்கும் திட்டம் சங்க உறுப்பினர்களின் மூலமாக தைத்து வழங்கப்படுகிறது. மேலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பயனடையும் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான இணை உணவினைத் தயாரிக்கும் பணியில் இந்தப் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் அவர்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

**அரசு சேவை இல்லங்கள்**

சென்னை, கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் பொருளாதார ரீதியாக பின்தங்கி உள்ள பெண்கள், கணவனால் கைவிடப்பட்டப் பெண்கள், விதவைகளுக்குப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புடன் கூடிய கல்வியை உறுதிசெய்யும் பொருட்டு, தமிழக அரசால் சேவை இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதாரம், மருத்துவ வசதிகள் ஆகியவை அளிக்கப்பட்டு வருகிறது.


இங்கே வசிப்பவர்களின் திறனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு தொழிற்கல்வியும் வழங்கப்பட்டுவருகிறது. ஆங்கிலத்தில் பேசுவதற்கான பயிற்சி, கணினிப் பயிற்சி, வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டிப்பயிற்சி ஆகியவை இந்தப் பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் அரசு சேவை இல்லங்களில் படித்து முடித்த பெண்கள் உயர்கல்வி கற்க ஊக்குவிக்கும் வகையில், தொழில் கல்வி பயின்றிட 50,000 ரூபாயும், பட்டப்படிப்பு அல்லது பட்டயப் படிப்பு படிக்க ஆண்டு ஒன்றுக்கு 30,000 ரூபாயும் வழங்கப்படுகிறது.

**பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்**

பணிபுரியும் பெண்கள் வேலை நிமித்தமாக வீட்டை விட்டு வெளியே சென்று தங்க வேண்டிய நிலையில், குறைந்த வாடகையில் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் அவசியமாகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, மாநிலம் முழுவதும், 18 மாவட்டங்களில் 28 தங்கும் விடுதிகளை நடத்திவருகிறது. சென்னையில் 25,000 ரூபாய் மாத வருமானம் பெறும் மகளிரும், பிற மாவட்டங்களில் 15,000 ரூபாய் வருமானம் பெறும் மகளிரும், இந்த விடுதிகளில் தங்கி பயன்பெறலாம். சென்னையில் விடுதியில் தங்க 300 ரூபாயும் பிற மாவட்டங்களில் தங்க 200 ரூபாயும் மாத வாடகையாக வசூலிக்கப்படுகிறது. உணவு, மின்சாரம் போன்ற பிற செலவுகள் உள்ளுறைவோர்களால் பகிர்ந்து கொள்ளப்படும்.

**ஸ்வதார் இல்லங்கள்**

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், பொது இடத்தில் பல்வேறு தாக்குதல்களுக்கு ஆளான பெண்கள் ஆகியோர் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்குத் தேவையான வசதிகளை வழங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்வதார் இல்லங்கள் மத்திய, மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இவர்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதிகளுடன் கூடிய தற்காலிக இருப்பிடம் வழங்குவதுடன், இவர்களின் பொருளாதார நிலையைப் புனரமைக்கும் வகையில் தொழில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர, உளவியல் ரீதியான ஆலோசனைகளும், அரசுத்துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது. காவல்துறை, மருத்துவத்துறை, மாவட்ட சட்ட உதவி மையங்கள் மூலமாக அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும். தமிழ்நாட்டில் 38 ஸ்வதார் இல்லங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பயன் பெற்று வருகின்றனர்.




**சகி - ஒரு நிறுத்த மையம் (One Stop Centre)**

மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்த ஒரு நிறுத்த மையம், தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில் பணிபுரியும் இடங்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் திட்டமாகும். உடல் ரீதியாகவோ, பாலியல் ரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வயது, ஜாதி, மதம், கல்வித் தகுதி, திருமண நிலை, கலாசாரம், இனம் என்ற எந்த விதமான பாகுபாடும் இன்றி உதவியும் நிவாரணமும் அளிக்கும் உன்னதத் திட்டம் இதுவாகும்.

இத்திட்டம் சென்னையில் 2017 முதல் முன்னோடியாக செயல் படுத்தப்பட்டது. இந்த ஆண்டில், இது மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், காஞ்சிபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### பெண்களுக்கான நலச் சட்டங்கள்

பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், அவர்களின் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் தமிழ்நாடு அரசு பல சமூக நலச் சட்டங்களை செயல்படுத்திவருகிறது. அவற்றுள் வரதட்சணைத் தடுப்புச் சட்டம் 1961, குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005, பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2013, மகளிர் மற்றும் குழந்தை களுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்களை ஒழுங்கு முறைப்படுத்தும் சட்டம் 2014 ஆகியவை முக்கியமானவை ஆகும்.

### குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005

சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பங்களில் பெண்கள் வசிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இந்தச் சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், தனது கணவர், கணவரை சார்ந்து அதே வீட்டில் வசித்து வரும் பிற ஆண்கள் மீது வழக்கு தொடரவும், நிவாரணம் பெறவும் வழிவகை செய்யப் பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் பெண்கள் மட்டுமே மனு செய்யமுடியும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிடவும், நீதித்துறை நடுவர்களுக்கு வழக்கு விசாரணையில் உதவி செய்யவும் பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மனுதாரருக்கும் எதிர் மனுதாரருக்கும் இடையே வேறு குற்றவியல் அல்லது சிவில் நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருந்தாலும், இந்தச் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறமுடியும். நீதிமன்றத்தில் மனுக்கள் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் வழக்கினை முடிக்கவேண்டும். நீதிமன்றத்தில் வாதிட அவரால் வழக்கறிஞரை நியமனம் செய்ய முடியாத சூழ்நிலையில், பாதுகாப்பு அலுவலர் அல்லது சட்ட உதவி மையம் மூலமாக இலவசமாக வழக்கறிஞரை நியமனம் செய்து கொள்ளமுடியும்.

### வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961

இந்தச் சட்டம் 1961 இல் இயற்றப்பட்டு, 1989 இல் திருத்தம் செய்யப்பட்டு, 2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு விதிகளை உருவாக்கியுள்ளது. இந்தச் சட்டத்தைச் செயல்படுத்த அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களும் நியமிக்கப்பட்டு உள்ளனர். திருமணம் முடிந்த ஏழு ஆண்டுகளுக்குள் கணவனோ, அல்லது அவரைச் சார்ந்தவர்களோ, அந்தப் பெண்ணை பொருளாதார ரீதியான வசதிகளைக் கேட்டுத் துன்புறுத்தும் செயல் இந்த சட்டத்தின் கீழ் கண்காணிக்கப்படும். இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள், சமூக நல அலுவலர்களால் விசாரிக்கப்பட்டு காவல்துறைக்கும் நீதி மன்றத்திற்கும் அறிக்கையாக அனுப்பப்படுகிறது.

### பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தடுப்பு, தடை மற்றும் தீர்வுச் சட்டம் 2013

பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தடுப்பு, தடை மற்றும் தீர்வுச் சட்டத்தை 2013ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் 10 பணியாளர்களுக்கு மேல் பெண்கள் பணிபுரியும் அலுவலகங்களில் உள்ளகப் புகார்க் குழு ஒன்று அமைக்கப்படுவதை சமூக நல அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும். பத்துக்கும் குறைவான பணியாளர்கள் இருப்பின், மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் தலைமையிலான கண்காணிப்புக் குழுவின் முன் புகார் தெரிவிக்கலாம். பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு இணைய தளம் மூலமாகவும் (www.shebox.nic.in <http://www.shebox.nic.in>) புகார் தெரிவிக்கலாம்.

### அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்

பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் குறைக்கும் நோக்கத்தில், 1992ஆம் ஆண்டு நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப் பட்டன. தற்போது தமிழ்நாட்டில் உள்ள 1867 காவல் நிலையங்களில் 200 அனைத்து மகளிர் காவல் நிலையங்களாக செயல்படுகின்றன. இது தவிர ஒவ்வொரு காவல் நிலையத்திலும், ஒரு சார் ஆய்வாளரும், இரண்டு பெண் காவலர்களும் இருக்கவேண்டும் என்ற நடைமுறையும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பெண்களுக்கான சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் படுவதுடன் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும் முடியும்.

### குடும்ப ஆலோசனை மையங்கள்

தமிழ்நாட்டில் 1984 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதிஉதவியுடன் 61 குடும்ப ஆலோசனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் புழல் மற்றும் வேலூர் சிறை வளாகங்களிலும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் சிலவற்றிலும் இயங்கிவருகின்றன.




வரதட்சணைக் கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கத்தால் ஏற்படும் பிரச்சினைகள், ஆகியவற்றுக்கு ஆலோசனை மூலம் தீர்வு காண்பதே இந்த மையங்களின் நோக்கம் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 6000 நபர்கள் இந்த மையங்களின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

**பெண்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்**

தமிழ்நாடு அரசு எப்போதுமே பெண்களின் மேம்பாட்டினை கருத்தில் கொண்டே செயல்பட்டு வருகிறது. பள்ளியில் குழந்தைகள் சேர்வதை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில், குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் 1982 இல் கொண்டுவரப்பட்டது. தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தின் கீழ் 43,205 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திலும் மூன்று பணியாளர்கள் வீதம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பணியாளர்கள் இந்த மையங்களில் பணி புரிந்துவருகின்றனர். இந்தப் பணியிடங்களில் பெண்களை மட்டும் நியமனம் செய்யவேண்டும் என்ற அரசாணை பிறப்பித்ததன் மூலம் பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு பெரிதும் உதவியுள்ளது. இது போலவே தமிழகத்தில் செயல்பட்டு வரும் 54,439 அங்கன்வாடி மையங்களிலும், ஒவ்வொரு மையத்திற்கும் இரண்டு பணியாளர்கள் வீதம் மேலும் ஒரு இலட்சம் பணியிடங்கள் பெண்களுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**இணை உணவு வழங்குதல்**

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார் களுக்கு ஊட்டச்சத்து சார்ந்த பல்வேறு செயல்பாடுகள் மூலம் தமிழகத்தை ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலம் என்ற நிலையை அடையச் செய்வதற்கு அரும் பெரும் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்திவருகிறது. பயனாளி களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்காக, ஆறு முதல் அறுபது மாதம் வரையிலான குழந்தைகள், பள்ளிசெல்லா வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு அங்கன் வாடிமையங்கள் மூலம் இணை உணவு வழங்கப்படுகிறது.

**தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்**

சமுதாயத்தில் பெண்கள் தன்னுரிமை பெறும் வகையில் பணிக்குச் செல்லும் சமயத்தில், அவர்களின் சிறு குழந்தைகளை பாதுகாப்பாகப் பராமரிக்கும் வகையில் காப்பகங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பயிற்சி பெற்ற பணியாளர்கள் மூலம் காலை முதல் மாலை வரை குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றனர். ஒரு நாளைக்கு மூன்று வேளைஉணவு வழங்கப்படுவதுடன், அவர்களின் தசை மற்றும் மூளை வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு கேளிக்கை (Joyful Learning) மூலம் கற்பிக்கும் கல்வியும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் இத்தகைய 944 காப்பகங்கள் செயல்பட்டு வருகிடுன்றன.

**டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்**

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தவும், அவர்கள் பணிக்கு செல்லாமல் இருப்பதால் அவர்களின் குடும்பத்திற்கு ஏற்படும் நிதிஇழப்பினை சீர்செய்யவும் இந்தத்திட்டம் தமிழ்நாடு அரசால் 1987ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கர்ப்பிணிப் பெண்கள் சத்தான உணவினை உட்கொள்வதை உறுதி செய்ய, ரூபாய் பதினெட்டாயிரம் நிதி உதவியாக தற்போது அளிக்கப்பட்டு வருகிறது. இது கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து அளிப்பதுடன் அவர்களின் குழந்தைகளுக்கு அனைத்து தடுப்பு ஊசிகளையும் உரிய நேரத்தில் போடுவதை உறுதி செய்வதற்கும் பயன்படுகிறது.

**விலை இல்லா சானிட்டரி நாப்கின் வழங்குதல்**

பள்ளிக்குழந்தைகள் பருவம் அடைந்த பின் இடைநிற்றலைத் தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு

அரசு இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. பள்ளியில் பயிலும் பெண் குழந்தைகளுக்கு சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டம் கடந்த ஆறு ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இது தவிர, நாப்கின் விற்பனை மையங்களும், பயன்படுத்திய நாப்கின்களை பாதுகாப்பாக எரிக்கும் இன்சினரேட்டர் கருவிகளும் அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் அமைக்கப் பட்டுவருகிறது. இதன் மூலம் பெண்கள் உயர் கல்வி கற்றலை உறுதி செய்யமுடியும்.

**அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்**

பணிபுரியும் மகளிரின் பயண நேரத்தைக் குறைக்கவும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திலும், அவர்கள் தடை இன்றி வெளி உலகத்தில் வேலை செய்யவும் ஏற்ற வகையில் 50 சதவிகித மானியத்துடன் இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் மகளிர் பயனடைவார்கள். இதற்காக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.**

கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு ஆகியவற்றின் மூலம் பெண்கள் சமூக, பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு மூலம் நிறுவப்பட்டது. இந்த நிறுவனத்தில் உள்ள 6.5 இலட்சம் சுய உதவி குழுக்களில் உள்ள 98 இலட்சம் உறுப்பினர்கள் மூலமாக வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பலவற்றை செயல்படுத்துகின்றது. சுய உதவிக் குழுக்களுக்கு சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி, முறையான கணக்குப் பதிவேடுகளைப் பராமரித்தல், ஒன்று கூடி முடிவெடுத்தல், வங்கிக்கடன் பெற்றுத்தருதல் ஆகியவற்றில் பயிற்சி அளித்து, அவர்கள் பொருளாதார மேம்பாடு அடைய வழி வகுத்து வருகிறது. சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அதிகபட்சம் பத்து இலட்சம் ரூபாய் வரை மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில், 4 சதவீத வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) மூலம் கடன் கொடுக்க தமிழ்நாடு அரசு வழி வகுத்துள்ளது.

**பெண்களுக்கு விலை இல்லா கால்நடைகள் வழங்கும் திட்டம்**

தமிழ்நாடு அரசு மூலம் ஆண்டு ஒன்றுக்கு 60,000 கறவை மாடுகள் வழங்கும் திட்டம் கால்நடைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இந்தப் பயனாளிகள் முழுக்க முழுக்க பெண்களாக இருக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. 40,000 ரூபாய் மதிப்பிலான கறவைப் பசு ஒன்று ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட்டுவருகிறது. பயனாளிகளைத் தேர்வு செய்ய கிராம அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. இது போலவே ஒரு இலட்சம் மகளிருக்கு, நான்கு ஆடுகள் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்தகைய திட்டங்கள் பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த பெரிதும் உதவி வருகின்றன.

**மீனவப் பெண்களுக்கான சிறப்பு திட்டம்.**

மீன் விற்பனையில் ஈடுபட்டு வரும் பெண்கள் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் ஒன்பது மாதங்களுக்கு செலுத்தி வந்தால், அந்தப் பணத்துடன் தமிழ்நாடு அரசு மேலும் 1800 ரூபாய் சேர்த்து, மீன் பிடித் தடைக்காலம் அமலில் இருக்கும் மூன்று மாத காலத்தில், ஒவ்வொரு மாதமும் 900 ரூபாய் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

**பெண்களுக்கான ஓய்வூதியம்**

விதவை மற்றும் ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்டப் பெண்கள், 50 வயதுக்கு மேற்பட்ட திருமணம் ஆகாத முதிர் கன்னியர் ஆகிய நலிவடைந்த பிரிவினருக்கு அரசு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் ஓய்வூதியமாக வழங்கிவருகிறது. இது தவிர ஆண்டுக்கு இரு முறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகையின் போது இந்த பயனாளிகளுக்கு ஒரு சேலை வழங்கப்படுகிறது. இத்தகைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆதரவற்ற பெண்களுக்கு தேவையான பாதுகாப்பையும் குறைந்த பட்ச தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பயன்படுகின்றன.

**அரசியலில் பெண்களின் பங்களிப்பு**

பெண்கள் சமுதாய அளவிலும் பொருளாதார ரீதியிலும் மட்டும் மேம்பாடு அடைந்தால் போதாது என்ற எண்ணத்தில் பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டு அவர்கள் உயர்ந்த நிலையை அடையவேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருகிறது. இதற்காகவே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்பு களுக்கும் தேர்தல் நடத்தபடும் பொழுது, அதில் 50 சதவிகித

இடங்களை பெண்களுக்கு என்று ஒதுக்கீடு செய்து 2016இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது பெண்களின் மேம்பாட்டிற்கு உதவும் மற்றொரு முயற்சியே.

**அரசு சார்பில் வழங்கப்படும் விருதுகள்**

குழந்தைகள், பெண்கள் ஆகியோரின் மேம்பாட்டிற்காக சிறந்த சேவை புரியும் ஒரு மகளிருக்கு ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தன்று அவ்வையார் விருது தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு இலட்சம் ரூபாய் பணத்துடன் பத்து கிராம் தங்க நாணயம், மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கப்படும். இது தவிர, சிறந்த சமூக சேவை செய்த பதினெட்டு வயதுக்குட்பட்ட பெண் குழந்தைக்கு தேசிய பெண் குழந்தைகள் தினமான ஜனவரி 24 அன்று விருது வழங்கப்படுகிறது. இதில் ஒரு இலட்சம் ரூபாய் பணமும் பாராட்டுப் பாத்திரமும் வழங்கப்படுகிறது. சிறந்த சமூக சேவை செய்த ஒரு நபருக்கும், வீர தீர செயல் புரிந்த ஒரு நபருக்கும் கல்பனா சாவ்லா பெயரில் தமிழ்நாடு அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்டு வருகிறது. இது போன்ற விருதுகள் சமூகத்தில் சேவை செய்ய பெண்களை ஊக்குவிக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

**முடிவுரை**

ஐக்கிய நாடுகளின் சபையில் நிலையான, நீடித்த வளர்ச்சிக்கான ஐந்தாம் குறிக்கோள் மகளிர் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அந்த வழியில், தமிழ்நாட்டில் வசிக்கும் மகளிர் ஒவ்வொருவரும், தனது சொந்த வாழ்விலும், குடும்பச்சூழலிலும், சமுதாயத்திலும் ஏற்படும் பல்வேறு சமூகப் பொருளாதார சிக்கல்களை தன்னம்பிக்கையுடன் எதிர்கொண்டு, சமுதாய மாற்றத்தைக் கொண்டு வர தமிழ்நாடு அரசு பல அரிய திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

கருவில் இருக்கும் பெண் குழந்தைக்குப் பாதுகாப்பு கொடுப்பதில் ஆரம்பித்து, பெண் கல்வியை ஊக்குவித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து, சொந்தத் தொழில் புரிய விரும்புபவருக்கு கடன் உதவி அளித்து, அவர்களின் திருமண சமயத்தில் தாலிக்குத் தங்கம் கொடுத்து, பெண்களுக்கு எதிராக சமுதாயத்தில் ஏற்படும் வன்முறையை ஒடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்து, வயது முதிர்வினால் தளரும் பொழுது ஓய்வூதியம் கொடுத்து உதவிக்கரம் நீட்டவும் என பல்வேறு திட்டங்கள் பெண்கள் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் மேம்பட உதவி வருகிறது. இத்தகைய திட்டங்களின் செயல்பாட்டினால், பெண்களைப் போற்றும் தமிழகம் இந்தியாவில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

- **வே. அமுதவல்லி,** சமூக நலத்துறை ஆணையர், தமிழ்நாடு அரசு.

## பெண் சக்தி விருது

மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு அமைச்சகம் **பெண்கள் சக்தி விருது (நாரி சக்தி புரஸ்கர்)** 2018க்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. இந்தியாவில் பெண்களுக்கு வழங்கப்படும் உயரிய விருது இது. பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்காக அயராது பாடுபடும் பெண்களுக்கும், நிறுவனங்களுக்கும் இந்த உயரிய விருது வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச பெண்கள் தினத்தன்று குடியரசுத் தலைவர் பெண்கள் சக்தி விருதினை வழங்கி கௌரவித்து வருகிறார். இந்த ஆண்டு 19வது ஆண்டாகும். சமூகத்திற்காக சிறந்த பங்களிப்பை வழங்கிய பெண்களுக்கு, சமூகத்தில் தங்களுக்கென தனி அடையாளத்தை உருவாக்கி, பெண்களுக்கு நிலையான நிதி இருப்பை உறுதி செய்வது போன்ற செயல்களில் ஈடுபட்ட பெண்களை இந்த விருது அங்கீகரிக்கிறது.

1999ஆம் ஆண்டு முதல் பெண்கள் சக்தி விருது வழங்கப்படுகிறது. தடைகளை மீறி சாதித்து, இதற்கு முன் ஆய்ந்தறியப்படாத துறைகளில் தடம் பதித்து சமூகத்திற்கு நிரந்தரமான பங்களிப்பை அளித்த சிறந்த பெண் சாதனையாளர்களின் தரவை நாங்கள் உருவாக்கியுள்ளோம். இந்த ஆண்டும் சமூகத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காக சிறந்த பங்களிப்பை வழங்கிய பெண்களும், நிறுவனங்களும் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று மத்திய பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி. மேனகா சஞ்சய் காந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான விண்ணப்பங்களை அக்டோபர் 31, 2018 வரை சமர்ப்பிக்கலாம். தேவையான ஆவணங்களுடன் துணை செயலர் (டபிள்யு டி & ஐ.சி.), மத்திய பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம், அறை எண்.632, 6வது மாடி, சாஸ்திரி பவன், புதுதில்லி 110001 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். விருது குறித்த விதிமுறைகளை http://www.wcd.nic.in/award என்ற இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு www.pib.nic.in என்ற இணையதளத்தை அணுகலாம்.

## செய்தித்துளிகள்

இந்திய அஞ்சலகப் பணப் பரிவர்த்தனை வங்கியை பிரதமர் திரு. நரேந்திர மோடி 01.09.2018 அன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், இந்திய அஞ்சலகப் பணப் பரிவர்த்தனை வங்கி மூலம், நாட்டின் மிகவும் தொலைதூர இடங்களில் வாழ்கின்ற மக்களுக்கும், வங்கிச் சேவைகள் எளிமையாக சென்றுசேரும் என்றார்.

அனைவரையும் உள்ளடக்கிய நிதிச்சேவையை உருவாக்க ஏற்கெனவே ஜன்தன் எனும் மக்கள் நிதித்திட்டத்தை மத்திய அரசு தொடங்கியதை அவர் நினைவுக்கூர்ந்தார். இந்த நோக்கத்தை நிறைவேற்ற மேலும் ஒரு நடவடிக்கையாக இந்திய அஞ்சலகப் பணப்பரிவர்த்தனை வங்கி தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த வங்கியின் கிளைகள் நாட்டிலுள்ள 650 மாவட்டங்களிலும் திறக்கப்படுகின்றன.

புதிய தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைந்துள்ள போதும், அஞ்சல் ஊழியர்கள் மீதான நம்பிக்கை அப்படியே உள்ளது என்று அவர் கூறினார். தற்போதுள்ள கட்டமைப்புகளையும், நடைமுறைகளையும் சீர்திருத்தி மாறிவரும் காலத்திற்கேற்ப அவற்றில் மாற்றம் செய்வது அரசின் அணுகுமுறை என்றும் அவர் குறிப்பிட்டார். நாடு முழுவதும் 1.5 இலட்சம் அஞ்சலகங்கள் இருப்பதாகவும், அவற்றில் 3 இலட்சம் அஞ்சல் ஊழியர்கள் பணிபுரிவதாகவம், இவர்கள் நாட்டின் மக்களை இணைப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். தற்போது அவர்களுக்கு நவீன செல்பேசிகளையும், டிஜிட்டல் கருவிகளையும் அளித்து நிதிச்சேவைகள் வழங்கும் அதிகாரம் அளிக்கப்படவுள்ளது.

இந்திய அஞ்சலகப் பணப்பரிவர்த்தனை வங்கியின் மூலம் பணப்பரிமாற்றம் செய்யவும், அரசின் பணப்பயன்களை மாற்றிக்கொள்ளவும், கட்டணங்கள் செலுத்தவும், முதலீடு, காப்பீடு போன்ற பிற சேவைகளைப் பெறவும் முடியும். இந்த சேவைகளை அஞ்சல் ஊழியர் வீடுதேடி வழங்குவார். இந்திய அஞ்சலக பணப் பரிவர்த்தனை வங்கியில் டிஜிட்டல் பரிவர்த்தனை வசதியும் உள்ளது. பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் போன்றவற்றுக்கான பயன்களைப் பெற இது உதவும். விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

*****

நாடு தழுவிய அளவில் தேசிய உதவித்தொகை கைபேசி செயலி நுழைவாயிலை (National Scholarship Portal Mobile App) மத்திய சிறுபான்மை நலத்துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி வெளியிட்டர். ஏழைகளும், நலிந்த பிரிவினரும் உதவித்தொகை பெறுவதற்கு சிரமங்கள் இல்லாமல் இதன் மூலம் விண்ணப்பிக்க முடியும். உதவித்தொகை வங்கிக் கணக்கில் நேரடியாக சேர்ப்பிக்கப்படும். உதவித்தொகை வழங்குவதில் தவறுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு இந்த முறை உதவும்.

*****

ஹெச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் சட்டம் ஒன்றை மத்திய அரசு இயற்றியுள்ளது. ஹெச்.ஐ.வி வைரஸ், எய்ட்ஸ் (தவிர்ப்பு, தடுப்பு) சட்டம், 2017 செப்டம்பர் 10, 2018 முதல் அமுலுக்கு வந்திருப்பதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

*****

எத்தனால் விலை நிர்ணயம் மற்றும் மறுசீரமைப்புக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிஹெவி மொலாசஸ் /பகுதி அளவான கரும்புச்சாறு ஆகியவற்றிலிருந்து பெறப்படும் எத்தனாலுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இது 2018 -19 ஆம் ஆண்டு கரும்பு பருவத்திற்கும் 2018 டிசம்பர் 1ஆம் தேதியிலிருந்து 2019 நவம்பர் 30 ஆம் தேதி வரையிலான எத்தனால் விநியோக காலத்திற்கும் இது பொருந்தும்.

*****

இந்தியாவின் வங்கித்துறையில் கடனுக்கான முன்பணம் வழங்குவதில், பாகுபாடு காட்டியதன் காரணமாக எழுந்த பல்வேறு பிரச்சினைகளை, சீர்குலைவுகளைக் கையாள்வதில் 2014 லிருந்து மத்திய அரசு கண்டிப்புடன் உள்ளது என்று பிரதமர் கூறினார். தற்போதுள்ள கடன்கள் மறுஆய்வு செய்யப் பட்டுள்ளன. வங்கித்துறை தொடர்பாக தொழில் ரீதியான அணுகுமுறை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். தலைமறைவு பொருளாதாரக் குற்றவாளிகள்

மசோதா போன்ற நடவடிக்கைகளால் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுவது உறுதியாகும் என்று அவர் தெரிவித்தார்.

*****

சுயவேலை வாய்ப்புகளை உருவாக்க ஏழை, எளியவர்கள் மற்றும் நடுத்தர வகுப்பினருக்கு 13 இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக முத்ரா கடன்கள் வழங்கப்பட்டிருப்பதாக பிரதமர் கூறினார். ஆசிய விளையாட்டுகளில் இந்தியா மிகச்சிறந்த சாதனைகளைச் செய்துள்ளது. இந்தியப் பொருளாதாரம் வெகு சிறப்பான வளர்ச்சியைக் காட்டுகிறது. ஒட்டுமொத்த தேசமும், புதிய தன்னம்பிக்கையால் நிறைந்துள்ளது என்று பிரதமர் தெரிவித்தார். இவையெல்லாம் மக்களின் கூட்டு முயற்சியால் ஏற்பட்ட விளைவுகள் என்று அவர் கூறினார். இந்தியா உலகிலேயே வெகு விரைவான பொருளாதார வளர்ச்சி பெறும் நாடு மட்டுமல்ல, அதிவேகமாக வறுமையை அகற்றிவரும் நாடும் ஆகும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

*****

பிரதமர் தலைமையில் நடைபெற்ற மத்திய பொருளாதார விவகாரத்துறை அமைச்சரவைக் கமிட்டி கூட்டத்தில், திறன்மேம்பாட்டுத் திட்டத்தை 2017-18 முதல் 2019-20 வரையிலான காலத்துக்கு நீடிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான செலவீடு மொத்தம் ரூ. 2,250 கோடியாகும்.

திறன்மேம்பாட்டுத் திட்டம் என்பது புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் (MoSPI) மத்திய திட்டமாகும். கொள்கைவகுக்கும் ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் குறித்த நேரத்தில் நம்பகமான புள்ளிவிவரங்கள் உரியவகையில் கிடைப்பதற்காக போதிய ஆள்பலம், கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப விரிவாக்கம் செய்வதுதான் இதன் ஒட்டுமொத்த குறிக்கோளாகும்.

*****

இந்திய ரயில்வேயில் மின்மயமாக்கப்படாமல் எஞ்சியுள்ள அகல ரயில் பாதைகளை மின்மயமாக்க பிரதமர் தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி 108 பிரிவுகளில் 13,675 கிலோ மீட்டர் தூரமுள்ள ரயில் பாதைகள் ரூ. 12,134.57 கோடி செலவில் மின் மயமாக்கப்படும். இந்தப்பணிகள் 2021-22 வாக்கில் முடிவடையக் கூடும்.

இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.13,510 கோடி எரிபொருள் செலவு மிச்சமாகும். இந்தப் பிரிவுகளில் ரயில்பாதைகள் மின்மயமாவதால் ஆண்டுக்கு ரூ.3,973 கோடி மிச்சமாகும்.

ஆயிரம் கிலோ மீட்டருக்கு ரூ.32.84 என்ற டீசல் என்ஜின்

பராமரிப்புச் செலவோடு ஒப்பிடுகையில் மின்சார என்ஜின் பராமரிப்பு செலவுஆயிரம் கிலோமீட்டருக்கு ரூ.16.45 ஆக குறையும்.

கட்டுமானப் பணிகளின் போதுசுமார் 20.4 கோடி மனிதநாட்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்

*****

2017-18 லிருந்து 2019-20 வரையிலான 12 ஆவது திட்டக்காலத்திற்கு அப்பாலும், மத்திய அரசு ஆதரவிலான ஒருங்கிணைந்த வனவிலங்குகள் இருப்பிட மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தை தொடர்வதற்கு பிரதமர் தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத்திட்டம் மத்திய அரசு ஆதரவிலான புலிகள் பாதுகாப்பு, வனவிலங்குகள் இருப்பிட மேம்பாடு மற்றும் யானைகள் பாதுகாப்புத் திட்டங்களை உள்ளடக்கியதாகும். 2017-18 லிருந்து 2019-20 வரை மத்திய அரசின் பங்காக மொத்த ஒதுக்கீடு ரூ.1731.72 கோடியாகும். (புலிகள் பாதுகாப்புக்கு ரூ.1143 கோடி, வனவிலங்குகள் இருப்பிட மேம்பாட்டுக்கு ரூ.496.50 கோடி, யானைகள் பாதுகாப்புக்கு ரூ.92.22 கோடி).

புலிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், நாட்டில் உள்ள ஐந்து நிலப்பரப்புகளைச் சேர்ந்த மாநிலங்களில் மொத்தம் 18 புலிகள் பாதுகாப்புமையம் இதன் மூலம் பயனடையும். அதேபோல், மற்ற இரண்டு திட்டங்களில் வனவிலங்குகள் இருப்பிடமேம்பாட்டுத் திட்டம் ஒட்டுமொத்த நாட்டை உள்ளடக்கியும், யானைகள் பாதுகாப்புத்திட்டம் யானைகள் அதிகமுள்ள 23 மாநிலங்களை உள்ளடக்கியும் இருக்கும். பொதுவாக, வனவிலங்குகள் பாதுகாப்புக்கு இது முக்கியத்துவம் அளிக்கும் என்றாலும், புலிகள் பாதுகாப்புத் திட்டப்பகுதியில் புலிகளையும், யானை பாதுகாப்புத்

திட்டப் பகுதியில் யானைகளையும் பாதுகாக்கும்.

இந்தத் திட்டங்கள் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் இடையே ஏற்படும் மோதல் பிரச்சினைக்கு தீர்வாக அமையும். மேலும், மத்தியஅரசு ஆதரவிலான புலிகள் பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் புலிகள் இருப்பிடங்களிலிருந்து தாமாக முன்வந்து வேறு இடங்களுக்கு மாறிச்செல்வோருக்கும் (6900 குடும்பங்கள்) மத்திய அரசு ஆதரவிலான வனவிலங்குகள் இருப்பிட மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 800 குடும்பத்தினருக்கும் பயனடையுடையதாக இருக்கும்.

*****

தூய்மைபாரதம் இயக்கம் (கிராமம்) செயல்பாடுகளின் விளைவாக வயிற்றுப்போக்கு, புரதச்சத்துப் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக ஏற்படக்கூடிய 3 இலட்சத்திற்கும் அதிகமான உயிரிழப்புகள் 2014 அக்டோபர்மாதம் முதல் இந்தியாவில் வெற்றிகரமாகத் தடுக்கப்படிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation - WHO) தெரிவித்துள்ளது. கிராமப்புறங்களில் தூய்மை அதிகரித்திருப்பதால் இத்தகைய மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இந்தியாவின் கிராமப்புற சுகாதாரம் 89.07 சதவிகித கிராமங்களைச் சென்று அடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைபாரதம் (கிராமம்) திட்டத்தின் கீழ் 19 மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் வருகின்றன. திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. 7.9 கோடி கழிப்பிடங்கள் புதிதாக இங்கு கட்டப்பட்டுள்ளன. 421 மாவட்டங்களில் 4.9 இலட்சம் கிராமங்களில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அறவே இல்லாமல் நீங்கியுள்ளது.

*****

இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறைக்கான 'தரோஹார்பவன்' என்ற புதிய கட்டடத்தை பிரதமர் புதுதில்லி தீன்மார்க்கில் ஜூலை12, 2018 அன்று திறந்து வைத்தார். கடந்த 150 ஆண்டுகளாக இந்தத்துறை முக்கியமான ஆய்வுப் பணிகளை நிகழ்த்தி வருவதாக பிரதமர் அப்போது கூறினார். நம்முடைய வரலாறு, செழிப்பு மிக்க தொல்லியல் பாரம்பரியம் ஆகியவற்றிற்காக நாம் பெருமைப்பட வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

*****

மாண்பமை அமைப்புகளாக அறிவிப்பதற்காக மத்திய அரசு அளித்திருக்கும் இறுதிப்பட்டியலில் 3 பொதுத்துறை அமைப்புகளும், 3 தனியார்துறை அமைப்புகளும் இடம் பெற்றுள்ளன. பொதுத்துறையில் இந்திய அறிவியல் கழகம் (Indian Institute of Science -IISC), இந்தியத் தொழில் நுட்பக்கழகம் மும்பை (Indian Institute of Technology - IIT), இந்தியத் தொழில் நுட்பக்கழகம், தில்லி ஆகியவை இடம் பெற்றுள்ளன. தனியார் துறையில் ஜியோ நிறுவனம் (ரிலையன்ஸ் அறக்கட்டளை), பிர்லா தொழில் நுட்ப அறிவியல் கழகம், பிலானி, ராஜஸ்தான்; மணிப்பால் உயர் கல்விக்கழகம், கர்நாடகா ஆகிய மூன்றும் இடம் பிடித்துள்ளன.

*****

பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் (நகர்ப்புறம்) இதுவரை 51 இலட்சத்திற்கும் அதிகமான வீடுகள் கட்டித் தருவதற்கு ஒப்புதல் தரப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் செயல்பாட்டில் இருக்கும் கடந்த 3 ஆண்டுகளில் நகர்ப்புறங்களில் ஒரு கோடி வீடுகளுக்கு தேவை இருப்பதாக உறுதி செய்யப்பட்டிருந்தது. முந்தைய காலங்களில் 9 ஆண்டுகாலத்தில் 12.4 இலட்சம் வீடுகளுக்கு மட்டுமே ஒப்புதல் தரப்பட்டுள்ள நிலையில் தற்போது கடந்த மூன்று ஆண்டுகளில் 51 இலட்சம் வீடுகளுக்கு ஒப்புதல் தரப்பட்டிருப்பது மிகப் பெரிய சிறப்பாகும். ஒப்புதல் அளிக்கப்பட்ட 51 இலட்சம் வீடுகளில் 28 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 8 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு விட்டன.

*****

எளிதில் தொழில் செய்வதற்கு உகந்த மாநிலங்களின் இறுதி தர வரிசைப் பட்டியலை மத்திய தொழிலாளர் கொள்கை மற்றும் தொழில் வளர்ச்சித்துறை (DIPP) வெளியிட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, ஹரியானா மாநிலங்கள் இதில் முதல் மூன்று இடங்களில் உள்ளன. ஜார்கண்ட், குஜராத் முறையே 4, 5ஆவது இடங்களில் உள்ளன. உலக வங்கியுடன் சேர்ந்து இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. உள்நாட்டுப் பொருள் போக்குவரத்திற்காக இரண்டு அடுக்கு சிறுகொள்கலன் சேவையை இந்தியரயில்வே தொடங்கியுள்ளது. இதன் மூலம் ரயில்வேக்கு 18.50 இலட்சம்

கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. உள்நாட்டுப் பொருள் போக்குவரத்தில் ரயில்வே இழந்துவிட்ட வர்த்தகத்தை மீட்கும் முயற்சியாகும் இது.

*****

ஆள்கடத்தல் தடுப்பு, பாதுகாப்பு, மறுவாழ்வு மசோதா 2018 நாடாளுமன்ற மக்களவையில் நிறைவேறியது. புலனாய்வில் ஈடுபடவும், இந்த சட்டப்பிரிவுகளை அமல்நடத்தவும் ஆள்கடத்தலைத் தடுக்கும் தனிப்பிரிவு அமைக்கப்படும். இதற்காக தனிநிதி ஒதுக்கீடும் செய்யப்படும்.

*****

கேள்வி முறையின்றி ஆட்களை அடித்துக்கொல்லும் வழக்கத்தை (Lynching) தடுப்பதற்கான யோசனைகளை வழங்குவதற்கென மத்திய உள்துறை செயலாளர் தலைமையில் ஒருகுழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. இதன் அறிக்கை ஒரு மாதத்தில் அரசிடம் அளிக்கப்படும்.

*****

ஜிஎஸ்டி கவுன்சில் 50க்கும் மேற்பட்ட பொருள்களுக்கு வரிகளைக் குறைத்துள்ளது. நாப்கின், ராக்கி, சலவைக்கல், மரத்தாலான தெய்வச் சிற்பங்கள் போன்றவற்றிற்கு வரியில் இருந்து முழுமையான விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 17 பொருள்களுக்கு வரி 28 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

*****

ஜிஎஸ்டி சட்டங்களை எளிமைப்படுத்துவதற்கான சட்டத்திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. வரிக்கணக்கு தக்கல் செயும் படிவங்களை எளிமையாக்கவும், தொகுப்புத் திட்டத்தில் பயன்பெறுவதற்கான விற்று முதல் அளவை 1.5 கோடியாக உயர்த்தவும் இந்த சட்டத்திருத்தங்கள் வகை செய்கின்றன.

*****

ரூ.100 கோடிக்கும் அதிகமாக பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிடும் குற்றவாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கு வகை செய்யும் மசோதா 2018 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தகைய வழக்குகளை விசாரிப்பதற்கு தனி நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

*****

தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் (வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்) திருத்த மசோதா 2018 நாடாளுமன்றத்தால் ஏற்கப்பட்டுள்ளது. இதன்படி, தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு எதிராக வன்கொடுமைச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்கு முன் அனுமதி எதுவும் தேவையில்லை. இத்தகைய வழக்குகளை விசாரிப்பதற்கு தனி நீதிமன்றம் அமைக்கவும் இந்தச் சட்டம் வகை செய்கிறது.

*****

முஸ்லிம் பெண்களுக்கு விவாகரத்து அளிக்கும் முத்தலாக் முறையை பொறுப்பின்றி செயல்படுத்தியதாக குற்றம் நிரூபிக்கப்படும் ஆண்கள் கைதான பிறகு பிணையில் வருவதற்கு வகை செய்யும் சட்டத் திருத்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

*****

தேசிய விளையாட்டுப் பல்கலைக்கழக மசோதா 2018 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி வடகிழக்கு மாநிலம் மணிப்பூரில் தேசிய விளையாட்டுப் பல்கலைகழகம் அமைக்கப்படும். இதன் துணைவேந்தர் விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவராக இருப்பார். கல்விக்குழுவிலும் விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்கள் இடம் பெறுவார்கள். விளையாட்டு கழகங்கள், விளையாட்டு மையங்கள் பற்றிய தகவல்களை அளிக்கும் கைபேசி செயலியை அரசு உருவாக்கி வருவதாகவும், விளையாட்டை வளர்த்தெடுப்பது நம் அனைவரின் பொறுப்புமாகும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் கர்னல். ராஜ்யவர்தன் ரத்தோர் தெரிவித்துள்ளார்.

*****

தொகுப்பு: **த. சித்தார்த்தன்**

**திட்டம் இதழில் வெளியாகிவரும் கட்டுரைகள் பற்றிய உங்களது கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. கடிதங்கள் மூலமாகவோ, editorthittam@yahoo.co.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் கருத்துக்களை அனுப்பிவையுங்கள்.**